நா
656

# ஓவியம் செய்த வேலை

[நாடகம்]

# ஓவியம் செய்த வேலை

[ நாடகம் ]

★

ஆசிரியர் :

T. D. மீனாட்சிசுந்தரம் பி. ஏ., பி. எல்.,

★

**தமிழர் பண்ணை**

மதுரை ரோடு — திருச்சிராப்பள்ளி.



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'

அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு

அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

# நன்றி

ஒரு ஓவியனின் வரலாறு மன்னன் செல்வியின் மடியிலே தவழும் மாருதமாக அமைத்து நாடக உருவிலே தந்திருக்கின்றார் ஆசிரியர் தி. நு. மீனாட்சிசுந்தரம் பி.ஏ., பி.எல். அவர்கள்.

உணர்வு மங்கிக் கிடக்கும் சமுதாயத்தின் மேல் படர்ந்திருக்கும் சாம்பலை நீக்கி உள்ளத்தால் மலரும் காதல் ஓவியனின் கைத்திறனில் கதியற்றுக் கிடக்கின்றது என்பதை விளக்கும் இந்நூலை எழுதிய ஆசிரியருக்கு என் நன்றி.

உள்ளக்கிடக்கை என்ற ஓடத்தை மனித சாகரத்தில் உலவவிட்டு, கடுங் குளிராலும், கற்பாறையாலும், புயல் காற்றாலும், பெரு மழையாலும், கால ரேகைகளை மறைக்கும் கடும் பனியாலும் தோணி சுக்குநூறாகாதிருக்க வழி வகைகள் தேடவும் பெரும்பாலும் நாடகங்களே பயன்படுகின்றன எழுத்துலகில் மிகச் சிரமமான வேலை நாடகங்களை [illegible]துதான். ஏனெனில் அதற்கு அளவுகடந்த சிந்த[illegible], சிந்தனையை சிதரவிடாத நினைவும், அன்று வசிக்கு[illegible] மக்களுடைய பண்பாடும், அவர்கள் உள்ளத்தைக் குலுக்கும் வசனங்களையும், சோர்வுதட்டாதிருக்க இடை இடையே நகைச்சுவையும், நகைச்சுவையின் நுழைவால் கதைக்கோர்வை விடுபட்டுப் போகாமலிருக்கத் தக்கக் கண்காணிப்பும், தேவைப்படுகிறது. அந்த முறையைச் சரிவரக் கையாளப்பட்டிருக்கும் இச் சிறு நாடகத்தைத் தமிழ் பெருமக்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.

திருச்சிராப்பள்ளி,
1—11—'52.

அன்பன்,
**ந. மா. மணி,**
உரிமையாளர் : **தமிழர் பண்ணை.**

# முகவுரை

## 1

ஒருவர் உள்ளத்திலெழும் எண்ணமும் எண்ணம் எழுந்த வேகமும் ஒரு குறித்த செயலுக்குக் காரணமாதல், எதிர்பாராத வகையில் திட்டமிட்ட செயல்கள் முற்றிலும் மாறிக் கலைச்சுவை மிக்க நிலைகளை அடைதல், அந்தச் சுவைமிக்க செயல்கள் வெகு வேகமாக உருண்டு சென்று ஒரு உச்சநிலையை அடைதல்—இவை களே நாடகத்தில் நிகழும் அதிசயங்கள். இவ்வளவு அதிசயங் களையும் திரட்டிக்காட்டக்கூடிய கால அளவு மூன்று மணி நேரம். இக்குறித்த காலத்திற்குள் பல்வேறு குணங்கள் கொண்ட நபர்களின் உரைகளும் அவர்கள் வரும் காட்சிகளுமே சேர்ந்து நாடகமாக உருவாகின்றன. அவர்களில் பெரும் பாலோர், முக்கியமாக தலைவனும் தலைவியும் கலா ரசிகர்களாக இருந்து விட்டால், நாடகத்தில் கலையழகும் காதலும் பரிமளிக் கின்றன. அதுமட்டுமல்ல. நாடகம் பாத்திரங்களின் குண நலங்களை எடுத்துக்காட்டும் சித்திரமாக விளங்குவதோடு கூட ஒருநாட்டின் கலைச்சிறப்பையும் பண்புகளையும் பரப்பி ஒளிவீசும் தீபமாகவும் திகழ்கின்றது.

'ஓவியம் செய்த வேலை' என்ற இந்நாடகத் தலைப்பி லிருந்தே இது ஓவியத்தைத் தழுவிய நாடகம் என்பது வெளிப் படை. நமது முன்னோர் மன்னர்கள் அழகிய கோயிலைக் கட்டி னார்கள். அற்புத சிற்பங்களாலும் வண்ண விக்கிரகங்களாலும் கோயிலின் எழிற் செல்வத்தைப் பெருக்கினர். ஆடல் பாடல் களாலும் அருமைச்சித்திரங்களாலும் காண்பவர் கண்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை ஊட்டினர். இந்த அழகுகளையெல்லாம் பெற்று பார்ப்பவர் அகங்களைக் குளிரச்செய்வதற்குச் சான்றாக தஞ்சைப்பெரிய கோயில் ஒன்றே போதும்! நமது தஞ்சைக் கோயில், சிற்றன்னவாசல், அஜந்தா-இவ்விடங்களில் நமது மன்னர்கள் முயற்சியால் எழுந்த எழில்ததும்பும் சித்திர வேலை

இன்றும் யாவருக்கும் நமது முன்னுள் கலேவளத்தை எடுத்துக் காட்டி இன்பத்தை அருளுகின்றது. அந்தக்காலத்து கலேஞர் களின் அற்புத வேலேயை நினேவூட்டுவதோடல்ல, அவர்களின் ஓவியமாண்பையும், கலேஞர்கள் கலாரசிகர்களாக விளங்கிய அரசர்களோடு வைத்திருந்த நெருங்கிய தொடர்பையும் நமது மனக்கண்களுக்கு முன் கொண்டுவருகின்றது. அத்தகைய மனக்கண் மண்டலத்தில் உருவாகியதே ' ஓவியம் செய்த வேலே" என்ற இந்த நாடகம்.

## 2

### பொருள் :

பேரூரும் புதூரும் இரண்டு முடியரசுகள். பேரூரைக் குமரனும் புதூரை சேகரும் அரசாண்டனர். குமரனின் தங்கை வஸந்தா. சேகரின் தங்கை ரமணி. மணமாகாத இவ்விளம் பருவத்தினர் யாவரும் கலா ரசிகர்கள். புதூர் நாட்டில் பிறந்து ஓவியக்கலேயில் தேர்ந்து சிறப்புற்றவன் மோகன். தன் கைத் திறனல் புதூர் அரச குடும்பத்தின் அன்பைப்பெற்று அரசன் இளவரசி படங்களே எழுதினன். அப்படங்களுடன் பேரூர் நாட்டுக்குச் சென்ருன். அங்கு குமரனின் அன்பைப் பெற்று சமஸ்தான ஓவியக் கலேஞனுக விளங்கினன். பேரூரில் இளவரசி வஸந்தா கைக்கு மோகனிடமிருந்து புதூர் மன்னவன் படம் கிடைத்தது. அரசனுக்குப் புதூர் இளவரசி படம் கிடைத்தது. பேரூர் நாட்டு மந்திரிமகள் புஷ்பாவிற்கு மோகனின் காதல் கிடைத்தது. கிடைத்ததைக் கொண்டு பெருமகிழ்ச்சியடைந் தார்கள் கலா ரசிகர்கள்.

பேரூரில் ராஜம் என்ருெரு தாஸி. அவள் அழகில் அநேக மாக வஸந்தாவை ஒத்திருந்தாள். அவள் ஆடலிலும் பாடலிலும் மனதைப்பறிகொடுத்த பேரூர் மன்னன் அவள் வீசிய மோக வலேயுள் வீழ்ந்தான். அவளழகைத் தீட்ட அற்புதக்கலேஞன் மோகனே அவள் இல்லத்திற்கே அனுப்பிவைத்தான். தாஸியின் கவனம் இப்பொழுது ஓவியக்கலேஞன்மீது சென்றது. ஆனல் மோகன் தாஸிக்கு இணங்கவில்லே. ஒருநாள் தாஸி தன்

ஆசையை மோகனிடம் வெளிப்படுத்தி அவனை அணைக்க முந்தினாள். மோகன் அவளை வெறுத்துப்பேசிக் கிளம்பினான். சூழ்ச்சியே உருவான தாஸி நடந்ததை முற்றிலும் மாற்றி மோகனே தன்னைப் பலவந்தப்படுத்த முந்தினான் என்று அரச னிடம் சொல்லி மோகன் பதவியைப் பிடுங்கினாள்.

ஒருநாள் தாஸி ராஜம் வஸந்தாவின் அறைக்கு வந்தாள். அங்கு புதூர் மன்னன் படம் இருக்கக் கண்டாள். அதோடு வஸந்தா படமும் இருந்தது. முந்தியதைக்கண்டு மயங்கினாள். பிந்தியதைக் கண்டு ஒரு பெரிய திட்டம் வகுக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. புதூர் அரசனுக்குத் தான் எழுதிய ஆசைக்கடிதங் கள் பயனற்றுப் போகவே, தன் படமென்று வஸந்தா படத்தை அனுப்ப உறுதி கொண்டாள். உடனே வஸந்தா அறையில் இருந்த இவ்விரு படங்களும் மறைந்தன. மறைந்த படங்களைக் கண்டுபிடிக்க வஸந்தா தாஸி வேடத்திலும் அவள் தோழி புஷ்பா தாஸியின் தோழி நடிப்பிலும், தாஸி மன்னனுடன் வஸந்த மண்டபத்தில் மகிழ்ந்திருக்கும் பௌர்ணமி இரவில், தாஸி வீட்டிற்கே வந்தார்கள். ஆனால் அவர்கள் தாஸிவீட்டில் கண்டது படத்தையல்ல, புதூர் மன்னனைத்தான். அழகிலும் குணத்திலும் பரிமளிக்கும் தாஸிக்கோலத்திலிருக்கும் வஸந்தா வைக்கண்ட புதூர் மன்னன் மனதைப் பறிகொடுத்தான். அவளை மணம் புரிந்துகொள்வதாகவும் வாக்களித்து அடுத்த பௌர்ணமியில் வந்தழைத்துச் செல்வதாகவும் உறுதி கூறிச் சென்றான்.

நடந்ததை அறிந்துகொண்டாள் தாஸி ராஜம். மறு பௌர்ணமியில் வஸந்தாவையும் மாறு வேடத்தில் வந்த புதூர் மன்னனையும் குமரனிடம் பிடித்துக்கொடுத்தாள். தன் தங்கை யின் இழிவான வேசிப் போக்கைக் கண்டு மனம் துடித்தான் குமரன். பிடிபட்ட புதூர் மன்னனைத் தாஸி வீட்டிலேயே சிறை வைத்தனர். ஆனால் விடியுமுன்பே ராஜம் வஸந்தா நடிப்புநடித்து புதூர் மன்னனை விடுவித்து அவனோடு யாருக்கும் தெரியாமல் புதூருக்கு மறைந்து விட்டாள். புதூர் மன்னன்

சிறைப்பட்டதைக் கண்ட புஷ்பாவும் மோகனும் புதூருக்குப் பறந்து சென்றனர். ஆனால் சிறைப்பட்ட மன்னன் தாம் வருவதற்கு முன் புதூரில் இருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டனர். உண்மையை அறிய மோகன் சேகரிடம் சென்ருன். சேகர் வஸந்தாவைப் பார்த்துவாவென்று மோகனை ராஜத்தினிடம் அனுப்பினுன். வேசியைக்கண்ட மோகன் மோசத்தை விளக்க வாய்விட்டலறினுன். அந்த அலறலே பைத்தியத்தின் பிதற்றல் என்று சேகர் மோகனை முடிவுகட்டவும் நேர்ந்தது. மோகன் அந்தரங்க சிறையிலடைபட்டான்.

மோகன் மறைந்ததைக்கண்டு திகிலடைந்த திக்கற்ற புஷ்பா உண்மையைக் கண்டுபிடிக்க புதூர் இளவரசியிடம் தோழியாக அமர்ந்தாள். இருவர் நட்பும் மிகுந்தது. ஒருநாள் உளம் திறந்து உண்மையைப் புஷ்பா விளக்கினுள். நடிப்பவள் தாஸி என்பதைக் கண்டுகொண்ட ரமணி உண்மையை வெளிப்படுத்த வேண்டிய வேலையில் இறங்கினுள். தலயாத்திரை செய்யப் பிரியப்படுவதாகச் சொல்லி, அண்ணனிடம் அதற்கு வேண்டிய வசதி ஏற்பாடு செய்துகொண்டாள். ரமாமணி நாமத்தோடு பேரூர் நாட்டையடைந்து மந்திரி வீட்டில் எதிர்பாராதவிதமாக பேரூர் குமரனையே சந்தித்தாள். மந்திரியிடம் அரசர் வந்தது அவர் தங்கை விஷயமாக என்பதை அறிந்தாள். மந்திரிக்கு அவர் மகள் நிலையையும் மோகன் நிலையையும் சொல்லி, மோகனைக் காப்பாற்றுவதும் வஸந்தாவைக் குற்றமற்றவள் என்று நிரூபிக்கச் செய்வதும் மந்திரி கையில் இருப்பதை உணர்த்தினுள். மந்திரி உதவிகொண்டு இவை சம்பந்தமான அந்தரங்க விசாரணை புதூரில் நடத்த ஏற்பாடும் செய்தாள். விசாரணைத்தினமே வஸந்தா வேடத்திலிருக்கும் தாஸி புதூர் மன்னனை மணக்கவிருக்கும் நாள். இந்த விசாரணையில் தானும் சம்பந்தப்பட்டிருப்பதால் வழக்கைத் தீர்க்கத் தன் தங்கை ரமணியையே வேண்டிக்கொள்கின்ருன் சேகர். வழக்கில் உண்மை நிரூபிக்கப்படுகின்றது. காதலர்கள் களிப்பெய்துகின்றனர். ஓவியம் செய்த இந்த அற்புத வேலைகளைக் கண்டு யாவரும் வாய்விட்டுப் புகழாமலிருக்க முடியவில்லை.

**இடம் :** இந் நாடகத்தில் முற்பகுதி நிகழ்ச்சிகள் பேரூரிலும் பிற்பகுதி நிகழ்ச்சிகள் பெரும்பாலும் புதூரிலும் நடக்கின்றன.

**காலம் :** இந்நாடகத்தில் நிகழ்வன யாவும் சுமார் ஆறுமாத காலத்தில் நடக்கும் அதிசயங்களேயாகும்.

## 3

மணி மன்றம், தமிழர் பண்ணை எனும் இலக்கியப் பூங்காவைத் தோற்றுவித்து இனிய தமிழ் நூல் மலர்களை அள்ளிக் கொடுக்கும் 'தமிழர் பண்ணை' உரிமையாளர், கலை ஆர்வங் கொண்ட எனது நெருங்கிய நண்பர், உயர்திரு. **ந. மா. மணி** அவர்கள் அன்போடு என் எளிய நாடகத்தை ஏற்று அதை அழகிய முறையில் வெளியிட்டுத் தந்தமைக்கு அவருக்கு எனது அன்பார்ந்த நன்றி. இந்த நாடகம் முழுமைக்கும் ஒப்பு நோக்குதல் முதலிய திருத்தங்கள் செய்து உதவிய எனது அருமை நண்பர் வித்துவான் உயர்திரு. **க. வெள்ளை வாரணர்** (Tamil Research Dept. Annamalai University) அவர்கட்கும் என் அன்பார்ந்த நன்றி. வணக்கம்.

**T. D. மீனாட்சிசுந்தரம்.**

சுபம்

# ஓவியம் செய்த வேலை

## நாடகப் பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| குமரன் | ... | பேரூர் நாட்டரசன் |
| மதிசீலர் | ... | பேரூர் நாட்டு மந்திரி |
| சேகர் | .... | புதூர் நாட்டரசன் |
| மோகன் | .... | புதூர் நாட்டு ஓவியக் கலைஞன் |
| | | |
| வஸந்தா | .... | பேரூர் நாட்டிளவரசி |
| ரமணி<br>ரமாமணி } | ... | புதூர் நாட்டிளவரசி |
| புஷ்பா<br>சரோஜா } | ... | பேரூர் நாட்டு மந்திரி குமாரி |
| ராஜம் | ... | பேரூர் நாட்டு தாஸி |

# அங்கம் I

## காட்சி 1

காலம்: **இரவு** • இடம்: **தோட்டம்**

[*புஷ்பாவும் மோகனும்*]

**மோகன்:** கண்மணி, நான் இந்த நாட்டிற்கு வந்து இரண்டாண்டுகள் ஓடிவிட்டன. என் சொந்த நாடான புதூரைக்கூட மறந்துவிட்டேன். அரச பதவியையும் உன் காதலையும் பெற்று ஓராண்டேயாகினும் எத்தனை அருமையான சித்திரங்களைத் தீட்டிவிட்டேன். வீணையாகிய நீ என் கைக்குக் கிடைத்தபின் நாதமாகிய ஓவியத்திற்கு என்ன குறைச்சல்! என் இன்பத்திற்குத் தான் என்ன குறைச்சல்! உன்னையே நம்பி உயிர் வாழுகின்றேனே. இன்னுமா உன் அப்பாவுக்கு என் மேல் நம்பிக்கை இல்லை.

**புஷ்பா:** நம்பிக்கை இருப்பதால்தானே நாம் இப்படி சந்திக்க முடிகின்றது!

**மோகன்:** அப்படியானல் நாம் இப்படி சந்திப்பதை மதிசீலர் அறிவாரா?

**புஷ்பா:** என் தந்தை ஒரு நாட்டின் மந்திரி என்பதைக் கூடத்தாங்கள் மறந்துவிட்டீர்களா? ஒரு நாட்டின் நடப்புக்கள் மந்திரிக்குத்தெரியாமலா இருக்கும். நான் என் இல்லத்தில் இல்லையென்ருல், ஒன்று நான் இளவரசி வசந்தாவோடிருக்க வேண்டும், அல்லது ஓவிய அரசர் உங்களிடம் இருக்கவேண்டும். இதைத் தெரியாமலா இருக்கின்ருர் என் தந்தை.

(*சிறிது நேரம் மௌனம்*)

**மோகன்:** கண்மணி புஷ்பா, என்ன, திடீரென்று ஆழ்ந்த யோசனையில் இறங்கிவிட்டாய்? இந்த அழகான நிலவு உன்னை அயர்த்திவிட்டதா?

**புஷ்பா:** ஆம் ஸ்வாமி. என் மனதில் பல காட்சிகள் ஒன்றன்பின் ஒன்ருக ஓடுகின்றன. ஒவ்வொன்றைக்காணும் போதும் ஒவ்வொருவிதமான உணர்ச்சி உண்டாகின்றது.

**மோகன்:** இந்தப் பால்மதியா பல எண்ணங்களை உருவாக்குகின்றது?

**புஷ்பா:** ஆம், மோகன்! இந்த வண்ணமதியால் இருமனமொத்த இளம் காதலர்க்கு விவரிக்க ஒண்ணுத இன்பம்!

**மோகன்:** அதற்குச் சான்று நாமல்லவா?

**புஷ்பா:** இந்த மனேகரமான மதியத்தால் எவ்வளவோ தனிமையானவர்களுக்குத் தவிப்பும் கனவுகளும்!

**மோகன்:** உண்மை. இளவரசி வசந்தாவுக்கு இது பொருந்தும். அவள் இதயத்தை மேவிய புதூர்நாட்டு அரசன் படம் இதே நேரத்தில் அவள் மடியில் தவழும். ஆனல் தன் படம் அவள் மடியில் கொலுவிருப்பதைப் புதூர் நாட்டு மன்னன் அறிவானு?

**புஷ்பா:** இந்த தண்ணொளி பரப்பும் நிலவினில் அன்னம் தவழ்ந்து விளையாட வேண்டிய மடியில் பாம்பு படமெடுத்தாடுகின்றது! அதன் ஆட்டத்தில் மயங்கி விடுவதா? அது ஆட்டம் அடங்கிய பின் தருணம் பார்த்தல்லவா வஞ்சிக்கும்.

**மோகன்:** புஷ்பா, இது எனக்கு விளங்கவில்லை.

**புஷ்பா:** இதே நேரத்தில் வசந்தமண்டபத்தில் ஓரிடத்தில் குமரரும் ராஜமும் .... ....

**மோகன்:** (*திடுக்கிட்டெழுந்து*) ஆ, என்ன ? மன்னர் குமரரும் தாஸி ராஜமுமா ? என்றால் நம்பவே முடியவில்லையே.

**புஷ்பா:** இளவரசி வசந்தா இதை என்னிடம் சொல்லும் போதும் என்றால் நம்பமுடியவில்லை. உண்மையில் ராஜம் அவரை மாயவலை வீசித் தன் கைப்பொம்மை யாக்கிவிட்டாள்.

**மோகன்:** கண்ணியமும் குலப் பெருமையும் பெரிதாக மதித்து வந்த நமது மன்னரா வேசி வீசிய வலையில் வீழ்ந்தார். ஆனால் இந்த மயக்கத்திலிருந்து அரசர் சீக்கிரம் தெளிவடையாமலா இருக்க முடியும்.

## காட்சி 2

காலம்: **காலை.** இடம்: **தாசி வீட்டில் ஒரு அறை**

[*ராஜம் கண்ணாடி முன்பு அலங்காரம் செய்துகொண்டிருக்கின்றாள்.*]

**பணிப்பெண்:** அம்மா, வந்துவிட்டார்.

**ராஜம்:** யாரடி, அரசரா ?

**பணிப்பெண்:** இல்லையம்மா. அரசர் அனுப்பிய ஓவியக்காரர்.

**ராஜம்:** ஓ, என் மோகனக் கிளியா ! பறந்து ஓடிவரச் சொல்லடி.

(**மோகன் வருகின்றார்**)

**மோகன்:** வணக்கம், தேவி.

**ராஜம்:** என்ன மோகன், தளர்ச்சி நடை, வாடிய முகம். மந்திரி மகள் உண்டாக்கிய மயக்கம் இன்னும் தெளிய வில்லையா ? அல்லது அவள் தூவிய சொக்குப் பொடி யின் விளைவா உம் உற்சாகமற்ற நிலை?

**மோகன்:** அம்மா, அதெல்லாம் ஒன்றுமில்லை. தங்களைப் பார்த்தால் எங்கேயோ புறப்பட்டுக் கொண்டிருக்கின் றீர் என்று தோன்றுகின்றது.

**ராஜம்:** ஆம், ஆம். நன்ருகச் சொன்னீர்கள். உம்மை அடையத்தான் நான் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். இன்பபுரிக்குப் பயணம் கட்டிக்கொண்டிருக்கின்றேன். என்ன, அசந்து விட்டீர்கள்?

*(மோகன் பதில் கூருது மூலையில் இருக்கும் பூர்த்தியாகாத ராஜத்தின் படத்தை எடுத்து வருகின்ருன்.)*

**ராஜம்:** வந்தவுடனேயே வேலையில் இறங்கிவிட்டீர்களே. வந்த வேலையை மெதுவாக ஆரம்பிக்கலாம். முதலில் என் முகத்தைப் பாருங்கள். என் முகத்தில் என்ன இருக்கின்றதென்பதைக் கண்டு கொண்டீர்களா?

*(மோகன் அதிருப்தியோடு அமர்தல்)*

**மோகன்:** அம்மா, உங்களுக்கும் இளவரசி வசந்தாவுக்கும் இருக்கும் சாயல் ஒற்றுமை சற்று தூரத்திலிருப்பவருக்குத் தங்களை இளவரசிதானே என்றுகூட சந்தேகப்படும்படி செய்யவல்லது.

**ராஜம்:** என்ன கலைஞரே, நானே உங்கள் கேலிப் பொருளாகி விட்டேனே? இளவரசி அழகிற்கு என் அழகு ஈடில்லை என்று சொல்ல நினைக்கின்றீர்களா?

**மோகன்:** அம்மா, நான் அப்படிச் சொல்லவில்லையே. நீங்கள் இருவரும் உயரத்திலும் உரு அமைப்பிலும் அநேகமாக ஒத்திருக்கின்றீர்களென்றே சொல்ல நினைத்தேன்.

**ராஜம்:** ஓகோ, அப்படிக்கூட நினைப்பதற்கு இடமிருக்கின்றதா? நான் இதுவரையில் கண்டுணராத உண்மையையல்லவா எடுத்துரைக்கின்ருய். கலைஞர் கண்களுக்கு இவையெல்லாம் படாமலா இருக்கமுடியும். ஆனல் எட்டி இருந்தால்தான் இந்த ஒப்புமை என்றீர்

களே. அப்படியானால் நான் நெருங்கி இருந்தால் அந்த ஒப்புமை இல்லாமலா ஓடிவிடுகின்றது?

**மோகன்:** அம்மா, இளவரசி முகம் அவரின் இயற்கைக் குணத்தைப்பிரதிபலிக்கின்றது. அன்பு, அறிவு, சாந்தம், அடக்கம், நாணம்—இவைகளெல்லாம் அவர்கள் உருவிலும் திருவிலும் கமழ்கின்றன. புன்னகை என்றும் அவர் முகத்தில் பொலிவுற்று விளங்குகின்றது.

**ராஜம்:** ஓகோ, என்னுடைய முகத்தில் இவைகளுக்குப் பஞ்சமென்று பிதற்றுகிறாய்?

**மோகன்:** அம்மா, இப்போது தங்கள் முகத்தில் தாண்டவமாடும் அழகை என்னென்று சொல்வேன். தங்கள் திடீர் கோபமும் தங்களுடைய கன்னங்களுக்குச் தனிச் சோபையையே கொடுக்கின்றது. உங்கள் கொழுந்துவிட்டு எரியும் கோபாக்கினியும் உங்கள் அழகைப் பன்மடங்கு உயர்த்துவது உங்களுக்கெப்படித் தெரியும்?

**ராஜம்:** மோகன், நானென்ன அவ்வளவு அழகா! நீங்களே என் அழகை மதிப்பிடுகின்றீர்களா? நானென்ன, வசந்தாபோல் அவ்வளவு அழகா?

**மோகன்:** ஏனம்மா, வசந்தாதேவி அழகோடு ஒப்பிடுகின்றீர்கள். அழகை ஒப்பிட்டே மதிக்கமுடியாது. ஆண்டவன் படைத்த அத்தனைப் பொருள்களிலும் அழகு பூத்துப் பொலிவதால்தான், எங்கள் கண்கள் மலர்ச்சியடைகின்றன, உள்ளங்கள் பொங்குகின்றன, கைகள் ஓடுகின்றன. எங்கள் ஓவியமும் பேசுகின்றன. அழியாத இன்பத்தை அருளுகின்றன.

**ராஜம்:** ஆகா, என்ன சாதுர்யமான பேச்சு!

**மோகன்:** அம்மா, இந்தப் பேச்சில் சாதுர்யமொன்றுமில்லை. சித்தன்னவாசல், தஞ்சைக் கோயில், அஜந்தா—இவ்

விடங்களில் கமழும் என்றும் அழியா ஓவியங்களே நான் கூறிய விஷயங்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாகும். தாம் மகிழ்ந்த இன்பத்தை தம் நாடும் மகிழச் செய்த நமது மன்னர்களின் பணியும் இதற்குச் சாட்சியல்லவா?

**ராஜம்:** மோகன், நான் உன்னைப்போல் கெட்டிக்காரத்தனமாகப்பேசமுடியாது, என்னை உன் பேச்சாலேயே சிற்றன்னவாசல் தஞ்சை முதலிய இடங்களுக்கு இழுத்துச் செல்லப் பார்க்கின்ருய். நான் அங்கெல்லாம் சென்று அழகைக் காண இஷ்டப்படவில்லை. இங்கேயே உன்னையே கண்டு உளத்திருப்தி அடைகிறேன். மோகன், நான் உன்போல் கெட்டிக்காரத்தனமாகப் பேச முடியாது. ஆனால் பாடமுடியும். என்னிடம் அகப்பட்டுக் கொண்ட ஒரு பைங்கிளி. அந்தக் கிளிமேல் எனக்கு எவ்வளவு உயிர் தெரியுமா. கேள். நான் பாடுகிறேன்.

**மோகன்:** உங்கள் இஷ்டமம்மா.

*(தன் தோழி தம்பூரா மீட்ட ராஜம் பாடுகின்ருள்)*

பல்லவி

**மோகனக் கிளியே வா வா—என்றன்**
**மோகனக் கிளியே வா வா**

அ. ப.

**வேகமாய் என்னிடம் வாவா**
**வந்துமகிழ்ந்து மடியில் தவழ்ந்திட —(மோ)**

சரணங்கள்

**ஆவியெலாம் உனதாகி என்றன்**
**ஆசையெலாம் உனதாகித்**
**தேவகானமது பொழிவேன் உன்றன்**
**தேவியாகி உனைக்கூடத் துடிக்குமென் —(மோ)**

**தாகமென்றால் கோடி முத்தம்பல**
**தருவேனுன் தேனிதழ் கமழ**
**வேணுமென்றால் இன்ப சுவர்க்கம்**
**விரித்திடுவேன் உவந்தளித்திடுவேன் என்றான்–(மோ)**

**மோகஉலகிலே பறப்போம் இனி**
**முழுகி இன்பக்கடல் குளிப்போம்**
**போக சுகம் அளித்துனையே**
**பாக்யசாலியாக்கும் என்னிடம் பறந்தோடி —(மோ)**

**ராஜம்:** பாட்டு எப்படி, மோகன்?

**மோகன்:** மிகவும் இனிமையான பாட்டு!

**ராஜம்:** அதனுடைய இனிமை எனது மோகனக் கிளியா லல்லவா?

**மோகன்:** அம்மா, எதற்கிந்த வீண் விளையாட்டு.

**ராஜம்:** **(அருகில் வந்து அமர்ந்து)** மோகன்! ஆஹா, உங்கள் அழகிற் கேற்ற பெயர். முகத்திலே பெண்களை வெல் லும் காமனின் கலை: கையிலோ யாரையும் பணியச் செய்யும் ஓவியக் கலை. பிந்தியது அரசனை வென்றது: முந்தியது என் மனதை முற்றிலும் கவர்ந்துவிட்டது.

**மோகன்:** அம்மா, இப்படித் தாங்கள் பேசுவதை அரசர் விரும்பவே மாட்டார். அரசர் இங்கு என்னை அனுப் பியது தங்கள் திரு உருவம் தீட்டவே.

**ராஜம்:** உலக அனுபவம் இல்லாத பிள்ளை! பெண்களைக் கண்டாலே இப்படி நடுக்கமா? மோகன் எதற்காக இப்படி பயப்படுகின்றீர். இங்கு நடப்பது அரசருக்குத் தெரிந்துவிடும் என்ற திகிலா? இங்கு நடப்பது உமக் கும் எனக்குந்தான் தெரியும். அதில் பங்கு நமக்குத் தான்: நம் இன்பத்தைப் பறிக்க யாருக்கும் உரிமை யில்லை.

**மோகன் :** அம்மா, என்னிடம் தகாத வார்த்தைகள் பேசுகின் றீர்கள். உத்தம குல திலகமான நமது அரசர் உங்கள் அழகிலும் ஆடல் பாடல்களிலும் மயங்கியதோடல்ல, தங்கள் அன்பிலும் பூரண நம்பிக்கை வைத்திருக்கின் றார். அந்த அன்பில் களங்கமேற்படுத்திக் கொள்ளா தீர்கள். என் கடமையைக் காப்பாற்ற உதவி செய்யுங்கள்.

**ராஜம் :** மோகன், பேஷ் பேஷ். உன்னுடைய ராஜவிசுவாசம் போற்றற்குரியது. ஆனல் அது இருக்க வேண்டிய இடம் போர்க்களத்தில், என்னுடைய சரஸமாளிகையி லல்ல! அதை அரசர் எதிர்பார்ப்பதும் ராணுவ தளகர்த்தரிட மிருந்தே, என்னுடைய காந்தன் உன் னிடமிருந்தல்ல! அது ஒரு வீரனுக்குப் பட்டத்தையும் பெரும் பதவியையும் அளிக்கும், ஆனல் மன்மதன் போன்ற உனக்கு உதவாது. நீ பிடிவாதமாக இருந் தால் அது ஒரு வேளை உன் மார்பைப் பிளக்கும் கூரிய வாளாகவும் விளையலாம். மோகன், நான் பயமுறுத்த வில்லை. வலிய வரும் சீதேவியை உதறித் தள்ளாதே. ஒரு பெண்ணின் பாசத்தைப் புறக்கணிக்காதே. உன்னை நான் மனதாரக் காதலிக்கின்றேன். உன்னை உயிருள்ள வரை ஆதரிப்பேன். என் ஆசைக்கு மட்டும் இணங்கி விடு. அரசரைப்பற்றி உனக்கேன் கவலை. இங்கு நீ படம் எழுதிக் கொண்டிருப்பதாக அரசர் நம்புவார். உலகும் நம்பிக்கொண்டிருக்கும். ஆனல் அந்த அரச ரும் உலகும் கண்டிராத காதல் களியாட்டத்தின் உச்சியை நான் உனக்குக் காட்டுகின்றேன்.

***(ராஜம் அவனை அணைய நெருங்க, மோகன் உடனே எழுகின்றான். அவள் உடனே அவன் கரத்தைப் பிடிக்கின்றாள்.)***

**மோகன் :** அடி பாதகி. உன்னுடைய குல குணத்தை என்னி டமா காட்டுகின்றாய். என் கையை விடு. இனி உன் முகத்தில் விழிக்கவே மாட்டேன்.

(மோகன் சென்றுவிடுகின்றான்)

**ராஜம்:** அற்பக் கழுதை! அயல் நாட்டிலிருந்து பிழைக்க வந்த அனாதை. படம் எழுதிப் பிழைக்க வந்த பிச்சைக்காரன். அவனுக்கு எவ்வளவு கர்வம். அவன் அரச பதவியல்லவா அவனுக்கு இவ்வளவு மமதையைத் தந்தது. அவன் மமதையைச் சிதைக்கின்றேன். அப்படியானால் அவன் அரச பதவியைப் பிடுங்க வழி தேட வேண்டும். அவன் மந்திரி மகள் மீது வைத்திருக்கும் காதலுமல்லவா என்னை அவன் அலட்சியம் செய்யவும் செய்தது. அவன் காதலைச் சிதறடிக்கின்றேன். மந்திரியின் மனதை அவன் மீது வேம்பாக்குகின்றேன்.

## காட்சி 3

காலம்: **மாலை** இடம்: **வசந்தாவின் அறை**

*[வசந்தாதேவி கட்டிலில் சாய்ந்திருத்தல்:
புஷ்பாதேவி வருதல்]*

**புஷ்பா:** வசந்தா, என்ன அலங்கோலமிது. ஏன் வாட்ட முற்றிருக்கின்றாய்? நீயா கண் கலங்குகின்றாய்?

**வசந்தா:** புஷ்பா, உன்னிடம் சொல்லாமல் யாரிடம் சொல்வது. உன்னிடம் என் மனத்திலுள்ள யாவையுஞ் சொல்லி ஒரு பெருஞ் சுமையை நீக்கிக் கொள்வதற்காகவல்லவா உனக்குச் சொல்லி அனுப்பினேன். எனக்குப் புதூர் நாட்டு மன்னவர் படம் கிடைத்த விபரம் உனக்குத் தெரியுமல்லவா?

**புஷ்பா:** மோகன் வரைந்த படமல்லவா.

**வசந்தா:** ஆம் புஷ்பா. அவர் வரைந்ததால்தானே நான் அதைப் பார்க்க நேர்ந்தது. அதைப் பார்த்ததாலல்லவா என் மனதை அதற்கு அர்ப்பணிக்க நேர்ந்தது. அந்தப் படத்தில் எனக்கிருந்த நாட்டத்தை அறிந்

தல்லவா மோகனும் குறிப்பறிந்து அதனை என்னிடத்தி லேயே விட்டுச் சென்றார்.

**புஷ்பா:** நீ என்ன சொல்லப் போகின்றாயென்றே என்னால் ஊகிக்க முடியவில்லை.

**வசந்தா:** அந்தப் படமும் மோகன் வரைந்த என் படமும் மாயமாக மறைந்துவிட்டன.

**புஷ்பா:** உன்னுடைய அறையிலிருந்தா காணமல் போய் விட்டன. ஆச்சரியமல்லவா ?

**வசந்தா:** என் அண்ணாவின் அன்பை இழந்தேன். இப் பொழுது என் கண்களுக்கு மணியாக இருந்த படத் தையு மிழந்தேன். இரண்டையும் கவர்ந்து சென்ற கள்ளி ராஜமே !

**புஷ்பா:** ஆ, ராஜமா ! அந்தப் படுமோசக்காரி அரசாங்கத் தில் புகாத இடமே இல்லையா ? அவள் நாசமாக்க முனையாத குடும்பமே இல்லையா ?

**வசந்தா:** புஷ்பா, வேகப்படாதே. நம் காரியத்தை முடிப் பதற்குப் பொறுமை வேண்டும்.

**புஷ்பா:** ஆனால் அவள் தான் கவர்ந்து சென்றாள் என்ப தற்கு ஆதாரம் ?

**வசந்தா:** அதைப்பற்றிக் கொஞ்சங்கூட சந்தேகம் வேண் டாம். என் அறையில் நேற்று மாலை அந்த அழகிய படங்கள் இருந்தன. நேற்று இரவிலே தான் காண வில்லை. நாம் அதற்கிடையே கோயிலுக்குச் சென் றிருந்த சமயம். அப்போது என் அண்ணா ராஜத்தை என் அறைக்கு அழைத்து வந்தாராம். இங்கிருக்கும் அருமைப் பொருள்களைப் பார்வையிட்டார்களாம்.

**புஷ்பா:** அப்பொழுது திருடியவள் ராஜம் என்பதில் ஐய மில்லை. ஆனால் அவள் அதை எதற்காகத் திருடியிருக்க வேண்டும் ?

**வசந்தா:** அதைப்பற்றி நாம் ஆராயவேண்டியதற்குச் சமய மிதுவில்லை புஷ்பா. அவள் அதை ஆயிரம் காரணங் களுக்காகக் கைப்பற்றி இருக்கட்டும். எனக்கு அந்தப் படம் வேண்டும். அதைத் திரும்பவும் நான் அடைய வேண்டியதற்குரிய வழிகளைப்பற்றித்தான் நாம் ஆலோசிக்க வேண்டும்.

**புஷ்பா:** வசந்தா, அந்தப் பழிகாரி என்னைப் பிரித்தாள், என் அன்புக் காதலரிடமிருந்து; அவரையும் பிரித் தாள் அவருக்குரிய அரசாங்கப் பதவியிலிருந்து: இப் போது உன்னையும் பிரித்துவிட்டாள் உனக்குரிய அன்பர் படத்திலிருந்து.

**வசந்தா:** புஷ்பா, இந்தப்படத்தை நான் மீண்டும் அடைய மோகனை நாடமுடியாதா?

**புஷ்பா:** அவர் நமக்கு உதவுவதைப்பற்றி ஐயமேயில்லை. ஐயோ, அவர் அரசப் பதவியை இழந்ததிலிருந்து என் அப்பாவின் அன்பையுமிழந்தார். என் அப்பாவும் நான் அவரைக் காண முடியாதபடி செய்துவிட்டார்.

**வசந்தா:** புஷ்பா, நான் துணிந்துவிட்டேன். உனக்கு அவ்வளவு தைரியம் உண்டா?

**புஷ்பா:** வசந்தா கூண்டிலகப்பட்ட கிளியாகத் தவிக்கும் எனக்கு, கூண்டையும் திறந்துவிட்டுக் கூடவும் பறந்து வர மற்றொரு கிளியும் நீயானால் நான் தயங்குவேனோ? என்ன உன் திட்டம்?

**வசந்தா:** புஷ்பா, இந்த பௌர்ணமி தினம் வழக்கம்போல் ராஜம் என் அண்ணாவோடு இன்பப் பொழுது போக்க வஸந்த மண்டபத்திற்குப் போய்விடுவாள். அந்தச் சமயம் நான் ராஜமாக மாறி அவள் வீட்டுக்குப் போய் விடவேண்டும். அப்பொழுது படங்களை எப்படியாகி லும் கண்டுபிடித்து விடலாம்.

**புஷ்பா :** தேவி, அப்படி லேசில் அங்கிருப்பவரை ஏமாற்றி விட முடியுமா ?

**வசந்தா :** புஷ்பா, முடியும். ஏனெனில் நாம் செல்லும் நேரம் யாவரும் அயர்ந்துறங்கும் நடுநிசி. செல்வதும் பௌர்ணமி தினமாதலால், ராஜத்தின் தோழிகளும் காமவேட்டைக்கு வழக்கம் போல் பெரிய இடங்களுக்குப் பறந்திருப்பர். நாம் செல்வதும் ராஜம் உபயோகப் படுத்திவரும் நமது அரசாங்கப் பல்லக்கே. வீட்டைக் காத்து நிற்கும் ஓரிரண்டு தூங்குமூஞ்சிகளை நடுநிசியில் ஏமாற்றுவதா பெரிய வேலை என்று பயப்படுகின்றாய். இன்னும் குழப்பம் வேண்டாம். தைரியத்தைக் கூட்டு எப்படி இருந்தாலும் இதற்கு மோகன் உதவி மிகவும் அவசியம்.

**புஷ்பா :** வசந்தா. மோகன் எனக்காகவேதான் இன்னும் இந்த நாட்டில் உலவிவருகின்றார். என் முறுவலுக்காக ஏங்கித் தவிக்கும் இரண்டு கண்கள் இருட்டு வேளைகளில் தான் என்னைக்காணக்கலங்கி நிற்கின்றன. என் தகப்பனுருக்கும் பயப்படுகிறோம். இரவில் சந்திரனைக்கண்டுகூடப் பயந்து ஒதுங்குகின்றோம். அந்தப் படுமோசக்காரி இன்ப நிலாவைக்கூட எங்களுக்கு வேம்பாக்கிவிட்டாள். எங்கள் தூய இன்பத்தில் பயத்தைக் கலந்துவிட்டாள்.

## காட்சி 4

காலம் : **நடுநிசி** இடம் : **தாசியின் படுக்கை அறை**

***[வசந்தாவும் புஷ்பாவும் மாறுவேடத்துடன் தாசி ராஜத்தின் வீட்டிற்கு வருதல்]***

**வசந்தா :** எனது நெஞ்சு படபடக்கின்றது. யாருக்கும் நமது வேடமும் நடிப்பும் புரிந்திருக்காதென்றே நம்பு கின்றேன்.

**புஷ்பா :** உங்களுக்கு அந்தப் பயமே வேண்டாம். இரவில் வெகுநேரமாகி விட்டபடியால் இங்கு அந்தத் தூங்கும் காவலாளியைத் தவிர வேறு யாரும் இல்லை. நாம் நமது வேலையைக் காலதாமதப்படுத்தாமல் ஆரம்பிக்க லாமே. நாம் தேடி வந்த படங்கள் இந்தச் சிங்கார அறையில்தான் இருக்கவேண்டும்.

**வசந்தா :** புஷ்பா, அதென்னடி காலடி சப்தம். யாரோ பேசுவதை நீ கேட்கவில்லையா.

**புஷ்பா :** அம்மா கலக்கமடையா திருங்கள். நான் சென்று பார்த்து வருகின்றேன்.

***(வசந்தாதேவி பயந்து ஒடுங்கி இருக்க புஷ்பா தேவி வெளியே சென்று ஓடி வருகின்ருள்.)***

**புஷ்பா :** வசந்தா! வசந்தா! உன் அதிர்ஷ்டம் அவரே இங்கு வந்துவிட்டார்.

**வசந்தா :** யாரடி அவர். நமது கபட நாடகம் விளங்கி விட்டதா ?

**புஷ்பா :** உங்கள் மனதைக் கொள்ளைகொண்ட புதூர் நாட்டு மன்னரே இங்கு வந்து காத்துக் கொண்டிருக்கின்ருர்.

**வசந்தா :** என்ன ஆச்சரியம்! அவர் படத்தைக்காண வந்த இடத்தில் அவரையே நேரில் சந்திப்பதா? ஆனல் அவர் காணவந்தது, அந்தோ, தாசியை அல்லவா ?

**புஷ்பா :** ஆம் தேவி. இருந்தாலும் தாங்கள் அவரை இன்று கட்டாயம் கண்டுகொள்ள வேண்டும்.

**வசந்தா :** என்ன புஷபா, இந்தத் தாசி கோலத்திலா ?

**புஷ்பா :** அம்மா தடை சொல்ல வேண்டாம். இதனல் நமக்கு நன்மை ஏதேனும் இருக்கலாம்.

**வசந்தா :** என்னடி, கள்ளுக்கடையில் தேனை விற்கும் கதை யாக அல்லவா நமது நிலை ஆகிவிட்டது. ஆனல் கள்

ளுக்கடையிலா தேனின் சுவையை மதிக்க முடியும். கள்ளுக்கடைக்கு வருபவரும் கள்ளின் வெறிக்காக வருவாரேத் யன்றி தேனின் மதுரத்திற்காகவா வர முடியும் ?

**புஷ்பா :** அம்மா, ஆனால் இந்தக் கள்ளுக்கடைக்குப் பறந்து வந்திருப்பது மொய்க்கும் ஈக்களில் ஒன்றல்ல, ஒரு செம்பொன் வண்டு. இந்தக் கள்ளுக்கடையில் வண்டுக்குக் கிடைக்க இருப்பது தித்திக்கும் தேனல்லவா ! எல்லாம் பொருத்தமாக இருக்கின்றது. ஆனால் உண்மையை மட்டும் உரைத்து விடாதீர்கள். போட்ட வேடத்தை நன்றாக நடித்து விடுங்கள். அவர் இங்கு வந்திருப்பதற்கும் பொருத்தமாக இருக்கும். இதோ அழைத்து வருகின்றேன்.

*(புதூர் மன்னனைப் புஷ்பாதேவி அழைத்து வருதல்)*

**புஷ்பா :** எங்கள் தலைவி தங்கள் வருகையால் சூரியனைக் கண்ட தாமரைபோல் மலர்ச்சியடைகின்றாள். எங்கள் இல்லம் பெருமை அடைகின்றது.

**சேகர் :** ராஜம், என்ன ஆச்சரியம் ! உன் தோழி சொல்வது போல் நான் உன் அழகிய முகத்தில் அமைதியோடு மலர்ச்சியைக் காணவில்லையே. ஒருவித கலக்கமும் நிம்மதி இழந்த பரபரப்புமல்லவா உன் கண்கள் நிரூபிக்கின்றன.

**வசந்தா :** இல்லை.... நான் தங்கள் வருகையால் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**சேகர் :** நீ மட்டற்ற மகிழ்ச்சி அடைய வேண்டுமென்று தான் நான் இங்கு வந்தேன். ஒரு வேளை உன் கடிதம் கண்டதும் வராமல் உன் படத்தைக் கண்டவுடன் ஓடி வந்ததில் உனக்கு என்மேல் கோபமிருக்கலாம். உண்மையில் உன் கடிதம் என்னைத் தட்டி எழுப்பவே இல்லை.

உன் படத்தைக் கண்டேன். எல்லா வேலைகளையும் விட்டு உனக்கும் ஒரு தகவலும் முன்னமேயே அறிவிக்காது பறந்தோடி வந்துவிட்டேன். ஆனால் அந்தப் படத்தில் கண்ட குறுநகைச் செவ்வாயைக் காணவிட்டாலும் வண்ணக் கொவ்வைச் செவ்வாயைப் படத்தில் கண்ட அழகுக்குமேல் வர்ணிக்க முடியாத அளவில் நேரில் கண்டு களிக்கின்றேன்.

(புஷ்பா நழுவிவிடுகின்றாள்)

உன்னைக் கண்டு களிக்கும் இன்பம் என்னை ஊருக்குத் திரும்பவிடாமல் செய்துவிடும் போல் இருக்கின்றது. உன் படம்தான் என்னை இங்கு காந்தம்போல் இழுத்து வந்ததென்றால் உன் ஒப்பிலா அழகு என்னை இங்கேயே இருத்திவிடும் போலல்லவா இருக்கின்றது.

**வசந்தா :** இந்த அன்பு வார்த்தைகளைக் கேட்க மிகவும் பெருமை அடைகின்றேன் அரசே. இந்த ஏழையால் தங்களுக்கு ஆக வேண்டியது ....

**சேகர் :** ராஜம், என்ன உன் கைகள் நடுநடுங்குகின்றன. என் அருகில் வந்து உட்காரமாட்டாயா. பெண்களுக்கு நாணமும் கூச்சமும் தானாகவே எங்கிருந்தோ ஓடிவந்துவிடுகின்றன. ஆனால் எனக்கு ஆச்சரியம் என்னவென்றால், நேரில் உன்னிடம் காணும் இந்த பயத்திலோ நாணத்திலோ ஒரு துளிகூட உன் விகிதத்தில் நான் காணவில்லை. கட்டுக் கடங்காத ஆசையைத் தான் முதல் வரியிலிருந்து கடைசி வரி வரைக் கண்டேன்.

**வசந்தா :** ஒரு அற்ப தாஸியிடமிருந்து வந்த கடிதத்தில் வெறியையும் அடக்கமின்மையையும் தவிர வேறு எதைக் காண முடியும், மன்னவா.

**சேகர் :** ராஜம், என்னை மன்னித்து விடு. சொல்லும் வகை தெரியாமல் உளறிவிட்டேன். நான் சொல்ல நினைத்

தது நீ கடிதத்தில் தாராளமாக உறவாடிய அளவு இப்பொழுது நடந்து கொள்ளத் தயங்குகின்றுயே என்பது தான். இனிமேல் 'அற்பதாஸி' என்றெல்லாம் உன் வாயிலிருந்தே கேட்க விரும்ப மாட்டேன். நீ எனது ஆசை மலர்.

**வசந்தா :** தாங்கள் ஒரு மலரிலிருந்து மறுமலருக்குத் தாவிச் செல்லும் ருசி கண்ட செம்பொன் வண்டு.

**சேகர் :** சரமாரியாகவா என் மேல் குற்றச்சாட்டுதல். நீ என்னைப்பற்றி நினைப்பது தவறு. ஏதோ பழக்கமில்லாத பெண் அழைத்தவுடன் வந்துவிட்டேனென்று நினைக்க வேண்டாம். உன் திரு உருவைக் கண்டேன். எனக்குரிய காதலியைக் கண்டுகொண்டேன். என் ஆசை பரிபூரணமானது. நான் உன்னை மலராகச் சொன்னதும், நான் என்னைச் சூரியனுக நினைத்தே, உன் தோழி சொல்லியபடி. நீ மலரென்ருல் செந்தாமரையேதான்! செந்தாமரை சூரியனைக் கண்டால்தான் மலரும்.

**வசந்தா :** அன்பரே, என்னைச் செந்தாமரை மலருக்கு ஒப்பிட்டு விட்டீர்கள். இந்தச் செந்தாமரையும் இந்தச் சூரியனைக் கண்டேதான் மலர முடியும், வேறு யாருக்கும் எனது இதயத்தில் பங்கில்லே. ஆனுல் இந்தச் சூரியன் மட்டும் என் வாழ்க்கையை எப்பொழுதும் மணக்கச்செய்ய வேண்டும்.

**சேகர் :** அதைப்பற்றிச் சந்தேகம் வேண்டாம். கண்மணி. ஏதோ தவறி இழிகுலத்தில் பிறந்துவிட்டாய். ஆனுல் இப்போது என் உள்ளத்தில் புகுந்துவிட்டாய் எனக்குரியவளாகிவிட்டாய்.

**வசந்தா :** ஸ்வாமி, இந்த ஏழை தங்கள் கருணையால் பாக்யவதியானேன். என்னைக் கைவிடாதீர்கள்.

**சேகர்:** ராஜம், எனக்கு ஏற்பட்ட காதல் திடீரென்று கிளம்பும் சூருவளிக் காற்றைப் போலல்ல. திடீரென்று தோன்றி அழிவை ஏற்படுத்தித் திடீரென்று அடங்கும் இயல்பினதல்ல. ஏதோ அழகிய பெண்ணொன்று உன்னிடம் ஓடிவந்து ஆசை தீர்ந்தவுடன் உன்னைப் பிரிந்தோடும் நோக்கத்தோடு நான் இங்கு வந்தவனல்ல. என் காதல் வாழ்வைப் பரிபூரணமாக்கவே வந்தேன். அழகான மலரென்றுதான் ஓடிவந்தேன். மணமிக்க மலரென்பதை வந்ததும் கண்டு கொண்டேன். நம் ஒன்றுபட்ட வாழ்வு மாளிகைக்குத் திறவுகோலான கல்யாணத்திற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். கண்மணி, திடீரென்று உன்னைக் காண வந்துவிட்டேன். நான் இப்போது உடனே ஊருக்குத் திரும்பிவிட வேண்டும். மறுபடியும் உன்னை எப்பொழுது காணலாம்.

**வசந்தா:** அரசே, நாம் மறுபடியும் சந்திப்பதற்கு அடுத்து வரும் பௌர்ணமியே தகுந்த நாள்.

**சேகர்:** இதே இடத்தில் நாம் மறுபடியும் சந்திப்போம். அடுத்த பௌர்ணமியன்று. இதோ என் ஆசைக் காணிக்கை.

***(தயக்கத்தோடு வசந்தா கையை நீட்ட சேகரன் அவள் கரத்தைத் தன் அதரங்களால் தொடுகின்றான். சேகர் பிரிய புஷ்பா நுழைகின்றாள்.)***

**புஷ்பா:** என்ன தேவி, தம்மை மறந்த நிலையில் இருக்கின்றீர்கள். கைக்குக் கிடைத்தது வாய்க்குக் கிடைக்கவில்லை என்ற நினைப்போ. எல்லாம் கவனித்துக் கொண்டுதானிருந்தேன். விட்டுப் போனதை மறு பௌர்ணமியில் உரிய இடத்தில் பெற்றுக் கொள்வீர்.

**வசந்தா:** புஷ்பா, உனக்கெல்லாம் கேலிதான். இரவு பூராவும் சென்று விட்டதே! நாம் வந்த வேலை......

**புஷ்பா:** இரவு பூராவும் வீணுக்கிவிடவில்லையே. கெட்டுப் போன தங்கக் கழுத்தணிக்காகக் கிணற்றைத் துழாவினேம். பொன் புதையலேயல்லவா கிட்டியது.

**வசந்தா:** ஆனல் அது கிடைக்கவில்லையே புஷ்பா.

**புஷ்பா:** அது இருக்குமிடம் தெரிந்துவிட்டது. எடுத்து அனுபவிக்க வேண்டியது தானம்மா உங்கள் வேலை.

**வசந்தா:** புஷ்பா, இனிமேல் நமக்கிங்கு வேலை இல்லை. உடனே திரும்பிவிடவேண்டும்.



# அங்கம் II

## காட்சி 1

காலம்: **காலை** இடம்: **ராஜத்தின் மாளிகை ஹால்**

*[சிவிகை தாங்கி சொக்கனும் ராஜத்தின் பணிப்பெண் முத்தம்மாளும்]*

**சொக்கன்:** இந்த சம்பங்கிப் பூக்கொத்தை அம்மாளிடம் சேர்த்து விட்டால்தான் எனக்குத் தூக்கம் வரும்போலிருக்கிறது.

**முத்தம்மா:** இனிமேலா தூக்கம். இரவெல்லாம் யாருக்காக கண் விழித்திருந்தாய். .

**சொக்கன்:** யாருக்காகவும் கண் விழித்திருப்பது என் தொழிலல்ல முத்தம்மா. ஒன்றும் தெரியாதவள் மாதிரி பேசுகின்றாயே. நேற்றிரவு உங்கள் தேவி ஜாமக் கூத்தடித்தது தெரியாதோ. இங்கும் வசந்தமண்டபத்துக்கும் நாலு நடை, அதுவும் கழுத்தில் இரண்டாள் சுமையோடென்றால் காலும் கழுத்துமட்டுமா வலிக்கும் கண்ணும் தூக்கத்துக்காகத் தத்தளிக்காதா?

**முத்தம்மா:** நேற்று இரவு சென்ற தேவி காலையில் தானேயப்பா வந்தார்கள்.

**சொக்கன்:** இதற்கு நடுவில் ஒருதரம் இங்கே வந்துவிட்டுப் போனதைச் சேர்த்துப்பார், நான்கு நடையாகவில்லை?

**முத்தம்மா:** ஓகோ, நடுவில் ஒரு தரம் இங்கு வந்துவிட்டுச் சென்றார்களா. எதற்காக வந்திருக்க வேண்டும்.

**சொக்கன் :** வேலை இருந்ததால்தான் வந்தார்கள். அவர்கள் வருவதற்கும் அயலூரான் ஒருவன் வந்துசேருவதற்கும் ஒத்திருந்தது.

**முத்தம்மா :** என்னடா ஆச்சரியமாயிருக்கு. நான் அம்மா வின் நம்பிக்கையை இழந்து விட்டேனு ?

**சொக்கன் :** முத்தம்மா, நீ இதெல்லாம் தனியாக உட் கார்ந்து கொண்டு சாவகாசமாய் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய விஷயம். இந்தச் சம்பங்கிப் பூவை அம்மாவிடம் சேர்த்துவிடு. வருகின்றேன்.

**முத்தம்மா :** யாரப்பா, இதை இங்கு கொடுத்தனுப்பியது ?

**சொக்கன் :** யாரும் அனுப்பவில்லை. அம்மாதான் பல்லக்கில் விட்டு வந்திருந்தார்கள். ஒருவேளை முடியிலிருந்து அவிழ்ந்திருக்கலாம், அம்மாவுக்குத் தெரியாமல்.

**முத்தம்மா ;** என்னடா ஆச்சரியமாயிருக்கு. நான்தானே அம்மாவுக்குத் தலைவாரிவிட்டு ஒரு கொத்து மல்லிகை சூட்டி விட்டேன். அந்த மல்லிகை கொத்தா சம்பங்கிக் கொத்தாக மாறிவிட்டது ?

**சொக்கன் :** என்னம்மா உனக்கு எல்லாமே ஆச்சரியமா யிருக்கு. இது புரியவில்லையோ. ஒரு வேளை நம் ராஜா சம்பங்கி சூட்டியிருப்பார். நேற்று இரவு இடம் மாற ஆள் மாறினுப்போலே இடம் மாறப் பூவும் மாறி இருக் கலாம்.

**முத்தம்மா :** அதென்னடா இடம் மாற ஆள் மாறியது என்ருயே ?

**சொக்கன் :** முத்தம்மா, தப்புன்னு என்னை மொத்தம்மா. வசந்தமண்டபத்திலிருக்கும் வரை வேந்தனுறவு. வீட் டுக்கு வந்தவுடன் வேருரான் உறவு. இவ்வளவுதான்.

**முத்தம்மா:** சொக்கா, நீ புத்திசாலிதாண்டா. உனக்கு இப்படி மூளை வேலை செய்யுமென்று நான் கனவில்கூட நினைக்கவில்லை.

**சொக்கன்:** நீங்க தூங்கினுலேம்மா கனு காண்பதற்கு. நீங்க தான் இரவும் பகலுமா உங்க வேலையே கவனமாய்......

**முத்தம்மா:** போதும் போதும் நிறுத்து உன் வாய்த்துடுக்கை

***(உள்ளேயிருந்து [ராஜம் வந்து ஆசனத்தில் அமர சொக்கன் பூங்கொத்தைச் சேர்க்கின்முன்)***

**ராஜம்:** ஆஹா, சம்பங்கிப் பூவா, என்ன வாசனை! சொக்கா, அரசர் கொடுத்தனுப்பினுரா?

**சொக்கன்:** இல்லையம்மா, தாங்கள் பல்லக்கில் விட்டு வந்ததைக் கொண்டு வந்து சேர்த்தேன்.

**ராஜம்:** நான் பல்லக்கில் விட்டு வந்ததா? நான் சம்பங்கியைக் கண்டே இரு திங்களாகின்றதே.

**முத்தம்மா:** அம்மா, தாங்கள் நேற்றிரவு வஸந்த மண்டபத்திலிருந்து நடு இரவில் நமது மாளிகைக்கு அவசரமாக வந்ததுண்டோ?

**ராஜம்:** வஸந்த மண்டபத்தையும் அரசரையும் விட்டு நடு இரவில் ஓடிவர எனக்கென்னடி பைத்தியமா?

**முத்தம்மா:** தேவி ஏதோ சூது நடந்திருக்கிறது. தங்களை நடு இரவில் பல்லக்கில் இங்குத் தூக்கி வந்ததாகவும், தாங்கள் அயலூரான் ஒருவனிடம் இங்கிருந்துவிட்டுத் திரும்பியதாகவும் இதே சொக்கப்பன் இப்பொழுது தான் சொன்னுன்.

***(ராஜம் திடுக்கிட்டெழுந்து)***

**ராஜம்:** என் பல்லக்கில் சம்பங்கிக் கொத்து. நடு இரவில் வஸந்த மண்டபத்திலிருந்து பயணம். என் மாளிகை

யில் அயலூரான் ஒருவனுடன் சந்திப்பு. விந்தைக்கு மேல் விந்தை! அடே சொக்கா உள்ளதை ஒன்றும் மறைக்காமல் உரைத்து விடு. இரவு என்னென்னடா நடந்தது?

**சொக்கன்:** அம்மா, நீங்களும் அரசரும் வஸந்த மண்டபத்திற்குள் சென்றவுடன் நானும் மற்ற பல்லக்குத் தூக்கிகளும் சற்றுக் கண் அயர்ந்தோம். நடு இரவு இருக்கும். 'சொக்கா' என்ற குரல் கேட்டெழுந்தோம். அம்மாவைப் போல ஒருவர் சற்று எட்டி நிற்க, ஒரு பணிப்பெண் என்னை அணுகி, 'தேவி வீட்டுக்கு அவசரமாகப் போய்வரவேண்டும்' என்றாள். இரவில் நிலவின் மங்கிய ஒளியிலும் தூக்க போதையிலும் அம்மாதான் வந்து விட்டீர்களென்று சிவிகையில் ஏற்றி நமது வீட்டுக்கு விரைந்தோம். உள்ளே இருவரும் நுழைந்தவுடன் ஒரு குதிரையிலிருந்து ஒரு வாலிப வீரர் நம் வீட்டுக்கு முன்பு இறங்கினார். 'இது தான் ராஜத்தின் வீடா' என்று கேட்க, தாங்களும் இவரைக் காணத்தான் அவசரமாக வந்தீர்களென்று நினைத்து, 'உள்ளே இருக்கின்றார்கள்' என்றேன். பணிப்பெண் வெளியே வந்து அவரை யாரென்று விசாரித்து உள்ளே சென்றாள்.

**ராஜம்:** யாரென்று கேட்டாளா? வந்த ஆள் என்ன பதில் சொன்னார்.

**சொக்கன்:** நான் சற்று எட்டி இருந்ததால் சரியாகக் காதில் விழவில்லை. ஏதோ புதூர் நாட்டு என்பது மட்டும் காதில் விழுந்தது.

**ராஜம்:** ஆ, புதூர் நாடா. அப்பொழுது சேகராகத்தான் இருக்கவேண்டும். சொக்கா, சொல், சொல் அப்புறம் என்ன நடந்தது.

**சொக்கன்:** பணிப்பெண் உள்ளிருந்து சம்மதம் பெற்று, வந்தவரை உள்ளே அழைத்துச் சென்ருள். கொஞ்ச நேரம் கழித்து உள்ளேயிருந்து திரும்பிய அயலூரான் பணிப்பெண்ணைப் பார்த்து 'அடுத்த பௌர்ணமி வரையில் பொறுத்திருங்கள்' என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டான். அவன் சென்றபின் அவர்களும் பல்லக்கில் மறுபடியும் ஏறிக்கொள்ள, நான் அவர்களை இஷ்டப்படியே வஸந்த மண்டபத்தில் சேர்ப்பித்தேன். அம்மா, தாங்கள்தா னென்று மதி மோசம் போனேன்.

**ராஜம்:** இறங்கியவர்கள் நேரே வஸந்த மண்டபத்துக்குள் நுழைந்தார்களா ?

**சொக்கன்:** அது தானம்மா இல்லை. நேராக இளவரசி உப்பரிகை பக்கம் சென்ருர்கள்.

**ராஜம்:** அவர்கள் உடுத்தியிருந்த உடை ?

**சொக்கன்:** அம்மா, நான் என்ன முட்டாளா ? வேறு உடையும் வேறு நகையும் கண்டிருந்தால் நான் ஏமாந்திருப்பேனு. நேற்று தாங்கள் கட்டியிருந்த அதேமாதிரி நீல வர்ண ஜரிகைக் கொட்டடி சேலை. தங்கள் கழுத்தை அலங்கரித்த ஜ்வலிப்பு ஜாலங்கள் காட்டும் அதே மாதிரி வைர அட்டிகை. கொண்டையிலும் வெள்ளை வெளேரென்ற பூங்கொத்து.

**ராஜம்:** சொக்கா, நடந்ததை அப்படியே மறந்துவிடு. மறுபடியும் கூறவேண்டிய அவசியமேற்பட்டால், ஞாபகப் படுத்திக்கொள். நாளை நான் சொல்லியனுப்புகிறேன். உடனே வந்து விடு. முத்து, சொக்குவை உள்ளே அழைத்துச் சென்று நன்ருகக் கவனித்து அனுப்பு.

**[இருவரும் உள்ளே செல்ல, ராஜம் அமர்ந்து ஆலோசனை செய்தல்]**

**ராஜம்:** என்ன விபரீதம். வந்தவள் வசந்தா என்பதில் கொஞ்சங்கூட சந்தேகமேயில்லை. நிலவிலும் தன் பிரகாசத்தை அலையலையாக வாரி வீசும் வைர அட்டிகை என் கழுத்திலொன்று அவள் கழுத்திலொன்று. உருவிலும் உயரத்திலும் நாங்களிருவரும் அநேகமாக ஒத்திருப்பதை மோகன் சொல்லிக்கூட மறந்து விட்டேனே. வந்தவள் வசந்தா என்பதற்குச் சந்தேகமே இல்லை. எங்கள் உடலமைப்பும் உரு அமைப்பும் அநேகமாக ஒற்றுமையாயிருந்தாலும் அவள் முகத்தில் யாரையும் வசீகரிக்கும் கனிவுநகை காந்த சக்தியை உத்தேசித்தல்லவா அவள் படத்தை அனுப்பினேன். ஐயோ, விதியல்லவா எனக்கு சதி செய்து விட்டது. தூண்டில் புழுவாக அல்லவோ வசந்தா படத்தை உபயோகப் படுத்த நினைத்தேன். ஆனால் தூண்டில் புழுவையல்லவா வந்த மீன் சுவைத்துச் சென்று விட்டது. என் வார்த்தை வலையிலும் சிக்க வில்லை. என் தூண்டிலுக்கும் தப்பிவிட்டதே. என்னுசை சிதைந்து சின்னபின்னமாவதா? புதூர் நாட்டு மன்னவனுடன் வசந்தா கூடிக்குலாவவா நான் இந்தப் பெரிய திட்டம் வகுத்தேன். பொறு, மனமே பொறு. இப்பொழுது காரியம் மிஞ்சிவிடவில்லை. அடுத்த பௌர்ணமி வரட்டும். புதூர் மன்னர் இங்கு வரட்டும். இங்கு வசந்தாவும் வரட்டும், என் ஆசைதீரச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்கின்றேன். **(எழுகின்ருள்)** அடி, வசந்தா, உன் ஆசையையும் குழி வெட்டிப் புதைக்க உருவாகி விட்டது என் சூழ்ச்சி.

## காட்சி 2

காலம்: **இரவு** இடம்: **மந்திரி மாளிகைத் தோட்டம்**

[புஷ்பாவும் **மோகனும்**]

**மோகன்:** எனக்காக வெகுநேரமாகக் காத்துக் கொண்டிருக்கின்ருயா, புஷ்பா?

**புஷ்பா :** இல்லை, மோஹன். முதலில் உங்களிடம் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லிவிடுகிறேன். சென்ற பௌர்ணமியில் நடந்தது.

**மோகன் :** அடுத்த பௌர்ணமியும் நெருங்கிவிட்டது. என் அதிர்ஷ்டம் உன்னைத் திங்களுக்கு ஒரு நாள் தான் காணமுடிகின்றது.

**புஷ்பா :** கவலைப்படாதீர்கள். வரும் பௌர்ணமி வரைப் பொறுத்திருங்கள்.

**மோகன் :** அப்படியானால் என் விருப்பப்படி என்னோடு வந்து விடுகின்றாயா ?

**புஷ்பா :** உங்கள் நாட்டுக்கே வந்துவிடுகின்றேன். இளவரசியையும் அழைத்து வந்துவிடுகின்றேன்.

**மோகன் :** வசந்தாவையுமா, புஷ்பா !

**புஷ்பா :** அப்படிச் சொல்வது பொருந்தாது. நம்மையும் வசந் தாவையும் அழைத்துச் செல்லப் பௌர்ணமி தினத் தன்று புதூர் மன்னரே வருகின்றார்.

**மோகன் :** நம்மை அழைத்துச் செல்லப் புதூர் நாட்டரசனா? என்ன விஷயம் புஷ்பா ?

**புஷ்பா :** கண்ணாளா, தாங்கள் ஏற்றிவைத்த விளக்கு சுடர் பெற்று ஓங்கி ஒளிர ஆரம்பித்து விட்டது. தங்கள் படத்தின் சிறப்பை என்னென்று சொல்வேன். உங்கள் கைத்திறன் புதூர் மன்னனையே இங்கு தாசி வீட்டுக்குச் சென்ற பௌர்ணமியில் இழுத்துவந்து விட்டது.

**மோகன் :** ஆ, என்ன அபூர்வ நிகழ்ச்சி !

**புஷ்பா :** இதைக் கேட்பதற்கே ஆச்சரியமா. இன்னும் சொல்கிறேன். கேளுங்கள். தாசி வீட்டிலேயே கூத் தடிக்க வந்த சேகரரை வசந்தா காதல் வயப்படுத்தி

விட்டாள். கட்டழகி வசந்தாவை நேரில் கண்டு கண்களைப் பறிகொடுத்த புதூர் மன்னன் தாசியையே கல்யாணம் செய்துகொள்வதாகவும் உறுதி கூறிவிட்டார்.

**மோகன் :** தாசி வீட்டில் வசந்தா. தாசியைக் கல்யாணம் செய்து கொள்ள மன்னன் உறுதி. எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே.

**புஷ்பா :** அன்பரே, ஆரம்பத்திலேயே உங்கள் உதவியை நாடினேம். தாங்கள் அகப்படாமல் போகவே எங்கள் திட்டத்தை நிறைவேற்ற நாங்களே முற்பட்டோம். தாங்கள் வசந்தாவுக்கு அளித்த புதூர் நாட்டு மன்னன் படம் ஞாபகம் இருக்கின்றதா ?

**மோகன் :** ஆஹா, அதைக்கண்டு களித்தல்லவா, வசந்தாவின் உயிர் துளிர்த்து வந்தது.

**புஷ்பா :** அந்த ஓவியத்தையும் தாங்கள் வரைந்து தந்த வசந்தா படத்தையும் தாசி ராஜம் கவர்ந்து சென்ருள். அதைக்கண்டு பிடிக்க இளவரசி சென்ற பௌர்ணமியன்று தாசி வீட்டுக்கு என்னேடு வந்தார். அன்று பௌர்ணமியாதலால் வழக்கம்போல் தாசி வஸந்த மண்டபத்திற்குச் சென்றிருந்தாள். திடீரென்று நாங்கள் வந்ததும் தாசி திரும்பினளென்றே அங்கிருந்தோர் நம்பினர். ஆனல் திடீரென்று அங்குப் புதூர் மன்னர் தோன்றினர். வசந்தாவையே தாசி என்று எண்ணிக் காதலுரையாடலானர். ராஜம் வசந்தா படத்தைத் தன் படமென்றே அவருக்கு அனுப்பி இருக்கிருள்.

**மோகன் :** என்ன ஆச்சரியம். ராஜம் தன் படமென்று வசந்தாவின் படத்தையா அனுப்பினுள்? ஏன் தன் படத்தை அனுப்பவில்லை ?

**புஷ்பா :** அதை நீங்கள் தான் சொல்லவேண்டும். அவள் முதலில் ஆசைக்கடிதம் எழுதினுளாம். ஆனால் அது பயனற்றுப் போகவே பின்னுல் அனுப்பிய வசந்தாவின் படம் அவரை இழுத்து வந்துவிட்டது.

**மோகன் :** எனக்கு இப்பொழுது புரிகின்றது. அவள் படத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்புதான் என்னை அகற்றக் காமவெறி கொண்டாள். அது மட்டுமல்ல. அவள் வேசிவேலையைத்தான் கெட்டிக்காரத்தனமாகச் செய்திருக்கின்றுள். ஆசைவார்த்தைகளைப் பேசித் தானே அவள் ஆடவர் ஆசையைக் கொள்ளை கொள்கின்றுள். ஆனால் உளத்திலிருந்தெழாத அவள் உதட்டின் வார்த்தைகளின் போலித்தனத்தை மன்னன் உணர்ந்ததைக் கண்டு விட்டாள். தன் வார்த்தைகளால் முடியாததைத் தன் உருவப்படம் முடிக்கும் என்ற சுய நம்பிக்கை அவளுக்குக் கரைந்திருக்கும். சற்றுத்துணிவாகவே இறங்கிவிட்டாள். தன்னை ஒக்கும் ஆனால் தன்னைவிட அழகி வசந்தா படத்தை அரசனை இழுக்கவே அனுப்பி இருக்கின்றுள். தன்னிடம் வந்து விட்டால் எப்படியும் சரிப்படுத்திக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை கொண்டே.

**புஷ்பா :** உண்மையில் அப்படித்தான் இருக்கவேண்டும். மோகன், அன்று நிகழ்ந்ததை என்னென்று சொல்வேன். வசந்தாவின் நிலை தான் ஏற்றுக்கொண்ட வேடத்தை முற்றிலும் நடித்துக் காட்டியது. ஆனால் புதையலைக்கண்டும் ஓரளவுதான் அதைக் கண்டு சுவைத்தாள் வசந்தா!

**மோகன் :** அப்படி என்ன நடந்தது, புஷ்பா.

**புஷ்பா :** வசந்தாவுக்குத் தன் காதலன் ஒரு தாசியை நாடி வந்ததில் ஒரு பேரிடி; இருந்தாலும் தன் படம் அவரை இழுத்து வந்ததில் ஒரு புத்துயிர். தாசி

பாகத்திலும் மன்னவன் இதயத்தில் அழிக்கமுடியாத காதலைத் தைத்து விட்டார். சிறிது நேரம் இன்ப நுகர்ச்சிக்காக வந்த மன்னவனும், என்றுமே அவ்வின்பத்தைத் தன்னிடம் நிலைக்கச் செய்ய உறுதிகொண்டு சென்றுவிட்டார். வரும் பௌர்ணமியன்று புதூர் மன்னர் வருகின்றார். மறு சந்திப்பும் தாசி வீட்டிலேயே, தாசி கோலத்திலேயே. அநேகமாக அவர் வசந்தாவை அழைத்துச் சென்றுவிடலாம். பிறகு நமக்கிங்கு என்ன வேலை?

**மோகன்:** அடுத்த பௌர்ணமிக்காக ஏங்கிக் கிடக்கின்றேன், புஷ்பா. நமக்கும் நல்லகாலம் வந்துவிட்டது.

**புஷ்பா:** இனிமேல் நாம் வெண்ணிலாவைக் கண்டும் பதுங்க வேண்டியதில்லை.

## காட்சி 3

நேரம்: **நடு இரவு** இடம்: **தாசி வீட்டின் ஹால்**

***[வசந்தாவும் புஷ்பாவும் மாறுவேடத்துடன் தாசி ராஜத்தின் வீட்டில் இருத்தல்]***

**புஷ்பா:** வசந்தா, நடு இரவாகியும் இன்னும் அவரைக் காணவில்லையே.

**வசந்தா:** ஒருவேளை வராமல் இருந்து விடுவாரோ. பாவம், நீயும் இந்த மனோரம்யமான இரவில் பாதியை எனக்காக வீணாக்கிவிட்டாய். உன் மோஹன் உன் வருகைக்காக இதே தோட்டத்தில் துடித்துக் கொண்டிருப்பார்.

**புஷ்பா:** வசந்தா, உன் நலனைவிடவா என் இன்பம் பெரிது. கவலைவேண்டாம். வந்துவிடுவார். அவர் வர்ணித்த வண்ணக் கொவ்வைச் செவ்வாய் அவரை அழைத்து வராமலா இருக்கும். மிகவும் பாக்யம் செய்த அவ்

விதழ்களைத் தயாராக வைத்துக்கொள். விருந்து பலமாக இருக்கலாம்.

**வசந்தா:** புஷ்பா, நீ ஒரு பெரிய குறும்புக்காரி. அதென்னடி, அவர் குரல் போலிருக்கின்றதே.

**புஷ்பா:** ஆம், ஆம், அவரேதான். இந்த அர்த்த ராத்திரி வேளையில் சூரியோதயமாகிவிட்டது. வண்ணத் தாமரையே, விரிந்துக்கொள். இதோ நழுவிவிடுகின்றேன்.

*[புதூர் மன்னன் மாறு வேடத்தில் வெகு விரைவாக உள்ளே வந்து வசந்தாவை தன் இரு கரங்களிலும் வாரி அணைக்கின்றார்]*

**சேகரர்:** கண்மணி. காலதாமதம் கூடாது. உடனே நாம் பறந்திடவேண்டும்.

*[திடீரென்று உள்ளே பேரூர் மன்னர் குமரரும் தாசி ராஜமும் நுழைகின்றனர். குமரர் வேகமாகச் சென்று, வசந்தாவை இழுத்துப் பிரித்து நிறுத்துகின்றார். அதே சமயத்தில் இரு வீரர்கள் உருவிய வாளோடு சேகரரை வளைத்துக் கொள்கின்றனர்.]*

**குமரர்:** ஐயோ பெண்ணே, உன்னை இந்தப்பாழும் கோலத்திலா நான் காண்பது. எனக்கு ஒன்றும் புரியவில்லையே.

**ராஜம்:** அரசே. இவளை இப்பொழுதே நமது மாளிகைக்கு அனுப்பிவிடுவோம். வீரசேனரே, இவளை உடனே மாளிகைக்கு அழைத்துச் சென்றுவிடுங்கள். இந்த அன்னியரைத் தற்சமயம் இங்கேயே காவலில் வைத்திருப்போம்.

**குமரர்:** நீ யார்? எந்த ஊர்? உனக்கென்ன துணிவு?

**சேகரர்:** நான் பதில் சொல்வதற்குமுன், நீ இப்படி அநியாயமாக ஒரு வீட்டிற்குள் நுழைந்து இங்கிருந்தவர் உரிமை

களைச் சிதறடித்தாயே, இதுதான் உனது செங்கோலின் நீதியா என்பதை உரை.

**ராஜம் :** அரசே, நமக்கினி இங்கு வேலை இல்லை. அவரிடம் இப்பொழுது நமக்கு வீண் வார்த்தைகள் வேண்டாம். மனதை அலட்டிக் கொள்ளவேண்டாம். போவோம், வாருங்கள்.

## காட்சி 4

காலம் : **விடியற்காலம்** இடம் : **தாசி வீட்டில் ஒரு அறை**

***[ஆசனத்தில் தலையைத் தன் கையில் சாய்த்த வண்ணம் சேகரர் காட்சி. திடீரென்று தாசி ராஜம் மெதுவாக நுழைதல். அவர் தோள்களைப்பற்ற, அவர் துள்ளி எழல்.]***

**சேகரர் :** ஆ, நீயா. எதற்கம்மா இந்த நேரத்தில் இங்கு வந்தாய். என்னைத் தொடவேண்டாம்.

**ராஜம் :** தாங்கள் புதூர் மன்னன் என்பதை அறிந்தும் உங்களை என்னால் தொடாமலிருக்க முடியவில்லை.

**சேகரர் :** என்ன, நான் புதூர் நாட்டிலிருந்து வந்ததை எப்படி அறிந்து கொண்டாய்.

**ராஜம் :** அரச குடும்பத்தில் பிறந்த மணமாகாத என்போன்ற இளம் பெண்களுக்கா, தங்களைப் போன்றவர்களைத் தெரியாமலிருக்கும்.

**சேகரர் :** ஓகோ, நீ இந்த நாட்டின் வேந்தன் தங்கையோ?

**ராஜம் :** என்னை வசந்தா வென்று அழைப்பார்கள். ஏதோ என் அண்ணார் ஆத்திரத்தில் இப்படி நடந்துகொண்டார். ஆனால் அவர்மீதும் குற்றமில்லை. தன் ஆசைக் கண்ணாட்டியாகப் பாவித்த அந்த வேசி அவரையே

இப்படி வஞ்சிப்பாள் என்று அவர் கனவிலும் கருத வில்லை.

**சேகரர் :** என்ன மோசம். ராஜம் இவ்வூர் அரசரின் காமக் கிழத்தியா. ஒரு எச்சல் கலயத்தையல்லவா ஏற்கத் துணிந்திருந்தேன்.

**ராஜம் :** அதையேன் கேட்கின்றீர்கள். சொன்னால் வெட்கக் கேடு. என் அண்ணர் அவள் வலையுள் சிக்கிய பலருள் ஒருவர்.

**சேகரர் :** வசந்தாதேவி, தாங்கள் இங்கு வந்ததின் நோக்கம்.

**ராஜம் :** நான் தங்களிடம் இரகசியமாய் ஓடிவந்துவிட்டதே என் நிலையை விளக்கவில்லையா. நான் என் வாய் விட்டு உங்களைக் கெஞ்சவேண்டுமா? இதோ உங்கள் அடிமை. ஏற்றுக்கொள்ளுங்கள் ***(அவர் பாதங்களைப் பிடிக்கின்றாள்)*** நான் உங்கள் சொத்து. இந்த நாட்டு மன்னன் என் அண்ணன் என்பதைக்கூட மறந்து விட்டேன். என் காதலைப் புறக்கணிக்காதீர்கள். உங் களுக்காக ஏங்கித் தவித்த நாட்கள் கொஞ்சநஞ்ச மல்ல. உடனே புறப்படுங்கள். உங்கள் நாட்டுக்கு ஓடிப்போய் விடுவோம்.

**சேகரர் :** வசந்தா, நீ உண்மையாகவா என்னுடன் வரத் துணிவு கொள்கின்றாய்.

**ராஜம் :** அரசே, இன்னும் சற்று நேரத்தில் விடிந்துவிடும். என் ஆசையைக் கவிழ்க்காதீர்கள். உங்கள் உரிமையை இழக்காதீர்க்ள். தாங்கள் சம்மதித்தால் என் வாழ்வு பரிமளிக்கும். உங்கள் வாழ்வும் மறுமலர்ச்சியடையும். இன்னுமா யோசனை? காவலர்கள் யாவரும் உறங்கு கின்றனர். வாருங்கள். விரைவில் சென்று விடுவோம்.

**சேகரர் : (எழுந்து)** சரி, வசந்தா. புறப்பட்டுவிட்டேன். ஆனால் நீ மட்டும் நன்றாக யோசனை செய்துபார். நீ என்னோடு வந்தால் என்ன பயன். உன் அண்ணாவுக்கும் தங்கை மறைந்த அபகீர்த்தி. உனக்கும் மனது ஒடிந்த மன்னவனுடன் பகிர்ந்துகொள்ளும் மனவேதனை. இதைத்தவிர நீ வேறொன்றும் எதிர்பார்க்க முடியுமா ?

**ராஜம் :** அரசே, இப்படியெல்லாம் பேசி என்னைத் தட்டிக் கழிக்கவேண்டாம். அண்ணனையும் துறந்து என் நாட்டையும் துறந்து என் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தங்களுக்கே அர்ப்பணிக்கின்றேன். இனி இங்குச் சற்று நேரமும் தங்கலாகாது.

**சேகரர் :** உன் இஷ்டப்படியே வசந்தா. எனது ரதமும் மெய்காப்பாளரும் இந்த நகர் வாயிலில் காத்துக் கொண்டிருப்பர். இன்னும் ஒரு வாரத்துக்குள்ளேயே நாம் புதூரின் எல்லையில் புகுந்திடுவோம்.



# அங்கம் III

## காட்சி 1

காலம் : **காலை** இடம் : **புதூரில் மோகன் வீடு**

*[தன் எளிய வீட்டில் மோகனும் புஷ்பாவும்]*

**மோகன் :** புஷ்பா, எனது வளமிக்க நாடு உனக்கு இன்பத்தை அளிக்கு மென்பதில் ஐயமில்லை. ஆனால் பெரு மாளிகையில் பழகிய உனக்கு என் எளிய இல்லம் தேனைத் தித்திக்க முடியுமா.

**புஷ்பா :** தாங்கள் என்னோடு இருக்கும்போது வாழ்க்கை இனிக்காமலிருக்கமுடியுமா மோகன். என் செல்வத்தையும், செல்வாக்கையும்விட்டு வந்ததில் எனக்குக் கொஞ்சங்கூடக் கவலையில்லை. ஆனால் தனது ஒரே மகளையே நம்பி உயிர் வாழ்ந்து வந்த என் அப்பாவை நான் அவரை ஒரு தகவலுமின்றித் தனியாகத் தவிக்கவிட்டு ஓடி வந்ததை நினைத்தால்தான் நான் ஒரு துரோகி என்று உணருகின்றேன்.

*(கண் கலங்குகின்றாள். மோகன் அவளை நெருங்கி அணைத்து)*

**மோகன் :** கண்ணே, கலக்கமடைய வேண்டாம். நமது இருண்ட வாழ்வில் நல்லகாலம் வராமலா போய்விடும். நமது காரியத்தை மறந்து விடக்கூடாது. நமது வசந்தா தேவியை மறந்து விடக்கூடாது. வசந்தா தேவியின் காதல் வெற்றிபெற வேண்டுமாயின் நாம் நமது கடமையைத் திறமையுடன் செய்து முடிக்க வேண்டும்.

**புஷ்பா:** ஆம் மோகன், நான் அதை மறக்கவில்லே. தாங்கள் இன்றல்லவா அரசரைக்காணச் செல்கின்றீர்கள். அவருக்கு என்ன அளிக்கப் போகின்றீர்கள்.

**மோகன்:** என்னுடைய கலேயைத் தவிர வேறு எந்தப் பொருளே என்னல் கலேஞர்களுக்கு அளிக்க முடியும், புஷ்பா. அது ஒன்றே போதாதா மன்னரை மகிழ்விக்க ?

**புஷ்பா:** உண்மையே. நமது தோட்டத்தில் பக்குவமான மாங்கனிகளிரண்டை மன்னருக்காக எடுத்துச் செல்லுங்கள். தருணம் பார்த்து மன்னரிடம் விபரங்களே அறிவித்துவிடுங்கள்.

**மோகன்:** அப்படியே புஷ்பா. மன்னவனே முன்போல் எளிதில் யாரும் பார்க்க முடிகிறதில்லேயாம். அவர் பேரூருக்குச் சென்று வந்தவை யாவும் ஒருவருக்கும் தெரியவில்லே. சிறை வைக்கப்பட்ட அரசர் எப்படித்தான் தப்பி வந்தாரோ, அதுதான் ஆச்சரியமாக இருக்கின்றது.

**புஷ்பா:** அகப்பட்டவர் அரசர் என்று தெரிந்திருந்தால் குமரர் பலத்த காவல் ஏற்பாடு செய்திருப்பார். ஏதோ ஒரு சொற்ப செல்வர் என்றெண்ணிப் போதிய காவல் வைத்திருக்கத் தவறியிருப்பர். ஒரு சிங்கத்தை ஓரடி வேலி கட்டி அடைக்க முடியுமா. சிங்கம் வெகு எளிதில் வேலியைத் தாண்டித் தப்பி இருக்கலாம். நீங்கள் புதூர் அரசரை நேரில் காண உண்மை விளங்கி விடுகின்றது.

**மோகன்:** புஷ்பா, நடந்தவைகளே நினேத்தால் ஆச்சரியமாகவும் அதிசயமுமாகவல்லவா இருக்கின்றன. நடக்கப்போவது இன்னும் என்னவோ.

**புஷ்பா:** தாங்கள் நடந்த எல்லாவற்றையும்தான் ஐம்பது சித்திரங்களாகப் படம் பிடித்து வைத்துவிட்டீர்களே. தாங்கள் முதன் முதலாகப் புதூர் மன்னர் தங்கை ரமணி

தேவி படம் வரைந்ததிலிருந்து இன்றுவரை என்னோ டிருக்கும் காட்சிவரை நம் கதையைப் படமாகப் பொறித்துவிட்டீர்களே ?

**மோகன் :** நம்முடைய கதை மட்டுமா. இந்தப் படங்களில் குமரர், வஸந்தா, சேகர், ராஜம் கதைகள் கூட அல்லவா இருக்கின்றன. உண்மையில் இவர்க ளெல்லாம் கூடிய இந்தச் சித்திரக் கோவை ஒரு அரிய நாடகத்திற்கே போதிய சுவைமிக்க நபர்களையும் கட்டங்களையும் அளிக்க வல்லதாகும்.

**புஷ்பா :** ***(அவற்றிலிருந்து ஒரு படத்தைக் கையில் எடுக்கிருள்)*** இந்த ஒரு படம் மிகவும் அழகாக அமைந்துவிட்டது. வஸந்தாதேவி புதூர் மன்னரோடு இணைந்திருக்கும் காட்சியும், அதைக்கண்டு பேரூர் மன்னன் ஆச்சரியமும் திகிலும் அடைவதும், தாசி ராஜம் தான் பெற்ற இன்பத்தில் எக்களிப்பு கொள்ளும் காட்சியும் அற்புத மாக அமைத்துவிட்டீர்கள். இந்த இடம்தான் இந்த அபூர்வ நாடகத்தில் ஒரு புது அத்தியாயத்தைத் தொடங்கும் முக்கியத்துவம் வாய்ந்தது. நடந்ததை அழியாத சித்திரமாக அல்லவா அளித்துவிட்டீர்கள், மோகன்.

**மோகன் :** நான் அன்று கண்டதைப்போல் ராஜத்தை அதற்குமுன் கண்டதேயில்லை. பெருமை, வெறுப்பு, கண்டு பிடித்துக் கொடுத்ததில் ஒரு பெருமிதம்—இவை யெல்லாம் அவள் முகத்தில் மாறி மாறிக் காட்சியளித் தன. நீயும் ஒப்புக்கொள்வாயல்லவா ?

**புஷ்பா :** நான் அதற்குமுன் அந்த வேசியைக் கண்டிருந்தா லல்லவா உங்களுக்குப் பதில் சொல்லமுடியும்.

**மோகன் :** என்ன, அதற்குமுன் நீ ராஜத்தைக் கண்டதே யில்லையா. அப்படியாயின் ராஜமும் உன்னைப்பார்த் திருக்க நியாயமேயில்லை.

**புஷ்பா:** ஆம் மோகன். தாங்கள் புறப்படவேண்டிய நேர மாகிவிட்டது. இதோ மாங்கனிகளைப் பறித்து வருகின் றேன். புறப்படத் தயாராகுங்கள்.

## காட்சி 2

காலம்: **மாலை** இடம்: **புதூர் நந்தவனம்**

[*ராஜம்*]

**சேவகன்:** தேவி, மன்னர் அனுப்பியுள்ள ஓவியக்காரர் தங்களைக் காண விழைகின்றார். மன்னரும் பின்னே வருவதாகச் சொல்லி அனுப்பியிருக்கின்றார்.

**ராஜம்:** ஆ, ஓவியக்காரனா? எங்கிருந்து வந்திருக்கின்றான்.

**சேவகன்:** நம்மூர் ஆள்தானம்மா!

**ராஜம்:** அப்படியானால், வரச்சொல்.

***(மோகன் வருகின்றான்: ராஜம் திடுக்கிட் டெழுகின்றாள்)***

**ராஜம்:** ஐயோ, மோகனா?

**மோகன்:** அடி, மோசக்காரி. நீயா இங்கும் முளைத்தாய். வசந்தாதேவி என்றல்லவோ அரசர் உன்னிடம் என்னை அனுப்பினர். அடி நீலி, நீயா வசந்தாதேவி? என்ன படுமோசம்!

**ராஜம்:** ஏ, மோகன். உன் பேச்சை நிறுத்து. மதியிழந்து பேசாதே. பேரூரில் உனக்குக் கிடைத்த மரியாதை இங்கும் வேண்டுமானால் உன் இஷ்டம்போல் பிதற்று. நீயும் வாழ விரும்புவாயாகில் இப்பொழுதாகிலும் நான் சொல்கிறபடி செய்.

**மோகன்:** அடி, பாதகி. நாயைத் தொடர்ந்து சென்றாலும் அதற்கு விசுவாசம் உண்டு. நீ நாயிலும் கேடுகெட்ட

பரத்தை. உன்னைத் தொடர்வது மனதுக்கு வேதனையைத் தேடிக்கொள்வதாகும், உடலுக்கு உபத்திரவத்தைத் தேடிக் கொள்வதாகும். அடி சூன்யக்காரி! நாசகாரி! வேசி.

*[புதூர் மன்னர் வந்து அதிசயத்தோடு நிற்பது]*

**மோகன்:** ஐயோ, மோசம் போய்விட்டீர்கள் அரசே. இந்த பஞ்சமா பாதகியையா அழைத்து வந்தீர்கள், இவளா வசந்தாதேவி, பைசாசமல்லவா பெண் ரூபத்தில் வந்து விட்டது. ஐயோ, இவள் நாசம் விளைவிக்கும் வேசியல்லவா. குடியைக் கெடுக்கும் விஷ நாகமல்லவா. ராஜாக்களை அண்டி அழிக்கும் ராஜமல்லவா.

**ராஜம்:** கண்ணாளா, இருந்திருந்தும் இந்தப் பைத்தியக் காரனையா என்னிடம் அனுப்பி வைத்தீர்கள். பாவம், நல்ல வித்தையுள்ளவன். ஆனால் அவன் பைத்தியமாகி நெடுநாளாகி விட்டது. உடனே இவனை அப்புறப்படுத்துங்கள்.

**மோகன்:** அடி, வேசி நானா பைத்தியக்காரன்.

*[மோகன் வெகு கோபத்தோடு அவளை நோக்கி விரையப் பெரும் சப்தத்தைக் கேட்டு இரு வீரர்கள் ஓடி வந்து மோகனைப் பிடித்துக் கொள்கின்றனர்.]*

**ராஜம்:** அரசே, தாங்கள் இன்னுமா தாமதிப்பது.

**சேகரர்:** இந்தப் பைத்தியத்தை நமது அந்தரங்க சிறையுள் வைக்கவேண்டும். நல்ல பாதுகாப்பில் இருக்கட்டும்

*[சேவ்கர் மோகனை இழுத்துச்செல்லும்போது மோகன் உரக்கமாக உரைத்தல்]*

**மோகன்:** ஐயோ, நானா பைத்தியம்? வேசி, உன் வார்த்தைகளை நம்பி மோசம் போகிறவர்களுமல்லவா பைத்தியமாகி விட்டார்கள்!

**ராஜம் :** அரசே, இந்தப் பைத்தியத்திற்கு அந்தரங்க சிறை அவசியமானதா.

**சேகரர் :** வசந்தா, இங்கு நீ இருப்பது யாருக்கும் தெரியாது. என் தங்கைக்கு மட்டும் நான் உண்மையைக் கூருமலிருக்க முடியவில்லை. நமது நன்மையை முன்னிட்டே இவனை அந்தரங்க சிறைக்கு அனுப்பியுள்ளேன். நீ யாரென்பதை இன்னும் யாரும் அறிய வொண்ணுதபடி தடுக்கவே இந்த ஏற்பாடு.

*(ராஜம் பெருமூச் செறிகின்ருள்)*

**ராஜம் :** அன்பே தாங்கள் மட்டும் சமயத்தில் வரவில்லையாளுல் அந்தப் பைத்தியம் என்னைக் கொன்றே இருப்பான்.

**சேகரர் :** வசந்தா, இந்த அபூர்வ கலைஞன் எப்படி பைத்தியங் கொள்ளியானுன்.

**ராஜம் :** அவனை உங்களுக்கு முன்பே தெரியுமோ, அரசே ?

**சேகரர் :** உனக்குத் தெரியாதா, வசந்தா. இவன், இந்த நாட்டின் குடி. என் படம் என் தங்கை படமெல்லாம் வரைந்து தந்தான். ஏதோ நல்லகாலத்தை நாடிப் பேரூருக்குச் சென்ருன். அங்கே உன்னையும் வரைந்ததாகக் கூறினுன். அதனுல்தான் அவனை உடனே உன்னிடம் அனுப்பினேன்.

**ராஜம் :** உண்மைதான். என் அண்ணுவும் மிகவும் அன்போடு இவனுக்கு ஆதரவளித்தார். இவன் கலைத்திறனைக் கண்டு மெச்சி, தன் ஆசைக்கிழத்தி ராஜத்தை ஓவிய வடிவில் அமைக்கச் சொன்னுர். இந்தப் பேராசைக்காரன் அவள் படத்தை அவள் வீட்டிலேயே இருந்து முடித்து வருவதாகச் சொல்லி வந்தான். அவள் அரசரின் அந்தரங்கக் காமவல்லி என்பதையும் மறந்து அவளோடு சரஸ சல்லாப வாழ்க்கை நடத்தலானுன்.

அந்த வேசியும் இந்த இள ஓவியக்காரனுக்கு இடம் கொடுத்தாள். ஒருநாள் இருவரும் காமத்தால் கண் மூடித்தனமாக இருந்தவேளை எனது அண்ணா திடீரென்று எதிர்பாராதபடி தாசி வீட்டுக்குச் சென்றுவிடவே, தாசி அரசர் வந்துவிட்டதை யுணர்ந்து கலைஞன் காமுகனாகிவிட்டானென்று அபயக்குரல் எழுப்பினாள். ஓவியக்காரன் விவேகத்தை விட்டு வெறிகொண்டானென்று அன்றே பதவியிலிருந்தும் நீக்கப்பட்டான். தன் பதவியும் இன்பமும் பறி கொடுத்த மோகன் தன்னைக் காட்டிக்கொடுத்த வேசியின் நயவஞ்சகச் செயலால் சுய அறிவையும் பறி கொடுத்தான். பித்தனாகி விட்டான். பார்க்கும் பெண்களையெல்லாம் தனக்கு அழிவை அளித்த வேசியென்றே நினைத்து இங்கு உளறியதைப்போல், கண்டபடி ஏசுவதே வழக்கமாகி விட்டது.

**சேகரர்:** வசந்தா. நான் பேரூர் அரச குடும்பத்தாருக்கு என்றும் கடமைப்பட்டிருக்கின்றேன். உன்னால் சிறையுற்றதிலிருந்து மீட்சி கண்டேன். உனது அண்ணாவின் எதிர்பாராத வருகையால் தாசியின் படுமோச வலையிலிருந்து மீட்சி கண்டேன். ராஜத்தின் அக்கிரமங்கள் அளவுகடந்தன வாயிற்றே. ஒரு பொக்கிஷமான கலைச் செல்வனைப் பித்துகுளியாக்கிவிட்டாள். இதை நினைக்கும்போதே, நான் மறுபடியும் பேரூர் சென்று அவளைப் பிடித்து இங்குக் கொண்டுவந்து, தகுந்த தண்டனை விதிக்கலாமா என்று கூடத் தோன்றுகின்றது.

**ராஜம்:** அரசே, என்ன வார்த்தை சொன்னீர்கள். நான் நிம்மதியாக இங்குத் தங்களுடன் காலம் கழிப்பது தங்களுக்கே பொறுக்கவில்லையா. அல்லது அந்த மாய அரக்கி ராஜத்தின் ஆசை மறுபடியும் உங்கள் புனித மனதில் காமப் புயலைத் திரட்டி விட்டதா. தாங்கள் எனக்குக் கொடுத்த பிரமாணத்தையும் மறந்துவிட்டீர்

ளா? நான் உயிரோடிருக்கும்வரை பேரூர் மண்ணில் மிதிப்பதில்லை என்பதை அறவே விட்டொழித்து விட்டீர்களா? ஐயோ, தங்களை நம்பியல்லவா இங்கு வந்தேன். வந்தும் என் காதல் பிரதிப்பலனில்லாமல் காய்கின்றதே. என் வாழ்க்கையும் தங்கள் கருணை மழையில்லாது வறண்டு அழிகின்றதே. தங்களைக் கண்டதும் காதல் கொண்டேன். காதலின் கோடி கோடி இன்பங் கருதியல்லவா உங்களுக்கு மீட்சி அருளியதோடு நில்லாமல், என் நாட்டையும் விட்டு, எனது உயிருக்கினிய அண்ணையும் விட்டு உங்களோடு ஓடோடியும் வந்தேன். இங்கு நான் காண்பது—ஐயோ நினைப்பதற்கே பயங்கரமாக இருக்கின்றது—தாங்கள் தாசியை எண்ணி ஏங்கி வாடுவது. நான் தங்களை அடையமுடியாது ஏங்கி இளைப்பது. எனக்குத் தங்கள் அன்பே கிட்டாதா. நானும் என் இளமையும் என் காதலும் இப்படியே அழிவதா?

[*கண்ணீருகுக்கின்ருள்*]

**சேகரர்:** வசந்தா, வருத்தப்படாதே. கூடிய சீக்கிரத்தில் நான் நடந்தவைகளை மறந்துவிடுவேன், நான் உன் உதவியை மறந்துவிடவில்லை. நான் நன்றி கெட்டவன் அல்ல. கொஞ்சநாள் பொறுத்துக்கொள். உன்னையே மணந்துகொள்கின்றேன்.

**ராஜம்:** என் து கண்ணாளா, உண்மையாகவா?

**சேகரர்:** ஆம், உண்மையிலேயே!

**ராஜம்:** எனது உயிரே. இன்று சந்திரன் கூட சீக்கிரமே பூத்து எழில் பொழிகின்ருன். நான் இப்பொழுதே பாக்யசாலியானேன். எனது ஆருயிர்க் காதலரே, அப்படியே அமருங்கள். என் உள்ளத்தை ஒரு பாட்டில் படம் பிடித்துக் காண்பிக்கின்றேன்.


(*ராஜம் பாடுகின்ருள்.*)

தேஷ் :

**மாரன் கணை மதிமயக்கந்தனை**
**மிக ஊட்டி ஆட்டுகின்றதே**
**பூரணச் சந்திரன் தண்ணெழில் தூவித்**
**தூபம் போடுகின்றதே**
**நறுமணம் வீசும் முல்லை மல்லிகை**
**வேட்கை வேகத்தை விரிக்கின்றதே**
**பரிமணம் கமழும் நல் தென்றலும் உள்ள**
**உணர்ச்சியை எழுப்புகின்றதே.**

பஸ்தாரி :

**ஆடிப்பாடி மகிழ்வேன் நின் பாதமலர்தனைப்**
**பற்றினேன் அழகா.**
**நாடிநின் காதலைத் தேடி உன்சாயலை**
**சேடி நான் நிற்கின்றேன்**
**மோடி செய்யலாகுமோ.—(மாரன்)**



# அங்கம் IV

## காட்சி 1

காலம் : **மாலை** இடம் : **காடு**

*[ரமணிதேவியும் புஷ்பாவும்]*

**புஷ்பா :** தேவி, நாம் தோழிகளை விட்டு நெடுந்தூரம் வந்து விட்டோம்.

**ரமணி :** காட்டில் தனியே இருக்கின்றோமே என்று பயப்படுகின்றாயா? வள்ளிகூடத் தினைப்புனத்தில் தனிமையிலே தானே காவல் புரிந்திருக்க வேண்டும். நீ வள்ளியா யிருந்தால் ஒரு வேளை வேலனை வேடன் வேடத்தில் கண்டவுடனேயே பயத்தால் சரணடைந்து கட்டி யணைந்திருப்பாய். வேடரும் விருத்தராக மாறவேண்டிய அவசியமுமிருந்திராது.

**புஷ்பா :** நான் பயப்படவில்லை தேவி, இங்கு நான் தைரிய மடைகின்றேன். மானிடர் வாழும் நாட்டில் வாழ்வதை விட மனிதவாசமே இல்லாத காட்டில் வாழ்வதில் மனதுக்கு அமைதியும் இன்பமும் உண்டென்று நினைக் கின்றேன்.

**ரமணி :** சரோஜா, நீ சொல்வதில் உண்மை யிருக்கின்றது. உன் இதய ஒலியைத்தான் கேட்கின்றேன். நீ என்னிடம் சொல்லமாட்டாயா? உனக்கென்னம்மா உலகத்தில் இந்தவித வெறுப்பு.

**புஷ்பா :** தேவி, நானிப்போது ஒரு அநாதை. தங்கள் அன்பால் உயிரோடிருக்கின்றேன். தாங்களும் அன்று என்னைத் தங்கள் பணியாளாக ஏற்றுக்கொள்ளாதிருந் தால் என் கதி என்ன ஆயிருக்குமோ.

**ரமணி :** சரோஜா, நீ யார்? உள்ளதைச் சொல். உலகில் துயருள்ள பெண்மணி நீ ஒருத்திதானு. என்னைப்பார். ஏதோ வேடிக்கையாகக் கேலிக் கூத்தடிக்கின்றேன். ராஜ குடும்பத்தில் பிறந்து செல்வாக்குடன் பரிமளிக் கின்றேன். ஆடிப்பாடி மகிழ்கின்றேன். இப்படித் தானே என்னைப்பற்றி நினைக்கின்ருய்.

**புஷ்பா :** ***(ஆச்சரியத்தோடு)*** தேவி, தாங்களா இப்படி பேசு கின்றீர்கள்.

**ரமணி :** நான் பார்ப்பதற்கு இப்படித் தோன்றுகின்றேன். அந்தோ, என் உள்ளத்தை உனக்குத் திறந்துகாட்ட முடிந்தால் அங்கு நீ இருளையும் ஏமாற்றத்தையும்தான் காண்பாய். நான் கண்களிருந்தும் வழி தெரியாது தவிக்கின்றேன். நானும் அந்தப் பாசமில்லாப் பழிகார உலகை வெறுத்துத்தான் தனிமையை நாடினேன். நீதான் எனக்குகந்த தோழி என்றும் உன்னை மட்டும் இங்கு அழைத்து வந்தேன்.

**புஷ்பா :** தேவி, தாங்கள் அப்படி வேதனை அடைவதற்கு என்ன காரணம்? ஏழை என்னுல் உதவமுடியுமா?

**ரமணி :** என் விஷயத்தில் யாரும் உதவ முடியாது. எனது அன்பை என் அண்ணுரிடம் ஐக்கியப்படுத்தி இருந் தேன். ஆனுல் இப்பொழுது என் அண்ணுவைப் பார்ப்ப தற்குக்கூட கொடுத்து வைக்கவில்லை. அண்ணுவின் அன்பையும் காலத்தையும் தன் பிரத்தியேக உரிமை யாக்கிக்கொண்டாள் வசந்தாதேவி. நான் அவரிடம் நெருங்கிப் பழகுவதைக்கூட அவள் விரும்பவில்லை. சரோஜா, ஆடவர்களைப்பற்றி நீ என்ன நினைக்கின்ருய்?

**புஷ்பா :** அம்மா, அவர்கள் நல்லவர்கள், அவர்கள் அழி வதும் ஆவதும் பெண்ணுலேதான்.

**ரமணி :** என்ன சரோஜா, நீ அப்படியா நினைக்கின்ருய்?

**புஷ்பா:** ஆம் அம்மா, அதில் சந்தேகமில்லை. என் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளைக் கொண்டே நான் அப்படிச் சொல்கின்றேன். என் காதலர்...... ஐயோ, அம்மா (**தேம்பி தேம்பி அழுகின்றாள். அரசி அவளை அணைந்து தேற்ற அழுகை ஓய்கின்றது**). அம்மா, என் உண்மைப் பெயர் புஷ்பா. நான் பேரூர் நாட்டின் மந்திரி குமாரி. என் காதலர் ஒரு கலைஞன். தங்களை இரண்டாண்டுகளுக்கு முன் படமாக எழுதினாரே, அவரைத் தங்களுக்கு ஞாபகமிருக்கின்றதா?

**ரமணி:** மோகனைப்பற்றிச் சொல்கின்றாயா?

**புஷ்பா:** ஆம், அவரேதான். மோகன் என் வாழ்வில் தோன்றி என்னை வளமுறச் செய்து திடீரென்று மறைந்துவிட்ட என் உயிர்க்காதலன். ஐயோ, அவர் உயிருடன் இருக்கின்றாரா. அவர் மாயமாக மறைந்ததை........

**ரமணி:** புஷ்பா, கவலை வேண்டாம். மோகன் உயிருடனிருக்கின்றார்.

**புஷ்பா:** தேவி, உண்மையாகவா? அவர் எங்கிருக்கின்றார்?

**ரமணி:** அதைக் கேட்டு நீ பீதி அடைய வேண்டாம்!

**புஷ்பா:** அம்மா அவர் உயிர் வாழுகின்றார் என்று சொல்லி எனக்கு உயிரைக் கொடுத்தீர்கள். ஆனால் எனக்குக் கொடுத்த உயிரை மீண்டும் பிடுங்குவது போலல்லவா இருக்கின்றது தாங்கள் இப்படி உரைப்பது?

**ரமணி:** பதறாதே புஷ்பா. அவர் புத்தி சுவாதீனத்தில் இல்லையென்று பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கின்றார்.

**புஷ்பா:** ஐயோ, அம்மா, நான் என்ன செய்வேன்.

**ரமணி:** புஷ்பா, நமது அந்தப்புரத்திலிருக்கும் பேரூர் இளவரசியைப் படமாக எழுத அண்ணார் அவளிடம்

அனுப்பினர். ஆனல் மோகன் வசந்தாவைப் பார்த்த வுடன்தான் புத்தி மாருட்டம் அடைந்தாராம்.

**புஷ்பா :** அம்மா. எனக்கு உயிர் மீண்டும் வந்துவிட்டது. விஷயங்கள் விளங்கிவிட்டன. இனிமேலும் நான் தங்களிடம் மூடிவைப்பது முட்டாள்தனமே யாகும். ***(பையிலிருந்து பல படங்கள் கொண்ட ஒரு பெரிய புத்தகத்தை எடுத்துக் கொடுக்கின்ருள்)*** இந்தப் படங்களைப் பாருங்கள். எல்லாம் புரிந்துவிடும். இவைகளை மோகன் வரைந்தார். இவைகள் எங்கள் வாழ்வில் கண்ட புதுமைகள். உலகத்தில் நடக்கும் அதிசயங்கள். கண்ணலே காண்பதுவும் பொய் என்பதை நிரூபிக்கும் சித்திரங்கள். நேர்மையும் நெறியும் அநீதிக்கும் அக்கிரமத்திற்கு முன் அழியும் விதத்தைக் காட்டும் ஓவியங்கள். உண்மைக் காதலுக்கு ஏற்படும் இடர்களைச் சித்தரிக்கும் அரிய கலைப் பொக்கிஷங்கள்.

**ரமணி :** ***(பேரூர் மன்னர் படத்தை எடுத்து)*** இது யார் படம்?

**புஷ்பா :** இவர்தான் பேரூர் நாட்டு மன்னர், குமரன்.

**ரமணி :** ***(படங்களை அவசரமாகத் திருப்பி வரும்போது, ஒரு படத்தைக் கண்டு பிரமிக்கின்ருள்)*** புஷ்பா, இதென்னடி அநியாயம். அண்ணன் தங்கையை இறுக அணைந்து அதரங்கள் நிறைய ஆழ்ந்த முத்தங்கள் அளிக்கும் காமக் கோலம். பேரூரரசின் புத்திர பாக்கியங்களா இப்படி லீலா விநோதங்களில் ஈடுபடலாயினர். அல்லது மோகன்தான் தன் நிலை மாறியபின் இவ்வாறு......

**புஷ்பா :** அம்மா, மோகன் தன் அறிவு மாறவே இல்லை. தாங்கள் ஆரம்பத்திலிருந்து பக்கம் பக்கமாக நிம்மதியுடன் பாருங்கள். உண்மை தானகவே விளங்கும். யார் உண்மை வசந்தா யார் போலி வசந்தா என்பதெல்லாம் புரிந்துவிடும் அம்மா, தங்கள் அண்ணவோடு

ஓடிவந்திருப்பவள் வசந்தா தேவி அல்ல. பேரூர் மன்னரின் தங்கையல்ல. பேரூர் நாட்டின் தாசி ராஜமே. அவள் ஒரு கபட நாடகத்தையே நடித்து ஏய்த்து விட்டாள் உங்கள் அண்ணவை.

**ரமணி:** புஷ்பா, நீ ஆச்சரியத்துமேல் ஆச்சரியத்தை அடுக்கிக்கொண்டே செல்கின்ருய்.

**புஷ்பா:** தேவி, ஆரம்பத்திலிருந்து நடந்ததை விளக்குகின்றேன். முதல் படத்தைத் திருப்புங்கள்.

## காட்சி 2

காலம்: **மாலை** இடம்: **அரண்மனை**

*[சாய்வு நாற்காலியில் சேகரர் வீற்றிருத்தல். ரமணி வருதல்]*

**ரமணி:** அண்ணு, தாங்கள் தனியாகவா இருக்கின்றீர்கள். வசந்தாதேவி கடைவீதிக்குச் சென்றிருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

**சேகரர்:** ஆம், நான்தான் அனுப்பினேன். இராணி கிரீடத்திற்கு வைரங்கள் வாங்குவதற்காக.

**ரமணி:** வைரங்கள் வேணுமென்ருல் நமது மாளிகையிலேயே வியாபாரிகள் தங்கள் கடைகளைக் குவித்துவிடுவார்களே, அண்ணு.

**சேகரர்:** வசந்தாவின் விருப்பப்படியே அனுப்பி வைத்தேன்.

**ரமணி:** அண்ணு, தாங்கள் முற்றிலும் மாறிவிட்டீர்கள். அரசாங்க வழக்கங்களைக்கூட மாற்றத் துணிந்து விட்டீர்கள். நான் ஒருத்தி இருப்பதைக்கூட மறந்து விட்டீர்கள்.

**சேகரர்:** என்ன ரமணி, இம்மாதிரி குற்றச்சாட்டுதல் செய்யவா என்னைத் தனிமையில் பார்க்க வந்தாய்.

**ரமணி :** அண்ணா, உங்களை அதிக நேரம் தொந்திரவு செய்ய வரவில்லை. உங்கள் அனுமதிக்காகவே வந்தேன்.

**சேகரர் :** எதற்கு அனுமதி, ரமணி.

**ரமணி :** அண்ணா, நான் நமது புண்ணிய பூமியின் திருத்தலங்களைக் கண்ணாரக் கண்டுவரத் தீர்மானித்திருக்கின்றேன்.

**சேகரர் :** அதற்கென்ன, உனக்கு வேண்டிய சௌகரியங்கள் யாவும் செய்கின்றேன். எப்பொழுது புறப்படப் போகின்றாய்?

**ரமணி :** அண்ணா, நாளை கதிரவன் உதயத்தின்போதே எங்கள் புறப்பாடு.

**சேகரர் :** ரமணி, ஏன் இவ்வளவு அவசரம். கொஞ்சநாட்கள் கழித்துச் செல்லக்கூடாதா? நீ, இங்கிருந்து முடிக்க வேண்டிய முக்கியமான காரியம் ஒன்றுண்டு.

**ரமணி :** எல்லாவற்றிற்கும்தான் வசந்தாதேவி இருக்கின்றாளே, அண்ணா.

**சேகரர் :** ரமணி, நீ என்ன வசந்தாவைக்கண்டு பொறாமையடைகின்றாயா? வசந்தா கூடிய சீக்கிரத்தில் உனது அண்ணி ஆவதை உணர்ந்திருந்தால் இப்படியெல்லாம் பேசமாட்டாய்.

**ரமணி : (திடுக்கிட்டு)** அண்ணா, வசந்தாவையா கல்யாணம் செய்துகொள்ளப் போகின்றீர்கள். அப்படி முடிவு செய்துவிட்டீர்களா? அதுவும் மாற்றமுடியாத முடிவா?

**சேகரர் :** ரமணி, நீயா இப்படிப் பேசுகின்றாய். அண்ணன் குடும்பத்திற்கு விளக்கேற்றி வைக்கவா இவ்வளவு தயக்கம். நான் வசந்தாதேவியை அழைத்து வந்து ஆறு மாதங்கள் ஆகின்றன. அவளும் ஒரு நாட்டின் இளவரசியென்பதை மறந்துவிட்டாயா. நான் அவளை எதற்காக என்னோடு அழைத்து வந்திருக்கின்றேன்.

அனாதையென்று அழைத்து வரவில்லை. சகோதரியாகப் பாவிப்பதற்காகவும் இல்லை. அல்லது அவளை ஆசைக் கிழத்தியாகவும் கூட்டிவரவில்லை.

**ரமணி :** அண்ணா, எனக்குத் தெரியாதென்று இந்த உபதேசங்கள். தாங்கள் அரண்மனையை அனாதை ஆஸ்ரமமாக்கத் துணிவீர்களா! உடன் பிறந்த தங்கை உயிருடனிருக்க சகோதரி ஸ்தானத்தைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியமே இல்லை. நமது மாளிகையையும் தாசர்கள் கூடும் தாராள கூடமாக்கவும் முனைவீர்களா?

**சேகரர் :** போதும், போதும் உன் குறும்பு மொழிகள். உனக்கு எப்போது விளையாடலாம் கூடாது என்பது தெரியவில்லை. நான் தீர்மானித்துவிட்டேன். வசந்தா என் பட்டமகிஷி ஆவதில் உனக்கென்ன.

**ரமணி :** எனக்குப் பொறாமையோ வருத்தமோ இல்லை யென்பதைத்தானே என்னிடமிருந்து எதிர்பார்க்கின்றீர்கள்?

**சேகரர் :** இன்னுமா விளையாட்டு. ரமணி நீ யென்ன சொல்லுகின்றாய்.

**ரமணி :** அண்ணா எல்லாம் சுபமாக முடியவேண்டுமென்பது தான் என் எண்ணம். தாங்கள் இஷ்டத்துக்குத் தடையாக இருக்க விரும்புவேனா? ஆனால் ஒன்றுமட்டும் உங்களை வேண்டிக்கொள்கின்றேன். அதற்குமட்டும் சம்மதிப்பீர்களா?

**சேகரர் :** அதென்ன, ரமணி?

**ரமணி :** தாங்கள் கல்யாணத்தை என்னுடைய தலயாத்திரைக்குப் பின் வைத்துக்கொள்ள வேண்டுகின்றேன்.

**சேகரர் :** இவ்வளவுதானே, உன்னிஷ்டப்படியே.

## காட்சி 3

இடம்: **பேரூர் நாட்டில் மந்திரி வீடு அந்தரங்க அறை** நேரம்: **மாலை**

[ *மதிசீலரும் ரமணிதேவியும்* ]

**மதிசீலர்:** அம்மா, தங்கள் சொந்த ஊரும் வந்த வேலையும் அறிவிக்கலாமோ?

**ரமணி:** அதற்காகத்தானே இவ்வளவு தூரம் தங்களைத் தேடிக்கொண்டு வந்திருக்கின்றேன். ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு பௌர்ணமி தினத்தன்று நடந்த நிகழ்ச்சிகள் உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஒரு பெண் மறைந்ததும்...

**மதிசீலர்:** ஒரு பெண்ணா, இரு பெண்களல்லவா மறைந்தனர். இழி குலத்தில் பிறந்த தாசி ஒருத்தி. உத்தம குலத்தில் பிறந்தவள் மற்றொருத்தி. அம்மா, அவர்களைப்பற்றியா தகவல்கள் கொண்டு வந்திருக்கின்றாய்.

**ரமணி:** அதோ, படமெடுத்து வைத்திருக்கின்றீர்களே. இவள்தானே புஷ்பாதேவி. தங்கள் மகள்.

**மதிசீலர்:** ஆம், அன்று மறைந்த மற்றொரு பெண்ணும் இவளேதான். அம்மா, இவளைப்பற்றி உனக்கு எதுவும் தெரியுமா? இவள் உயிரோடிருக்கின்றாளா? எங்கிருக்கின்றாள்.

**ரமணி:** ஏதோ சில விபரங்கள் மட்டும் எனக்குத் தெரியும். தங்கள் மகள் ஒரு தகுந்த இடத்தில் தோழியாக அமர்ந்து வாழ்க்கையைக் கழித்து வருகின்றாள்.

**மதிசீலர்:** அம்மா, நீ வேறு யாரையாவது கண்டிருப்பாய். என் மகள் தோழி வேலை செய்து தனிமையாகக் காலங் கடத்த அவசியமே யில்லையே.

**ரமணி:** நான் சொல்வதில் நம்பிக்கை யில்லையானால் நான் விடைபெற்றுக்கொள்கின்றேன். ஏதோ தெரிந்ததைச் சொல்லித் தங்களைத் தேற்றலாம் என்றுதான் வந்தேன். விபரங்களைக் கூறி முடிப்பதற்கு முன்னரே தாங்கள் அவநம்பிக்கை யுறுகிறீர்கள்.

*[சேவகன் ஓடி வருகின்றான்]*

**சேவகன்:** சுவாமி, ஏதோ அவசரமாக மன்னரே இங்கு வந்திருக்கின்றார்கள்.

**ரமணி:** *(எழுந்திருந்து)* நான் சென்று வருகின்றேன்: நல்ல காரியத்திற்குப் பல நிரடுகள்.

**மதிசீலர்:** அம்மா, அவசரம் வேண்டாம். தாகத்தால் தவிப்பவனுக்குத் தண்ணீர் காட்டியது மட்டுமல்ல. தண்ணீரும் கொடுத்தாலல்லவா அவனுயிர் தழைக்கும். அந்த நிலையிலா என்னை விட்டுச்செல்ல அவசரப்படுகின்றாய்.

**ரமணி:** மதிசீலரே, அரசர் வந்திருப்பதை மறந்து விட்டீர்களே. அவரை அனுப்பி வாருங்கள். காத்திருக்கின்றேன்.

*(மதிசீலர்வெளியே சென்று மறுபடியும் பேரூர் மன்னரோடு திரும்புகின்றார். ரமணிதேவி எழுந்திருந்து நமஸ்கரிக்கின்றாள்,)*

**மதிசீலர்:** அரசே, இவர்கள்....

**ரமணி:** ரமாமணி என் பெயர். புதூர் எனது நாடு. தங்களைக் காணும் பாக்யம் கிடைத்ததற்கு நான் மதிசீலருக்கு நன்றியுடையவளாகின்றேன்.

**குமரர்:** உன்னைப் பார்க்க நானும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**மதிசீலர்:** அரசே, தாங்கள் இந்நேரத்தில் அபூர்வமாக வந்திருப்பதிலிருந்து ஏதோ முக்கியமான அவசர வேலை இருக்குமென்று தோன்றுகின்றது.

**குமரர் :** முக்கியமான விஷயம்தான். ஆனால் அவ்வளவு அவசரமில்லை.

**மதிசீலர் :** அரசே, இந்தப் பெண்மணி எனக்கு என் அருமை மகளைப் பற்றிய தகவல் கொண்டு வந்திருக்கிறார்கள்.

**குமரர் :** வெகுதூரத்திலிருந்து வந்திருப்பதால்தான் ரமாமணியும் களைப்போடு தோன்றுகிறார்.

**மதிசீலர் :** அரசே, கொஞ்ச நேரம் மன்னியுங்கள். இதோ வந்துவிடுகின்றேன்.

*[உள்ளே வேகமாகச் செல்கின்றார்.]*

**குமரர் :** ரமாமணி, நாம் ஏற்கெனவே சந்தித்திருக்கின்றோமா ?

**ரமணி :** அரசே, இதே கேள்வியை துஷ்யந்தன்கூட சகுந்தலையை முதன் முதலில் பார்த்தபோது கேட்டிருக்கலாம். அரசே, மன்னிக்கவேண்டும். ஏதோ அவசரப்பட்டு உளறிவிட்டேன்.

**குமரர் :** பரவாயில்லை ரமாமணி. உனது துடுக்குத்தனமும் எனக்குத் திருப்தியையே அளிக்கின்றது. ஆனால் நீ சொன்னபடி நான் கேள்வி போடுவதற்குப் புதூர் நாட்டு இளவரசியல்லவா எனக்கு வேண்டும்.

**ரமணி : *(திடுக்கிட்டெழுந்து)*** அரசே, புதூர் நாட்டு இளவரசியா ?

**குமரர் :** உனது பெயருக்கும் உருவத்திற்கும், அவளது உருவுக்கும் பெயருக்கும் கொஞ்சம்தான் வித்தியாசம். நீ அவளை உரித்து வைத்தாற் போலல்லவா விளங்குகிறாய்.

**ரமணி : *(பெருமூச்செறிந்து)*** அரசே, புதூர் நாட்டு இளவரசியைத் தாங்கள் ஏற்கெனவே பார்த்திருக்கின்றீர்களா?

**குமரர்:** உனக்கு ஏனம்மா அதில் அவ்வளவு அக்கரை. நான் அவளை நேரில் கண்டிருந்தால் நான் ஏன் இப்படி காலம் கழிக்க வேண்டும். அவள் படம் என் அறையில் அலங்கரித்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறொன் றறியேன்.

**ரமணி:** அவள் படம் உங்கள் அறையில் இருக்கக் காரணம்?

**குமரர்:** அழகான படத்தை என் அறையில் வைத்துப் பார்ப் பதில் குற்றமா? இன்பத்திற்காகத்தானே உலகெல் லாம் சுற்றி அலைகின்றோம். அந்த இன்பமே உரு வெடுத்துக் காட்சியளித்தால் அந்தப் படத்தை உதறித் தள்பவரும் உண்டோ? அந்த இன்பத்தை உருவாக்கித் தந்த ஓவியக்காரன், மோகனையும் நான் இப்போது நினைக்காமலிருக்க முடியவில்லை. எனக்கு அந்தப் படம் என்றும் அழியா இன்பமாக ஆறுதல் அளித்து வருகின் றது. உன்னைக் கண்டதிலிருந்தும் ஏதோ விவரிக்க முடியாத ஒரு மகிழ்ச்சி என்னை அறியாமலேயே பொங்கு கின்றது. உன்னுடைய பேச்சும் என்னை இறும்பூதுறச் செய்கின்றது.

**ரமணி:** அரசே, போதும், போதும். விளையாட்டே வினையாகி விடவேண்டாம். ஒரு மகிழ்ச்சிதான் ஒரு வெறும் படத் தையே உங்கள் அறையில் உங்கள் கைவசம் ஆக்கி விட்டது. உங்கள் மற்றொரு மகிழ்ச்சியால் அந்தப் படத்திற்கு நேர்ந்தது எனக்கும் நேரவேண்டாம்.

***(தன் முத்துமாலையைக் கழற்றி அரசர் ரமணியிடம் வந்து கொடுக்க, ரமணி மறுக்க முடியாதபடி தயக்கத்தோடு ஏற்றுக்கொள்ளுதல். மதிசீல ரும் திரும்பி வருகிறார். அவர் பின் ஒரு பணி யாள் சிற்றுண்டியோடு வருகிறான்)***

**குமரர்:** மதிசீலரே. ரமணியின் பேச்சுக்கள் மணி மணியாக இருக்கின்றன. அதனால்தான் என் முத்துமாலையையும்

அவளுக்கு என் ஞாபகார்த்தமாக அளித்தேன். (**மதிசீலர் பால் கொடுக்க அருந்தி விட்டு**) நான் வந்த வேலையை மறந்து விட்டேனே. கொஞ்ச நேரம் என்னோடு வருகின்றீர்களா. ரமாமணி வணக்கம். இதோ கொஞ்ச நேரத்தில் மதிசீலரை அனுப்பி விடுகின்றேன்.

**ரமணி:** என்னுடைய அன்பார்ந்த நன்றி மன்னவா.

**மதிசீலர்:** அம்மா, சிரமபரிகாரம் செய்து கொள்ளுங்கள். நான் சீக்கிரமாக வந்து சேருகின்றேன்.

## காட்சி 4

*[மந்திரி வீட்டில் வேறோர் அறை]*

**மதிசீலர்:** அம்மா, என் மகளைப்பற்றிய முழு விபரங்களையும் சொல்லம்மா.

**ரமணி:** உங்கள் மகளை அழைத்துச் சென்றவர் அவள் காதலர் மோகனரே.

**மதிசீலர்:** நான் நினைத்தது சரியாய்ப் போச்சு. நான் அப்பொழுதே நினைத்தேன், அந்த ஒன்றுமில்லாப் பயலோடு அவள் ஓடியிருப்பாளென்று.

**ரமணி:** பூருவும் கேளுங்கள். கலைச்செல்வரை நம்பி ஓடினுள். ஆனல், கலைஞரைப் பைத்தியம் என்று புதூர் அரசர் சிறைப்படுத்தினர்.

**மதிசீலர்:** என்ன விபரீதம். மோகன பைத்தியமானன்! ஐயோ, என் மகள் என்னவானள்.

**ரமணி:** நான் முன் சொல்லியபடி வேறு வழியின்றி அரசாங்கத்தில் தோழி வேலையில் அமர்ந்தாள்.

**மதிசீலர்:** என்னுடைய ஒரே மகள். என் உயிருக்குயிராக வளர்த்தேன். அவள் ஆசை நாயகனோடு இல்லறம்

நடத்த நான்தான் தடைசெய்தேன். அவள் அண்டிய அயல் நாட்டிலுமா கடவுள் அவள் நாயகனைப் பிரித்தார். ஐயோ, இந்த அபகேட்டிற்கெல்லாம் நான் தானம்மா காரணம்.

**ரமணி:** மதிசீலரே, பயப்படவேண்டாம். உண்மையில் மோகன் பைத்தியமாகிவிடவில்லை அவரைச் சிறைப் படுத்தியவர்கள்தான் பைத்தியக்காரத்தனமாக நடந்து கொண்டனர். இவைகளை நிரூபிக்க உங்கள் உதவி தான் அவசியமாகின்றது.

**மதிசீலர்:** கடைசி வேளையிலாவது நான் தந்தையின் கடமையைச் செய்ய உதவி செய்யம்மா.

**ரமணி:** மதிசீலரே, மறைந்த தாசி ராஜம் இப்போது ராணி பீடத்தில் அமரச் சதி செய்து விட்டாள். அவளால் நேர்ந்த விபரீதங்களே இவ்வளவும்.

**மதிசீலர்:** ரமாமணி, ராஜமா உயிரோடிருக்கின்றாள்! அவளா இவ்வளவுக்கும் காரணம்?

**ரமணி:** மதிசீலரே, அரசர் வந்து சென்ற அவசர வேலையை இப்போது கூடவா என்னிடம் சொல்லக் கூடாது?

**மதிசீலர்:** அரசர் வந்தது அவர் தங்கை விஷயமாக.

**ரமணி:** இனிமேலும் மறைக்க வேண்டாம். வசந்தா ஒரு பாபமும் அறியாத ஒப்பற்ற கற்பின் கனல் என்பதை அவள் அண்ணா அறிவாரா.

**மதிசீலர்:** ஆஹா, உனக்கு யாவும் தெரிந்திருக்கின்றதே. ஆனல், நீ சொல்வது மட்டும் உண்மையானல் எங்கள் அரசர் வாழ்வில் திரும்பவும் இன்பத் தளிர்கள் பூரிக்குமே.

**ரமணி:** இப்போது வசந்தா நிலைதான் என்ன, மதிசீலரே?

**மதிசீலர்:** அவள் எதிர்பாராத நடத்தையின் மோசத்தைக் கண்ட அரசன் அவள் போக்கின் உண்மையை அறிய அரும்பாடு பட்டார். ஆனால் இளவரசிமேல் இந்தப் பாழும் பழியைச் சாட்டி நேரில் பிடித்துக் கொடுத்த தாசியும் பிடிபட்ட புது மனிதனும் பறந்து விட்டதனால் ஒன்றும் புரியா நிலையில் அரசரானார். இளவரசியும் உண்மையை நீதி மன்றத்தில் மட்டும் உரைப்பதாகக் கூறுகின்றார்களேயன்றி, தன்னைச் சந்தேகப்படும் அண்ணனிடத்தில் உண்மையை உரைக்க விரும்ப வில்லை. அரசர் இருதலைக் கொள்ளி எறும்பு போல் தவிக்கின்றார். அதற்காகச் சபைகூட்டும் நோக்கத் தோடே என்னிடம் ஆலோசனை கேட்கவே விரைந்து இங்கு வந்தார். நாளைக் காலை நான் அவரை மறுபடி யும் சந்திக்கின்றேன்.

*(ரமணி ஆழ்ந்து யோசித்து எழுந்து மதிசீலர் தோள்களில் கையை வைத்து)*

**ரமணி:** மதிசீலரே, நம்முடைய காரியத்தில் வெற்றி பெற ஒரே வழிதானுண்டு. உங்கள் இளவரசியும் அரசருமே இந்தத் துன்பத்திலிருந்து விடுதலை அடைய ஒரே வழி வழிதானுண்டு. உங்கள் ஒரே மகளை அவள் உயிருக் குயிரான மோகனனோடு கூட்டி வைக்கவும் ஒரே வழி தானுண்டு. அதற்குச் சம்மதிப்பீர்களா, என்னுடன் ஒத்துழைப்பீர்களா?

**மதிசீலர்:** குருடனுக்குக் கண் மீண்டும் வர உதவிக்கு வருப வரை உதறித் தள்ளுவாருண்டா ரமாமணி? இந்த மந்திரி கணையாழி மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். உனக்கு வேண்டும் ஒத்தாசை புரிகின்றேன்.

**ரமணி:** மதிசீலரே, இந்த விசாரணையை மட்டும் புதூரில் நடத்த ஏற்பாடு செய்யுங்கள். புதூர் மன்னரே நீதி வழங்கவும் ஏற்பாடு செய்யுங்கள்.

**மதிசீலர் :** அம்மா, நீ சொல்வது நடக்கும் காரியமா. அரசர் இந்த விஷயங்களை மிகவும் ரகசியமாகவே பாவிக்கின்ருர். தன் மக்களுக்கே தெரியாத ரகசியத்தை மற்ருேர் நாடு கண்டு சிரிக்கவா சம்மதிப்பார் ?

**ரமணி :** நன்ருக யோசனை செய்து சொல்லுங்கள். இந்த விசாரணைக்கு வரவேண்டிய சாட்சிகள் பாதிக்குமேல் புதூர் அரசாங்கத்தில் இருக்கின்ருர்கள். அது மட்டு மல்ல. தங்களுக்கு ஞாபகமிருக்கலாம். நாற்பது வருடங்களுக்கு முன்பு புதூர் ராஜகுடும்ப விஷயமாக நடந்த ஒரு விசாரணைக்குப் பேரூர் மன்னவர் நீதிபதி யானதும் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

**மதிசீலர் :** ரமாமணி, நீ ஒரு அரிய அறிவாளி. உன்னை யாரென்றே என்ஞல் ஊகிக்க முடியவில்லை.

**ரமணி :** உண்மையெல்லாம் விளங்க இருக்கும் நாட்கள் ரொம்ப தூரத்தில் இல்லை. நான் இதைத் தங்களுக்கு எதற்காக நினைவூட்டுகிறேன் என்பதை இப்போதாவது உணர்கின்றீர்களா. அதைப்போலவே இந்த அரசாங்க குடும்ப வழக்கைப் புதூர் அரசாங்கத்தில் ரகசியமாக விசாரிக்க ஏற்பாடு செய்ய முடியும். ஒரு அரச குடும் பத்து விவகாரங்களைக் கேட்டுத் தீர்ப்புச் சொல்ல மற் ருெரு அரசகுடும்பத்தாருக்குத்தானே தகுதியும் உண்டு. இவ்வூர் மன்னவரும் தன் சாட்சியத்தை எழுதியனுப்பி விட்டால் போதும். அரச கௌரவத்திற்குப் பங்கம் நேர இடமில்லை. உண்மையும் விளங்கி விடும்.

**மதிசீலர் :** ***(எழுந்து, ஆவலுடன்)*** அம்மா, நீ சொல்வதைச் செய்தே காண்பிக்கிறேன்.

**ரமணி :** ஆனல் ஒன்று மட்டும் தாங்கள் முன்னெச்சரிக்கை யோடு செய்ய வேண்டும்.

**மதிசீலர்:** அதென்ன, ரமாமணி.

**ரமணி:** எங்கள் புதூர் நாட்டு மன்னவருக்குத் தாங்கள் அனுப்பும் லிகிதத்தில் கீழ்க்கண்ட விண்ணப்பம் ஒன்றைத் தவிர, வேறு விஷயங்கள் யாவும் வர வேண்டிய அவசியமே இல்லை. நீதிமன்றத்திலேதான் அவரவர்கள் சொல்ல வேண்டிய விஷயங்கள் வெளிவர வேண்டும்.

**மதிசீலர்:** அந்த விண்ணப்பம் என்ன ?

**ரமணி:** "தாஸி ராஜம் முதலியவர்கள் சம்பந்தப்பட்ட வழக்கைப் பேரூர் நாட்டு அரசனாகிய நான் விசாரிக்க முடியவில்லை. காரணம், அரசும் சம்பந்தப்பட்டிருப்பதால். ஆகவே சம்பிரதாயத்தை ஒட்டியும் பரம ரகசியமாக இருத்தலாலும் தங்களின் புதூர் செங்கோல் நீதியையே நாடுகின்றேன்" என்ற விண்ணப்பம்மட்டும் பேரூரரசரிடமிருந்து வந்தால் போதும்.

**மதிசீலர்:** அப்படியே செய்கின்றோம்.



## அங்கம் V

### காட்சி 1

காலம்: **மாலை** இடம்: **புதூர் மாளிகை**

*[சேகரும் ரமணியும். ஒரு சேவகன் ஓடி வரு கின்ருன்]*

**சேவகன்:** அரசே, பேரூர் அரச குடும்பத்தார் வந்து விட்டார்கள். அந்த நாட்டு மந்திரியும் தங்களைக் காண விழைகின்ருர்.

**சேகர்:** அவரை இங்கேயே அழைத்துவா.

**ரமணி:** அண்ணு, ரகசியம் ரகசியம் என்றுசொல்லிக் கடைசியில் பேரூர் அரசரையே அவர் தங்கை திருமணத்திற்கு அழைத்து விட்டீர்களா அல்லது அவரை ஆச்சரியக் கடலில் தள்ளத் தீர்மானமா?

**சேகர்:** ரமணி, அவர்கள் என் கல்யாணத்திற்காக வரவில்லை. அவர்கள் குடும்பத்தில் விளைந்த ஒரு குழப்பத்திற்குக் காரணத்தைக் காணவே வந்திருக்கின்ருர்கள். வந்த இடத்தில் முதலில் நீதியைக் காணட்டும். பின் கல்யாணத்தைக் கண்டு உண்மையைக் கண்டு உளம் பூரிப்படையச் செய்வோம். நமது செங்கோல் நீதியை நாடி வந்திருப்பதால் நான் உன்னை அழைத்து வரச் சொன்னேன். இதோ இந்த விண்ணப்பத்தைப் படித்துப்பார்.

*(பேரூர் மந்திரி வருகின்ருர். புதூர் மன்னரை வணங்கிக் கூர்மையாக ரமணி தேவியைப் பார்த்தல்)*

**சேகர்:** அமருங்கள். இவள் எனது தங்கை. நாளை காலை அந்தரங்க சபா மண்டபத்தில் சபை கூட்டுகின்றோம். அந்த சமயம் எனது தங்கை ரமணிதேவியே தங்கள் நீதிபதியாகின்றாள்.

**மந்திரி:** அரசே, ரமணிதேவி, நீதிபதியாவதில் எனக்கு மகிழ்ச்சிதான். ஆனாலும் நாளை விசாரணைக்கு வந்திருப்பவர்கள் எங்கள் நாட்டு அரச குடும்பத்தினரல்லவா, அவர்கள் வந்திருப்பதும் தங்கள் நாட்டுச் செங்கோலையல்லவா நாடி வந்திருக்கின்றனர்.

**சேகர்:** அதை மறக்கவில்லை, மதிசீலரே. நாளை காலையும் இந்நாட்டுச் செங்கோலைக் கொண்டே என் தங்கை தங்களுக்கு நீதி வழங்க ஏற்பாடு செய்திருக்கின்றேன். இதோ பாருங்கள் இந்த அரச கணையாழியை என் தங்கையிடம் இப்பொழுதே சேர்த்து விட்டேன். (தன் தங்கையின் விரலில் தன் கணையாழியைச் சேர்த்தல்)

**ரமணி:** எனக்கு ஒன்றும் விளங்கவில்லை, அண்ணா.

**சேகர்:** ரமணி, இதோ விஷயத்தை விளக்கி விடுகின்றேன். இந்தப் பேரூர் நாட்டின் விசாரணையில் நானும் ஒரு சாட்சியாகின்றபடியால்தான் இந்த ஏற்பாடு செய்கின்றேன். நீயே தீர்ப்புச் சொல்.

**மதிசீலர்:** ரமணிதேவி ஒரு விவேக சிந்தாமணி. அவர் தீர்ப்பு உண்மையின் வெற்றியாகும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

**சேகர்:** மதிசீலரே, தாங்கள் ஏதும் சொல்லிக் கொள்ள வேண்டுமானால் ரமணிதேவியிடம் உரையுங்கள். நான் வருகின்றேன்.

***(அரசர் சென்று விடுகின்றார்)***

**மதிசீலர்:** தேவியிடம் நான் ஒன்று துணிந்து கேட்கலாமா?

**ரமணி :** அதற்கென்ன தடை ? சொல்லுங்கள்.

**மதிசீலர் :** உலகில் ஒருவரைப்போல் மற்றொருவர் இருப்பது மிகவும் சொற்பம். ஆனாலும் தங்களைப் போலவே உரு விலும் திருவிலும் ஒத்த ஒரு பெண்மணியை நான் சில தினங்களுக்கு முன் கண்டேன். எங்கள் நாட்டு மன்னர் கூட இந்த அருமையான ஒற்றுமையைப் பற்றி வாய் விட்டுச் சொல்லாமலிருக்க முடியவில்லை.

**ரமணி :** மதிசீலரே, உலகிலே நடக்கும் விசித்திரங்களுக்குக் குறைச்சலில்லை. உரு ஒற்றுமையினாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. நாளை நிகழ்ச்சியில் தாங்கள் சொல் லிக்கொள்ள வேண்டியதேதாகினும் உண்டோ!

**மதிசீலர் :** நாளை நடக்கும் விசாரணையில் எங்கள் அரசரும் சாட்சியாகின்றபடியால் அவர் சொல்ல வேண்டியதை இந்த லிகிதத்தில் எழுதி விட்டார்கள்.

**ரமணி :** ஒரு வேளை, அவர் சபைக்கே வரவேண்டியிருந் தால்.......

**மதிசீலர் :** அவர் வர அவசியமிருக்காதென்றே நினைக்கின் றார். ஆனால் அவசியமானால் வருவதற்கும் தயங்க மாட்டாரென்றே எண்ணுகிறேன்.

**ரமணி :** மதிசீலரே, நாளை நாம் சந்திப்போம், அந்தரங்க சபா மண்டபத்தில். நீதியைப்பற்றிக் கவலையே வேண் டாம். நாளை உண்மையின் வெற்றியே உத்தமர்கள் களிப்பாகும் என்பது என்னுடைய தீவிர நம்பிக்கை. இதோ என் கழுத்தில் கமழுகின்ற முத்து மாலையும் உண்மையின் வெற்றிக்கு அறிகுறியாக விளங்குவதைத் தாங்கள் காணவில்லையா.

## காட்சி 2

காலம்: **மாலை** இடம்: **நந்தவனத்தை ஒட்டிய கூடம்**

*[அரசி பேரூர்நாட்டரசர் சாட்சியத்தை வாசித்துக் கொண்டிருக்கிறார்.]*

**சேவகன்:** தேவி, தங்களைக் காணப் பேரூரிலிருந்து ஒரு கிழவர். மிக்க அவசரமான வேலையாம்.

**ரமணி:** பேரூரிலிருந்தா? அழைத்துவா.

**(கிழவர் கைத்தடியுடன் வந்து வணங்குகின்றார்)**

**ரமணி:** ஐயா, இந்தத் தளர்ந்த வயதிலா அவசர வேலை மேற்கொள்வது? என்ன விஷயம்?

**குமரர்:** **(குமரன் கிழ உருவில் நகைப்போடு)** நாம் ஏற்கெனவே சந்தித்திருக்கின்றோமா! இதே கேள்வியை துஷ்யந்தன் கூட சகுந்தலையை முதல் முதலில் கண்ட பொழுது கேட்டிருக்கலாமல்லவா?

**ரமணி:** **(திடுக்கிட்டெழுந்து சிரிப்புடன்)** அரசே, அமருங்கள். புரிந்துகொண்டேன் தங்களை. ஆனால் சகுந்தலை இதை ஒரு கிழ வேடக்காரரிடமிருந்து கேட்டதாகத் தெரியவில்லையே. அரசே, தாங்கள் இதை யாரிடம் கேட்க விரும்பினீர்களோ அவளே தங்களிடம் இப்பொழுது கிட்டிவிட்டாள். தாங்களும் கேட்கத் தயங்கவில்லை. தாங்கள்கொண்ட இந்தக் கனிந்தகோலத்தை காணும் போதுகன்னி வள்ளியை ஏமாற்றக் குமரன் கிழ உருக் கொண்டதே ஞாபகத்திற்கு வருகின்றது. தங்கள் பெயருக்கும் பொருத்தமாகவே இருக்கின்றது.

**குமரன்:** ரமணி, உன்னைத் தாகமென்று சொல்லிச் சுனைக்கு அழைத்துச் செல்லமாட்டேன். யானையை வரவழைத்து உன்னைப் பயமுறுத்தமாட்டேன்.

**ரமணி :** ஆனால், சுனையிலும் ஆழமான, யானையிலும் பெரிதான தங்கள் பழைய தாகத்திற்காக ஒரு நீதி மன்றத்துக்கே இழுத்து விட்டீர்கள். ஆடவரின் மனமாற்றம் பச்சோந்தியின் நிறம் மாறுவது போலல்லவா இருக்கின்றது. தாங்கள் என் மீது கொண்ட காதலும் தாங்கள் முதலில் வேசிமேல் கொண்ட காதலைப்போல் கானல் நீராக முடிந்தால்........

**குமரர் :** கண்மணி நான் ராஜத்தின்மீது கொண்ட ஆசையை ஒரு லாகிரி உண்டவன் மயக்கம் என்றே சொல்வேன். அது எனது இதயத்தை அணைந்த நமது உயிர்க் காதலைப் போன்றதல்லவே.

**ரமணி :** இதே பதிலைத்தான் மாதவியிடமிருந்து மீண்டும் வந்த செட்டி மகனும் தன் பத்தினியிடம் பகர்ந்திருப்பான் என்று நினைக்கத் தோன்றுகிறது.

**குமரர் :** கண்மணி, நான் உன் தூய காதலுக்கு அருகதையற்றவன் என்று முடிவு கட்டவும் என் முன்னாள் நடத்தை உதவுகின்றதோ.

**ரமணி :** அரசே, அந்தச் சந்தேகமே வேண்டாம். நான் தங்கள் வசமானவுடன் தாங்கள் மட்டும் துஷ்யந்தன் போன்று என்னை நடுவில் உதறித்தள்ள மாட்டீர்களென்றே நினைக்கின்றேன்.

**குமரர் :** அந்த வீண் சந்தேகங்களுக்கு இங்கு இடமே இல்லை. நான் படவேண்டிய வேதனைகளையெல்லாம் அனுபவித்து விட்டேன். இனிமேல் உன்னால்தான் எனக்கின்பம்.

**ரமணி :** ஸ்வாமி, இன்னும் ஏன் இந்த வருத்தம். நாளை நீதி மன்றமே நமக்குச் சுவர்க்க வாசலாகத் திகழப் போகின்றதே. ஆனால் நாளை தாங்கள் நீதி மன்றத்துக்கு வருகின்றீர்களா ?

**குமரர் :** கதவு திறப்பதாயிருந்தால் சுவர்க்க வாசலுக்கா வரத் தயக்கம். ஆனால் இதே கிழக் கோலத்திலேதான்.

**ரமணி :** அப்படியானால் மிகவும் நன்று. நான் ரமாமணிக் கோலம் பூண்டதும் தாங்கள் கிழக் கோலம் கொள்வதும் எல்லாம் உண்மையைக் காண்பதற்கே! நாளை......

**குமரர் :** நாளை நீயே நீதிபதியாவதும் முற்றும் பொருந்தும். அந்தோ, என் தங்கையைப் பற்றி நினைக்கும்போதே பகீரென்கின்றது. அவள் செல்லமாக வளர்ந்தது, பின் அவள் விபரீதமான செய்கை, அதற்குப்பின் அவள் உலகை வெறுத்து மாறிப்போன ஊமை வடிவு, நான் சற்றும் விரும்பாத ஆனால் அவள் வற்புறுத்தும் இந்த விசாரணை.... .... இவைகளை நினைக்கும்போதே அன்பு, வெறுப்பு, துன்பம், இரக்கம் ஒன்றன்பின் ஒன்றாக மனத்தில் அலைமோதுகின்றன. ஐயோ, பாவம்!

**ரமணி :** நாளை உண்மை வெளியாகும்வரை உங்களுக்கு ஏன் இந்த வீண் கலக்கம். வண்ணமதி கொழிக்கும் வானைக் காணுங்கள். தங்கள் அன்பால் தழைத்து உளம் உடல் பூரிக்கும் என்னைக் காணுங்கள்.

**குமரர் :** என் கண்மணி, ரமணி.

***(இருவரும் அணைதல்)***

## காட்சி 3

காலம் : **நடு இரவு** இடம் : **ரமணிதேவி அறை**

*[ரமணிதேவி அமர்ந்திருந்தல்]*

**ஒற்றன் :** அயல் நாட்டிலிருந்து வந்திருக்கும் யாவரும் நிம்மதியாகத் தூங்குகின்றனர். அவர்களுடன் வந்திருக்கும் தேவிமட்டும் உறங்குவதாகத் தோன்றவில்லை.

**ரமணி :** அது உனக்கெப்படி தெரிந்தது?

**ஒற்றன் :** தேவி, அவர்கள் அறையுள் உள்ள விளக்கு இன்னும் பிரகாசத்துடன் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றது. அது தங்கள் அண்ணார் கவனத்தைக்கூட இழுத்து விட்டது.

**ரமணி :** என் அண்ணா இப்போது உறங்கவில்லையா? வசந்தா தேவி எங்கிருக்கின்றாள்.

**ஒற்றன் :** தேவி, வசந்தாதேவி மிகவும் நிம்மதியாக உறங்குகின்றார்கள். தங்கள் அண்ணார்மட்டும் உறக்கத்தை விட்டு அந்தப் பெண்மணி தங்கியிருக்கும் அறையின் உச்சியிலிருக்கும் நமது மாடி சாளரத்தின் வழியே பார்ப்பதும் யோசனையில் ஆழ்ந்து அங்குமிங்கும் உலவுவதுமாக இருக்கின்றார்.

*[ஒரு சேவகன் ஓடி வருகின்றான்]*

**சேவகன் :** தேவி, தங்கள் அண்ணார் தங்களைக்காண வந்திருக்கின்றார்.

**ரமணி :** உடனே உள்ளே வரச் சொல். ***(ஒற்றரை நோக்கி)*** கண்ணப்பரே, நீங்கள் உங்கள் வேலையைக் கவனித்துக் கொள்ளுங்கள். வசந்தாதேவிக்கு இங்கு நடப்பவை யாவும் தெரியக்கூடாது. அவர் நிம்மதியாகத் தூங்கவும், அயல்நாட்டிலிருந்து வந்திருப்பவர் விஷயம் யாருக்கும் தெரியாமலிருக்கவும் நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்.

*[ஒற்றர் தலைவன் கண்ணபர் செல்ல, அரசர் சேகரர் வருகின்றார்]*

**ரமணி :** அண்ணா, தாங்கள் இன்னுமா தூங்காமல் இருப்பது. நாளை தங்கள் வாழ்விலேயே நிகழும் மறக்க முடியாத ஒரு ஒப்பற்ற நாள், சுபதினம், திருமணத் திருநாள். அதை நன்றாக அனுபவிக்க இன்று நீங்கள் நிம்மதியாக வல்லவா தூங்கவேண்டும்.

**சேகரர்:** ரமணி, உன் கேலியை விட்டபாடில்லை. என் மனத்திலுள்ளதை மட்டும் நீ உணர்ந்தாயானால் நீ என்னைக்கண்டு நிச்சயம் இரக்கம் காட்டுவாய்.

*[சேகரர் மிக்க கவலையோடு மஞ்சத்தில் சாய, ரமணி அவரிடம் சென்று மிகவும் பரிவோடு காலடியில் அமர்கின்றாள்]*

**ரமணி:** அண்ணா, அப்படியென்ன நேர்ந்துவிட்டது. நானில்லையா உங்கள் கவலையைத் தணிக்க. அல்லது என்னிடம் தாங்கள் தற்சமயம் ஒப்புவித்திருக்கும் செங் கோலில்லையா தங்கள் துயரைத் தீர்க்க.

**சேகரர்:** ரமணி, என் தங்கையும் தரணி ஆளும் கோலும் இந்தப் பேரூர் நாட்டின் வழக்கின் உண்மையைக்கண்டு குற்றவாளியைக்கண்டு தக்க தீர்ப்பளிக்கலாம். ஆனால் நீயும் நமது அரசும் எனக்கு இழந்த நிம்மதியைத் தர முடியுமா. வரண்ட உற்சாகத்தை மீண்டும் ஊற் றெடுக்கச் செய்யமுடியுமா. என் இதயத் துடிப்பை நீ இன்னுமா உணரவில்லை.

*[ரமணி சற்று நெருங்கி அண்ணாவை உட்கார்ந்த படி அணைந்து தாவாங்கட்டையைப் பிடித்தல்]*

**ரமணி:** அண்ணா, தாங்களா இவ்வாறு தளர்ச்சியடைவது. என்னிடம் உள்ளதைச் சொல்லாமல் யாரிடம் சொல் லப் போகின்றீர்கள். அண்ணா, அப்படி என்ன வேதனை ?

**சேகரர்:** ரமணி, கேள். நான் சொல்வதைப் பூராவும் கேள். பிறகு எனக்கு ஆறுதல் மொழி சொல். ஆறு மாதங் களுக்கு முன்பு பேரூரிலிருந்து எனக்கு இரண்டு காதல் கடிதங்கள் வந்தன. நான் கண்டும் கேட்டுமிராத ஒரு தாசியிடமிருந்தே அந்தக்கடிதங்கள். அவளிடமிருந்து மறுபடியும் ஒரு கடிதமும் படமும் வந்தன. படத்தைக்

கண்டேன். ஒப்பற்ற ஓவியம். படத்தில் கண்ட அழகைப்போல் நான் எங்கும் கண்டதேயில்லை. உலகிலும் இத்தகைய அழகியுண்டோ அல்லது ஓவியக்காரன் கற்பனையோ என்பதை அறிய ஆவல் கொண்டு நான் மாறுவேடந்தாங்கி, அந்தரங்க அரசாங்க அலுவல் என்று சொல்லி உங்களை ஏமாற்றி அயல் நாட்டுத் தாசி வீட்டுக்குச் சென்றேன். ஆனல் நான் அங்கு கண்டதென்ன. ஓவியக்காரன் கைவேலை அவள் அழகை ஒரு கோணத்தில்தான் தீட்ட முடிந்தது. அவள் குறுநகையைத்தான் காட்ட முடிந்தது. அவள் குவளை விழிகளைத் தான் வரைய முடிந்தது. நான் நேரில் அவள் ஒப்பற்ற அழகைப் பல கோணங்களில் பார்வையிட்டேன். அவள் கொவ்வைச் செவ்வாய் மட்டுமா, அவைகளுள் விலை மதிக்க முடியாத முத்துப் பொக்கிஷத்தைக் கண்டேன். உயிரையும் இழுத்துத் தன் வயப்படுத்தும் காந்த விழிகளைக்கண்டேன். சித்திரக்காரன் படம் என் சிந்தையைக் கவர்ந்தது. ஆனல் நேரில் கண்ட அவள் அழகு அவளை என் சிந்தையில் இருத்தியது. அவள் சாதுர்யமும் அறிவு மணம் கமழ்ந்த சொற்களும் என்னை அவள் வசப்படுத்தின. நான் உண்மையாகவே அவள் மீது காதல் கொண்டேன். அவளை மணப்பதாகவும் உறுதி கூறி மறு பௌர்ணமியில் அவளை இங்கழைத்துவரத் திட்டமிட்டுச் சென்றேன். ஆனல் இத்தகைய அழகுச் செல்வம் பறிபோவதை யார்தான் விரும்புவர். பேரூர் நாட்டு மன்னர் இதை எப்படியோ அறிந்து என் திட்டத்தைச் சிதறடித்தார்.

**ரமணி :** அண்ணு, பேரூர் மன்னன் இதில் ஈடுபடக் காரணம் ?

**சேகரர் :** அதைத்தான் சொல்ல வந்தேன் ரமணி. பேரூர் நாட்டு மன்னனின் காமக்கிழத்தியே தாசி ராஜம். அவர் அவள் மீது அவ்வளவு மோகமாயிருந்தாராம். அவள் வேசியாதலால் மற்ருெரு மன்னவனை இழுக்க மன

மாற்றம் கொண்டாள். அதன் விளைவே நான் அங்கு சிறைபட்டது, பேரூர் அரசனுடைய தங்கையால் அன்றிரவே விடுதலை கண்டு இருவரும் இங்கு ஓடி வந்தது, நாளை வசந்தாவை வேறு வழியில்லாமல் என் தேவியாக ஏற்றுக்கொள்ள இருப்பது, தாசி ராஜத்திற்குக் கடுந் தண்டனை காத்திருப்பது.

**ரமணி:** அண்ணு, நாளை கல்யாணத்தை நினைத்து மகிழ்ச்சியடைவதை விட்டு, எதற்கண்ணு இந்த வீண் சஞ்சலம், எதற்கண்ணு இந்தத் தடுமாற்றம்.

**சேகரர்:** நாளை மணத்தில் எனக்கு மகிழ்ச்சி கொஞ்சங்கூட இல்லை. அது என் உள்ளம் பொருந்தாத கட்டாய மணமாகும். ஆனல் அதை மாற்ற வழியின்றித் திகைக்கின்றேன். இன்னும் இப்பொழுதும் என் மனதில் அழியாத சித்திரமாக அமர்ந்து ஆட்சிபுரிவது நான் அன்று அனுபவிக்கச் சென்ற பெண் பதுமையே. இதை நான் சொல்வதற்கு வெட்கப்படவில்லை, அதனுல்தான் நான் சற்று நேரத்திற்குமுன் என் நிலையையும் அவள் நிலையையும்கூட மறந்து, நீ செய்திருக்கும் காவல் ஏற்பாடுகளையும் மறந்து அவளை மாடியிலிருந்து சாளரத்தின் வழியாகக் கண்ணுற்று வந்தேன். ரமணி நான் ஒரு அற்ப தாசிக்காகப் பரிந்து பேச இப்போது வரவில்லை. என் மனது என்னவோ அவளை நிரபராதியென்றே திரும்பத் திரும்பப் பறை சாற்றுகின்றது. அவளுடைய பரிதாபத் தோற்றம் என்னை இப்போது கலக்கி விட்டது. நாளை எனக்கு மணம், அன்றே என்னல் ஒருத்திக்குத் தண்டனை. ரமணி, அவள் குற்றத்திற்கு நானும் பொறுப்பாளியல்லவா? அவள்தான் கடிதமும் படமும் எனக்கு அனுப்பினுளென்ருல், நான் ஏன் என் அறிவை முற்றிலும் துறந்து அப்படி ஓடியிருக்க வேண்டும். நாளை என்மணத்தை நிறுத்திவிடவேண்டும். அல்லாவிடில் அந்த மணமே என்னை ஆயுள் கைதி

யாக்கி விடும். எனக்கு இடி போன்ற மரண தண்டனை யிலும் கொடிதாகி விடும்.

**ரமணி:** அண்ணு, என்ன விபரீதமான யோசனை. தங்கள் மணத்தை நிறுத்துவதா? நாட்டில் விளங்கும் தோர ணங்களையும் வாழை மரங்களையும் மக்களின் மட்டற்ற மகிழ்ச்சியையும் பேரூரரசருக்குக் காட்டவிருக்கும் அதி சயமான காரியங்களையும் வெட்டி வீழ்த்தவா இந்த யோசனை. ஏற்கனவே அவர்களுக்கு ஒரு ஏமாற்றத் தைத்தான் கொடுத்துவிட்டீர்கள். தாங்கள் மணந்து கொள்ளும் பெண் யாரென்றே ஒருவருக்கும் அறிவிக்க வில்லை. அரசருக்குக் கல்யாணம் என்ற களிப்பில் அதைக்கூட அவர்கள் பெரிதாக நினைக்கவில்லை. ஆனுல் அவர்கள் களிப்பையே நீர் பிடுங்கத் திட்டமிட் டால் அது என்ன அவ்வளவு சுலபமான வேலையா. அண்ணு, பேசாமல் போய் உறங்குங்கள். நாளை இந்த மனப் புயலெல்லாம் ஓய்ந்து ஒடுங்கிவிடும். மனதில் நிம்மதி ஏற்படும், உங்களுக்கும் மகிழ்ச்சி பொங்கி விடும்.

**சேகரர்:** ரமணி, எனது கல்யாணத்தை இப்போது நிறுத்த நினைப்பது வீண் நினைவுதான் என்பதை ஒத்துக்கொள் கின்றேன். ஆனுல் இந்தக் கல்யாணத்தால் எனக்கு மகிழ்ச்சி பொங்கும் என்பதைமட்டும் நான் ஒப்புக் கொள்ளவே முடியாது. நான் நாளை வசந்தா தேவியை மணக்க இருப்பது எனக்கு அவள்மீது சுரக்கும் இரக் கத்தால்தான், காதலாலல்ல. இதை நீயாவது புரிந்து கொள்.

**ரமணி:** அண்ணு, உங்களுக்குத் தெரிந்ததைக் கொண்டு எனக்குப் புரியவைக்கப் பார்க்கின்றீர்கள். நீங்கள் நாளை கல்யாணத்தைப் பற்றியே நினைத்துக்கொண்டி ருப்பதால்தான் நாளை வழக்கு ஒன்றிருப்பதைக்கூட மறந்துவிட்டீர்கள்.

**சேகரர் :** புண்ணில் கோலிட்டு ஆட்டுதல் போலல்லவா உன் கேலி இருக்கிறது.

**ரமணி :** அண்ணா புண்ணை ஆற்றவேதான் என் முயற்சிகள். நான் சொல்ல எண்ணியது, நாளை வழக்கால் உண்மையெல்லாம் புரிந்துவிடும் என்பதே. உங்களுக்கும் மகிழ்ச்சி உண்டு.

**சேகரர் :** எனக்கிருக்கலாம். ஆனால்...

**ரமணி :** குற்றமற்ற யாவருக்கும் மகிழ்ச்சி உண்டு.

## காட்சி 4

நேரம் : **காலை** இடம் : **அந்தரங்க நீதிசபை**

***[ரமணிதேவி நீதிபீடத்தில் அமர்ந்திருக்க, கீழே மந்திரி மதிசீலர், பக்கத்தில் வசந்தாதேவி, அவர்களுக்குப் பின் ஒரு மூலையில் வயோதிகர் ஒருவர் வீற்றிருக்கின்றார்.]***

**ரமணி :** வசந்தாதேவி, தங்கள் அண்ணார் இங்கு சாட்சியாகத் தோன்றுவிட்டாலும் அவர் சொல்லவேண்டிய விஷயம் இதோ இருக்கின்றது. நான் வாசிக்கின்றேன், பின் தங்கள் நிலையை விளக்குங்கள்.

***(வாசிக்கின்றாள்)***

"பேரூர் நாட்டுத் தாசி ராஜத்தின் மாயையால் நான் மதிமயங்கிக் காலத்தை வீண்கடத்திய நாட்கள் சில. பௌர்ணமிதோறும் நாங்கள் இருவரும் உல்லாசமாகக் காலங்கழிக்க என் வஸந்த மண்டபத்திற்குச் செல்வது வழக்கமாகிவிட்டது. சென்ற விஜய வருடம் ஆவணி மாதம் பௌர்ணமிதினம் என்னிடம் இன்பமாகப் பொழுதுபோக்க வந்த

தாசி என்னைத் தூக்கிவாரிப்போடும் செய்தியைக் கொண்டு வந்தாள். நாங்கள் பௌர்ணமி இரவை இப்படி வசந்த மண்டபத்தில் இன்பமாகக்கழிக்க, இளவரசியும் தன் இளவயதை விரையமாக்க விருப்பமின்றிக் காமபோதையால் கருத்திழந்து யாவரும் நம்பமுடியாத இழி தொழிலைக் கைக் கொண்டாள். அண்ணார் மோகச் செய்கையால் மனந்துணிந்து, சந்தர்ப்பத்தையும் திறமையுடன் தனதின்பத்திற்குச் சரிப்படுத்த தாசி ராஜத்தின் வீட்டில் பல தாஸர்களுக்குத் தன் அழகையும் உருவையும் விற்கத் துணிந்தாள். இவ்வாறே என்னிடம் கூறினாள் தாசி ராஜம். சொன்னதையும் உடனே நிருபிக்கத் தாசி தன் வீட்டிற்கே என்னை அழைத்துச் சென்றாள். அந்தோ, தாசி ராஜம் சொன்னது உண்மையாக இருந்தது. ஒரு அயல் நாட்டான் காமக் கைகளில் இறுக அணையக் கண்டேன் என் தங்கையை. தாசி ராஜத்தின் சொற்படியே அயல்நாட்டானை அவ்விடத்திலேயே சிறை வைத்து, பார்த்ததைக் கண்ட பேரிடியால் தாக்குண்டு அரண்மனைக்குத் திரும்பினேன். என்னோடு வந்த ராஜம் தூக்கம் வந்ததென்று சென்றாள். சென்றவளை நான் அதற்குப்பின் காணவும் இல்லை. அதே இரவில் அயலூரானும் தப்பிவிட்டான். அன்றிரவே எனக்கு விரோதமாகக் கிளம்பிய ஓவியக் காரன் மோகனும் அவனின் காதலியான எங்கள் நாட்டு மந்திரியின் ஒரே மகளான புஷ்பாவும் மறைந்தனர். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. என் தங்கை நான் கண்டு கொண்டதை ஒப்புக் கொள்ளவேயில்லை. ஆனால் தக்க நீதிசபையில் உண்மையை ஒளிக்காதுவிளம்ப இஷ்டப்பட்டாள். பின்னர்த்தன் இஷ்டத்தைப்பூர்த்திசெய்ய என்னைக் கட்டாயப்படுத்த நான் தங்கள் நாட்டின் செங்

கோஹுக்கே என் தங்கையையும் நான் இதுகாறும் கூறியதையும் நீதிக்காக ஒப்புவிக்கின்றேன்.

**குமரன்**

தங்கள் அண்ணுவின் சாட்சியத்தைப் படிக்கக் கேட்டீர்கள். இப்போது தாங்கள் சொல்லவேண்டிய தைச் சொல்லலாம்.

**வசந்தா:** அரசி, என் வணக்கம். முதன் முதலில் ஓவியக் கலேயால் எங்கள் மாளிகையில் யாவர் மதிப்பையும் பெற்று அரசாங்கப் பதவியும் பெற்றவர் புதூர் நாட்டு மோகன். அவர் எங்கள் நாட்டின் மந்திரி குமாரி புஷ்பாவின் காதலேயும் பெற்ருர். அதே சமயத்தில் தான் எனது அண்ணுவின் ஆசையைத் தாசி ராஜமும் பெற்றிருந்தாள். நானும் மோகனிடமிருந்து புதூர் நாட்டரசர் ஓவியத்தைப் பெற்றிருந்தேன். ஒரு நாள் என் உள்ளத்தைக் கவர்ந்த ஓவியம் மறைந்தது. சென்ற ஆண்டு ஆடிப் பௌர்ணமியன்று வழக்கம் போல் தாசி ராஜம் என் அண்ணுவை வஸந்த மண்ட பத்திற்கு இழுத்துச் சென்ருள். மறைந்த படமும் என்னேத் தாசி வீட்டுக்கு மந்திரி குமாரி புஷ்பாவுடன் இழுத்துச் சென்றது. எங்கள் வீட்டில் தாராளமாகப் பழகிய தாசி இந்தப் படத்தை எடுத்திருக்கலாமோ என்ற சந்தேகத்தால்தான் நானும் புஷ்பாவும் தாசி வீட்டிற்குத் திருட்டுத்தனமாகச் சென்ருேம். அங்கிருந் தோரும் தாசி ராஜம் திரும்பவும் வந்துவிட்டாளென்றே எண்ணும்படி கபட நாடகம் ஆடினேம். நாங்கள் அங்கு சென்றதும் புதூர் நாட்டு மன்னரே அங்கு வரக் கண்டோம். ஆனல் அவர் வந்தது தாசி ராஜத்தைக் காண. அவர் என்னேக் கண்டும் தாசி ராஜத்தைக்கண்ட தாகவே எண்ணிக் காதலுரையாடலானுர். அவர் என் னேத்தாசி ரர்ஜம் என்று உறுதி கொள்ளவும் காரணமில்

லாமலில்லை. நான் தாசி வீட்டில் இருந்ததோடு, தாசி ராஜம் அவருக்கு என் படத்தையே தன் படமென்று அனுப்பியிருந்ததே முக்கிய காரணமாகும். அவர் பேச்சி லிருந்து, தாசி முதலில் அவருக்கு ஆசைக்கடிதம் எழுதி, அது பயனற்றுப் போகவே, என் படத்தை அவருக்குத் தன் படமென அனுப்பியதாகத் தெரிய வந்தது. முதலில் நான் புதூர் மன்னரைத் தாசி லோலராக வந்தாரே என்று வெறுக்க நேர்ந்தாலும் என்னுடைய படத்தில் தனது மனம் பறிகொடுத்து ஓடி வந்திருப்பதைக் கண்டும், நான் ஏற்கெனவே அவருக்கு என் மனதை அர்ப்பணம் செய்து விட்டதாலும் உளமார அவரை ஏற்கத் துணிந்தேன். உண்மையை அறியாத புதூர் மன்னவனும் என்னைத்தாசியென்றே நம்பிப் பழகினார், ஆனால் தாசியைக்கூடத்தாராளமாக ஏற்கும்முறையில். மிக அவசர அலுவல்களினால் உடனே புறப்பட்டவர் அடுத்த பௌர்ணமியன்று அதே இடத்தில் என்னைச் சந்திப்பதாகச் சொல்லிப் புறப்பட்டார். அடுத்த பௌர்ணமிதினமும் வந்தது. அவரும் வந்தார். எங்களுக்குத் துணையாகப் புஷ்பாவும் மோகனும் தோட்டத்தில் வந்திருக்க, நான் என் துணைவனைக் கண்டு உளம் துளிர்த்து அவர் அணைப்பில் மெய்மறந்திருந்தேன். அதேநிலையில் திடீரென்று தோன்றினர் என் அண்ணாவும் ராஜமும். நான் வாயடைத்து நின்றேன். தன் கண்களையும் ராஜத்தையும் நம்பிய என் அண்ணா என் காதலரை அந்தத் தாசி வீட்டிலேயே சிறைவைத்தார். நான் மாளிகைக்கு அனுப்பப்பட்டேன். அன்றிலிருந்து இன்றுவரை உண்மையை உளத்தில் அடக்கி வெம்பி வாடுகின்றேன். இன்று நடந்ததை உரைக்கச் சந்தர்ப்பம் கிட்டியதால், சபைக்கு நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். ஆனால் நான் சொன்னதை நிரூபிக்கப் புஷ்பாவோ, மோகனனோ, அல்லது என் மனதைக் கொள்ளை கொண்ட புதூர் மன்னரோ இப்பொழுது இங்கில்லை.

**ரமணி:** இளவரசி, அமருங்கள். புதூர்நாட்டு மன்னர் சாட்சியம் இதோ என் கையில் இருக்கின்றது. அதை வாசித்தபின் புஷ்பாவையும் மோகனரையும் விசாரிக்கின்றோம். மறைந்த ராஜத்தின் சாட்சியம் மிகவும் முக்கியமாகின்றது.

## காட்சி 5

காலம்: **காலை** இடம்: **அந்தப்புர அலங்கார அறை**

*[ராஜம் மணப்பெண் அலங்காரத்துடன் நிலைக்கண்ணாடி முன்பு அழகு பார்த்து நிற்பது.]*

**ராஜம்:** அடி என்னடி வாயடைத்து நிற்கின்றாய். எனக்கு இந்த அலங்காரம் முற்றிலும் பொருத்தமாக இல்லை.

**தாதி:** தேவி, அழகுக்கு அழகு செய்தால் எப்படி இருக்கும்?

**ராஜம்:** ஓகோ, உன்னுடைய கேள்வியை நான் வேறொருவரிடம் கேட்டுப் பதில் தெரிந்துகொள்ள வேண்டுமா. என்ன மமதை.

**தாதி:** தேவி, நான் அதிகப் பிரசங்கித்தனமாக உளறி இருந்தால் மன்னிக்கவேண்டும். தங்களுடைய இயற்கை அழகு தற்சமயம் தாங்கள் செய்துகொண்ட செயற்கை அழகால் பன்மடங்கு பெருகிப் பிரகாசிக்கத் தொடங்கி விட்டது.

**ராஜம்:** என்னை இப்பொழுது யார் கண்டாலும், நான் ராணியா இல்லையா என்ற சந்தேகம் உதிக்க இடமே இருக்காதல்லவா?

**தாதி:** என்னம்மா, விளையாடுகின்றீர்களா.

**ராஜம் :** இல்லையடி விளையாட்டில்லை, ஒரு பாட்டுத்தான் பாடப் போகின்றேன். கேளடி என் இன்பத்தை. சரி. என்னைப்பார், நான் எப்படி இருக்கின்றேன்.

**தாதி :** அழகே உருவெடுத்து வந்தால் எப்படி இருக்குமோ........

**ராஜம் :** போடி பைத்தியம், என் இன்பத்தைக் கேட்டால் என் அழகுக்குப் போய்விட்டாள். உச்சிவானிலே பறக்கும் உல்லாச மைனைப்போலே இன்ப வானிலே பறக்கின்றேனடி. தெரியவில்லையா. நான் பாடுகின்றேன். அந்தப் பாட்டிலிருந்தாவது என்னுடைய இன்பத்தைப் புரிந்துகொள்.

பல்லவி

**நானே பாக்கியசாலி—நாதனடைந்து**
**நாடாளப் போகும்**

அ. ப.

**வானே விளைந்துள்ள கூடம்**
**உயர் மாளிகையை உரிமையாக்கிக் கொள்ளும்**
**—(நானே)**

சரணம்

**மானே என்றவர் கொஞ்ச—நான்**
**மருண்டு மருண்டு விளையாட**
**தேனே என்றவர் சொக்க—நான்**
**தேவியாக, பாரும் பார்த்துப் புகழ்ந்திட —(நானே)**

*[ஒரு சேவகன் ஓடிவந்து அவசர லிகிதத்தைக் கொடுக்கின்ருன். ராஜம் படித்து மலைத்து நிற்க, அரசர் சேகரும் வந்து சேர்கின்ருர்.]*

**ராஜம் :** அரசே, இதென்ன அநியாயம்! புதூர் நாட்டு அரசிலிருந்து அவசரக் கட்டளை. அதுவும் இன்னும் சற்று நேரத்தில் புதூர் நாட்டரசியாகும் எனக்கே.

*(அரசர் அவள் கையிலிருக்கும் லிகிதத்தைப் பார்த்துவிட்டு)*

**சேகரர் :** வஸந்தா, தாமதிக்க வேண்டாம். உடனே நீதி மன்றத்திற்குச் சென்றுவிடு.

**ராஜம் :** (திடுக்கிட்டு) நீதி மன்றத்திற்கா. எதற்காக அரசே? ஒரு பாபமும் அறியாத தங்கள் வாழ்க்கைத் துணைவியாகப் போகும் எனக்கா இந்த சோதனை, புதூர் நாட்டு மகுடாதிபதியின் மணப் பெண்ணுக்கா கல்யாண தினத்தில் இக் கடுஞ்சோதனை. ஆனால் அரசே, தாங்களிருக்க தங்கள் தங்கை எப்படி நீதிபதி யானாள், இது யார் விஷயமாக விசாரணை. எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!

**சேகரர் :** வீணில் பேசிக் காலம் கடத்தவேண்டாம். அந்த ரங்க சபையில் நடப்பதைப்பற்றி நானும் உனக்கு ஒன்றும் சொல்லமுடியாது. ஆனால் ஒன்றுமட்டும் நான் சொல்லமுடியும். இப்போது புதூர் நாட்டு மன்னன் நானல்ல. இந்த நாட்டின் செங்கோலை என் தங்கை ஏற்று நீதிபதியாக விளங்குகின்றாள்.

**ரமணி :** அந்த நீதி சபையில் எனக்கென்ன வேலை அரசே?

**சேகரர் :** அதுதான் எனக்கும் தெரியவில்லை. ஆனால் இனி ஒருக்கணமும் தாமதிக்க வேண்டாம். இப்படி தாம திப்பதால் நீ மட்டுமன்றி நானும் மன்னிக்க முடியாத குற்றத்தையே புரிகின்றோம். நீ இதே கோலத்தில் ஒருகணமும் தாமதிக்காமல் உடனே சென்றுவிடு. நீதிசபைக் காவலர்களும் வந்துவிட்டனர். காவலர் காள், உங்கள் கடமையைச் செய்யுங்கள். வஸந்தாவை

ஒருகணமும் தாமதிக்கவிடாது, உடனே அந்தரங்க நீதி மன்றத்திற்கு அழைத்துச் சென்றுவிடுங்கள்,

*[ராஜம் காவலர்களோடு செல்கின்றுள்]*

## காட்சி 6

காலம்: **காலை** இடம்: **நீதிமன்றக் காட்சி**

*[புஷ்பா விசாரணை மேடையில் நிற்பது]*

**ரமணி:** புஷ்பா, நீங்கள் உரைத்தது போதும் அமருங்கள். இப்பொழுது மோகனை அழைத்து வாருங்கள்.

*[மோகன் கைதி உடையுடன் வருதல். எல்லோரையும் ஆவலுடன் பார்த்து, விசாரணை மேடைக்குச் செல்வது.]*

**மோகன்:** புதூர் நாட்டு ரமணி தேவிக்கு எனது வணக்கம். பைத்தியமென்று முடிவுகட்டப்பட்டு அந்தரங்கச் சிறையில் அவதிப்பட்ட என்னை இங்கு திடீரென்று அழைத்து வந்தீர்கள். இங்கு நான் காண்பது சுவர்க்கமா, வீண் கனவா? இந்த இன்பமான திருநாளை ஒருநாள் காண்பேனே என்றல்லவா நான் பலநாள் சிறையில் ஏங்கிக் கிடந்தேன். கடவுள் எனக்குக் கொடுத்த கைத்திறன் பலரை ஒருவருக்கொருவர் காந்தமாக இழுக்கவும் செய்தது. பிரித்துவைக்கவும் செய்தது. பரிதவிக்கவும் செய்தது. நான் சொல்லவேண்டியது......

**ரமணி:** நீரும் புஷ்பாவும் பேரூரைவிட்டுச் சென்றதிலிருந்து ஆரம்பிக்கலாம்.

**மோகன்:** புதூர் மன்னர் தாசி வீட்டில் அடைபட்டதும். வசந்தாதேவி அரண்மனைக்கு அனுப்பப்பட்டதும் கண்ட நாங்கள் தோட்டத்திலிருந்தே புதூருக்கு அன்

றிரவே கிளம்பிவிட்டோம். புதூரில் என் இல்லத்திற்கு ஓடி வந்தோம். பேரூரில் சிறைப்பட்ட புதூர் மன்னவர் புதூருக்கு நாங்கள் வந்து சேருவதற்கு முன்பாகவே வந்துவிட்டதைக் கண்டு பேராச்சரியம் கொண்ட நான் அவரைக்காண ஓடினேன். அவர் என்னைக் கண்டவுடன் 'வஸந்தாவின் ஓவியம் வரைய சமயத்தில் வந்தாய்' என்று என்னை அந்தப்புரத்திற்கு அனுப்பினார். வஸந்தா தேவி தான் வந்துவிட்டதாகக் கருதிய நான் மட்டற்ற மகிழ்ச்சியோடு அந்தப்புரத்திற்கு ஆவலோடு ஓடிப் பார்க்கத் தாசியைக் கண்டு அசிர்ச்சியுற்றேன். அரசரும் என் பின்னால் வருவதைக் கண்டு மோசத்தை விளக்க எண்ணி வாய்விட்டலறினேன். அந்த அலறலும் அதை விளக்கிய ராஜத்தின் சாதுர்யமும் என்னைப் பைத்தியம் என்று அரசர் முடிவுகட்டவும் செய்தது.

**ரமணி:** மோகன் உங்களை ஏன் பேரூரரசர் அரசாங்கப் பதவியினின்றும் நீக்கினார்?

**மோகன்:** அதையும் சொல்கின்றேன். ஆனால் அது ஒரு வெட்கக்கேடான விஷயம். அதற்கும் காரணம் என் கலையேதான். தாசி உருவை ஓவியமாக வரையப் பேரூர் அரசர் என்னை அவளிடம் அனுப்பினார். ஆனால் அவள் எனக்குத் தன் வடிவைப் பொறிக்க உதவ முன்வராது தன் காமவலைகளை வீச ஆரம்பித்தாள். ஒருநாள் நிலைமை மோசமானது. என்னை இறுக அணைய வந்த காமாந்தகாரி வேசியை நான் உதறித்தள்ளி ஓட, அவள் அரசரிடம் நடந்ததை முற்றிலும் மாற்றி அவர் துவேஷத்தைக் கிளப்பினாள். வேசி வார்த்தைகளை நம்பி நான் நடத்தை கெட்டவன் என்ற முடிவுக்கு அரசர் வந்தார். நான் அரசாங்கப் பதவிக்கும் அருகதையற்ற வன் என்று அப்பதவியினின்றும் பிரிக்கப்பட்டேன்.

*[ராஜம் சபைக்குள் மணக்கோலத்தில் வருகின்றாள். அவளும் சபையிலுள்ளோர்களும் ஒரு*

***வரையொருவர் பார்த்து ஆச்சரியப்படுகின்றனர். இந்த ஆச்சரியத்தில் பின்னால் சபை வாயிலில் வந்து நிற்கும் சேகரைக்கூட ஒருவரும் கவனிக்கவில்லை.]***

இதோ வருகின்றாள் வஞ்சகத்தின் உரு திருமணக் கோலத்தில். அன்று தாசியாக இருந்தவள் இன்று ராணியாகத் திகழ்கின்றாள். பெயரும் மாறிவிட்டாள். கபடத்திலும் சூழ்ச்சியிலும் இவளுக்கிணை இவளே. என்ன ஆச்சரியம்! என்னுடைய கைத்திறன் அழகைத் தீட்டி அன்புள்ளத்தினரை ஒன்றுகூட்டி வைத்தது. ஆனால் இவளுடைய ஜாலமும் வித்தையும் உண்மையை மறைத்துவிட்டது. உலகத்தைப் பிரமிக்க வைத்தது. பொய்யை மெய்யாக்கினாள். மெய்யைப் பொய்யாக்கினாள். இளவரசியைத் தாசியாக்கினாள். தாசியை இளவரசியாக்கினாள். தாசியான தன்னைப் பத்தினியாக்கினாள். புத்தியோடிருக்கும் என்னைப் பைத்தியமாக்கினாள்.

***[புதூர் மன்னர் சபைக்குள் வருகின்றார்.]***

இதோ, புதூர் மன்னரே வந்துவிட்டார். நான் பைத்தியமல்ல என்பதை இப்போதாகிலும் உணர்ந்துவிடுவார். அரசே, போலி வஸந்தாவான தாசி ராஜம் கூண்டில் அடைபட்டுத் திறுதிறுவென்று விழிப்பதைக் காணுங்கள், அதோ உங்கள் உயிருக்குயிரான உண்மை வஸந்தா உங்களைக் கண்டு உயிர்தழைப்பதைக் காணுங்கள்.

***[புதூர் மன்னர் வஸந்தாவிடம் விரைந்து செல்ல, வஸந்தா கண்ணீர்மல்கி அவர் அணைப்பில் மெய்மறந்து நிற்கின்றாள்.]***

அரசே, அன்புக்குக் குறைவில்லாத தடாகத்தில் தோன்றிய வஸந்தா தாமரை தங்கள் ஒளியால் மணம்

பெற்று மகிழ்ந்திருந்தது. திடீரென்று ஏற்பட்ட எதிர் பாராத சூழ்ச்சியால் அத்தாமரை தங்கிய தடாகத்தில் அன்பாகிய தண்ணீரும் வற்ற, அவர் அண்ணாவின் அன்பும் மறைந்தது. தங்கள் சூரிய ஒளியும் திடீரென்று மறையத் தாமரை வாட்டமுற்றது. இன்று தாமரைத் தடாகத்திலும் அன்பெனும் பேரூற்றுக்குக்குறைவிருக்க இடமில்லை. தாங்கள் சூரிய ஒளிக்கும் குறைவில்லை. சோர்வுற்றிருந்த செந்தாமரை இன்று கோடி சூரியப் பிரகாசத்துடன் மலர்ந்து மகிழ்கின்றது.

**[ இவைகளைக் கண்டு திடுக்குற்றிருந்த ராஜம் பேரிரைச்சல் எழுப்பி வாய்விட்டுச் சிரிக் கின்ருள் ]**

இடி முழக்கம் செய்து வாய்விட்டுச் சிரிக்கும் வேசியே, இனிமேலும் உன்னால் என்னையும் எல்லோரை யும் பைத்தியமாக்க முடியும் என்ற நம்பிக்கையா ?

**ரமணி :** இவ்வளவு நாளும் எங்களை இருட்டில் இடர வைத்த தாசியே, உண்மையின் வெற்றியை இன்று கண்டு கொண்டாயா. நீ சாட்சியாக மட்டும் இங்கு வரவழைக்கப்படவில்லை. மாபெருங் குற்றங்கள் செய்த படுமோசக்காரி என்றே இழுத்து வரப்பட்டிருக் கின்ருய்.

(i) உத்தம சீலரான ஓவியக்காரர் மோகனை நீ உன் காமத்துக்குப் பலியாக்க முயல, முயற்சியில் தோல்வியுற்று, நடந்ததை முற்றிலும் மாற்றி, மோகனே உன்னைப் பலவந்தப்படுத்தி அணைய வந்தார் என்று பொய் சொல்லி அவர் பதவியைப் பிடுங்கினய்.

(ii) பேரூரில் வசந்தா அறையிலிருந்து வசந்தா படத்தையும் வசந்தாவின் புதூர் மன்னர் படத்தையும் திருடினய்.

(iii) திருடிய வசந்தா படத்தை உன் படமென்று பேரூர் மன்னருக்கு அனுப்பி அவரை ஏமாற்றினாய்.

(iv) பேரூர் இளவரசி தாசித்தொழில் தனது காம வேட்கையால் கைக்கொண்டாள் என்று அபாண்ட பழி சுமத்தி, பேரூர் இளவரசி தன் காதலர் புதூர் மன்னரிடம் ஒன்றி இருந்த சமயத்தை உபயோகப்படுத்தி, பேரூரரசன் மனத்தைக் கலக்கினாய், பேரூர் இளவரசி மனதை வெம்பவிட்டாய், புதூர் மன்னரையும் சிறைப் படுத்தி, உன் வசமாக்க முனைந்தாய்.

(v) தாசியாகப் பிறந்த நீ புதூர் மன்னரிடம் நீயே பேரூரரசரின் தங்கை வசந்தா என்று சொல்லி அவரைச் சிறையினின்றும் தப்பச் சூழ்ச்சி செய்து அவர் உன்னை இன்று கல்யாணம் செய்து கொள்ளவும் சதி செய்தாய். என்ன சொல்கின்றாய் இக்குற்றங்களுக்கு?

**ராஜம்:** ***(விழிகளை உருட்டி உரத்த குரலில்)*** என்னை விசாரிக்கின்றீர்களா? விசாரியுங்கள்! உண்மையைக் கண்டு கொள்கிறீர்களா? கண்டு கொள்ளுங்கள்! ஹஹ்ஹா ***(சிரிக்கின்றாள்)*** ஐயோ, நானா, வசந்தா தேவியா இங்கு நிற்கின்றேன். எனது பிராணநாதர், புதூர் மன்னவர் என்னை ஏற்கவில்லையா? எனது மணக்கோலமா உங்களை நகைக்கச் செய்கின்றது? சிரியுங்கள். நன்றாகச் சிரியுங்கள். நான் உங்கள் ராணி இல்லையென்று சிரிக்கின்றீர்களா? பின்னே அழுங்கள், நான் உங்கள் ராணியாகப் போகின்றேன் என்று அழுங்கள். நான்தான் வெற்றி பெற்றேன். இல்லை. இல்லை. நீங்கள்தான் வெற்றி பெற்றீர்கள். இல்லை. இல்லை. நாமெல்லோரும் வெற்றி பெற்றோம். ***(ரமணி தேவியைப் பார்த்து)*** அடி நாசக்காரி, நீயா இந்த நாட்டின் நீதிபதி, ஒரு சுண்டெலிக்குச் சக்ராதிபதி பீடம். ஹஹ்ஹா! என்னைப் பார். இந்த சிங்கத்தைப்பார் ***(மீசையை முருக்கி விடுவது***

போல் செய்கின்ருள்) தாசியாகப் பிறந்தேன். இரண்டு சாம்ராஜ்யங்களையே ஆட்டிவைத்தேன். வேஷம் பூண்டேன். வேஷத்தால் வெற்றி நாட்டினேன். உண்மையையே குழிவெட்டிப் புதைத்தேன். நீயோ உண்மையைத் தோண்டி எடுக்க நாட்டின் நீதிபதியானய். உனக்கென்னடி தெரியும் உலக அனுபவம். என்னைக் கேள். நான் சொல்கிறேன். உனக்கென்னடி தெரியும் ஆடவரின் மனநிலை. என்னைக்கேள் நான் சொல்லுகிறேன். சேவகன், கலைஞன், மன்னர்பிரான்—இவர்கள் அனைவரும் இந்தக் காலடிகளின் அடிமை. எனது காலடித் தூசியை நீ அணிந்திருக்கும் மகுடமே முத்தமிட்டிருக்கின்றது. இல்லை இல்லை. நான் சொன்னது யாவும் பொய். ராஜத்தைப் பற்றியல்லவா இப்படி உரைத்து விட்டேன். நான் ராஜமல்லவே. தாசி ராஜம் இறந்து ஆறு மாதங்கள் ஆகின்றன. என்று வசந்தாவைத் தாசி வீட்டில் புதூர் மன்னரோடு கண்டுபிடித்துக் கொடுத்தேனே அன்றே ஒழிந்து விட்டாளே தாசி ராஜம். அன்றிலிருந்துதான் ஒரு வசந்தா இரு உருவானள். பேரூரில் ஒரு வசந்தா: புதூரில் மற்ருெரு வசந்தா. சோதரனுடன் சோகமுற்றிருந்தாள் ஒரு வசந்தா: தன் நாயகனேடு புதூர் மன்னவரிடம் சுகம் பெற்றிருந்தாள் மற்ருெரு வசந்தா. ஒருத்தி வாடப் பிறந்தவள்: மற்ருெருத்தி வாழப்பிறந்தவள். நானே வாழப்பிறந்தவள். அடி, பேரூர் நாட்டு வசந்தா! ஊமைக்கோட்டான் மாதிரி உட்கார்ந்திருப்பதைப்பார். என்ன, யாரைப் பார்க்கின்ருய். (**ஒரு சேவகனைப் பார்த்து**) ஐயோ, என்னை விடுங்கள். அவள் என் மணளரைப் பார்க்கின்ருள். என் ஆசைக் கிளி மோகனைப் பார்க்கின்ருள். என்னை மணக்க இருக்கும் புதூர் நாட்டு மாணிக்கத்தைப் பார்க்கின்ருள். நான இவர்களை விடுபவள் (***ஓடப்பார்ப்பவளை சேவகர் பிடித்து நிறுத்துகின்றனர்***), ஓகோ, என்னை விடமாட்டீர்களா, நான் யார் தெரியுமா

இந்த நாட்டின் அரசி ஆகவே நான்தான் இந்தச் சபைக்குச் சரியான நீதிபதி. இதோ நானே நியாயம் வழங்குகின்றேன். உங்களையெல்லாம் குழி வெட்டிப் புதைத்துவிட வேண்டியது. இல்லை இல்லை. உங்களை யெல்லாம் உற்சாகப்படுத்த நான் புதுப்பிறவி எடுத்து விட்டேன். நான் பைத்தியக்காரி. இல்லை இல்லை. நீதான் பைத்தியக்காரி. இல்லை இல்லை. நீங்கள்தான் பைத்தியங்கள். இந்த உலகமே பைத்தியமாகிவிட்டது பைத்தியம், பைத்தியம்.

*(உரக்கக்கத்தி மூர்ச்சையாகின்றாள்)*

**ரமணி:** உலகிற்கும் தனக்கும் இப்பொழுது ஒற்றுமை இல்லை என்பதைத் தாசிப் பைத்தியமே தன் பிதற்றலால் நிரூபித்துவிட்டது. அவள் செய்த பழிகாரச் செயல் களுக்கு ஆண்டவனே தக்க தண்டனை விதித்துவிட்டார். அவளை மீளாச் சிறைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

*[ராஜம் மூர்ச்சை தெளிய அழைத்துச் செல்லப் படுகிறாள்]*

இதில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் ஒவ் வொரு விதமான சதியிலும் குற்றத்திலும் பங்கெடுத் திருப்பதால் அவர்களையும் நான் தண்டிக்காமலிருக்க முடியவில்லை.

*[சபையில் யாவரும் ஆச்சரியமாகப் பார்த்தல்]*

**ரமணி :** *(புன்னகையோடு)* தாசிக்காவது மீளாச் சிறையில் வாசம். வஸந்தாவுக்குத் தண்டனை அவள் ஆயுள் பூராவும் அடிமையாகக் காலங் கழிப்பதே. அதாவது அவளைத் தேடிவந்த துணைவரான புதூர் அரசருக்கு வாழ்க்கைத் துணைவியாகி அவர் காதலுக்கு அடிமையாக வேண்டியது. அப்படி அடிமையாவதும் இந்த சுபதினத் திலேயே. இதில் சாட்சியாக வந்த மோகன் செய்த

குற்றம் யாவரும் எளிதில் மறக்க முடியாதது. மோகனனே தாசியின் செய்கைகளுக்குக் காரணம். அவர் வரைந்த சித்திரங்களல்லவா இவ்வளவு அற்புதத்தைச் செய்தன. இரு காதலர் இதயம் நிறைந்தனர். புஷ்பாவின் மனத்தையும் கொள்ளை கொண்டார். அவளோடும் ஊரைவிட்டே மறைந்தார். இக் குற்றங்களுக்காக அவரும் தன் வாழ்நாள் பூராவும் இருவருக்கு அடிமையாக வேண்டும். தன் இன்பத்திற்கும் மற்றவர் இன்பத்திற்கும் காரணமாகும் அவர் ஓவியக் கலைக்கு அவர் ஆயுள்வரை அடிமை. அதேபோல் அவரை இப்பணியில் ஊக்குவித்த புஷ்பாவின் காதலுக்கும் என்றும் அடிமையாக வேண்டும். நான் இந்த மகுடத்தை என் அண்ணரிடம் சேர்க்கவேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. இச்சபையில் மாபெருங் குற்றம்புரிந்தும் ஒன்றும் தெரியாதவர்போல் குறுகுறுவென்று விழிக்கும் அந்த ஒரு முழம் தாடிக் கிழவரைப் பாருங்கள். அவர் வேடமிட்டு இங்கிருப்பவரை ஏய்க்கப் பார்க்கின்றார். அவருக்குத் தண்டனை அவர் வேடத்தைக் கலைத்து உண்மை வடிவாகி, அவர் சொல்லிக்கொள்ள வேண்டிய தேதாகிலும் இருந்தால் நீதிசபையில் சொல்லிக் கொள்ள வேண்டியது. என் அண்ணர் இவருக்கும் எனக்கும் அளிக்க வேண்டிய தண்டனைக்கும் தயாராகிக் கொள்கிறோம்.

*[எழுந்து தன் பீடத்தையும் மகுடத்தையும் புதூர் மன்னரிடம் கொடுத்து, நேரே வசந்தாவிடம் சென்று ஆசையோடு ஆலிங்கனம் செய்ய, தாடியைக் களைந்த பேரூரரசரும் வசந்தாவின் கரத்தையும், ரமணி கரத்தையும் ஏற்று உவகை பொங்கி இருத்தல். மற்றோரிடத்தில் மோகன் கரத்தையும் புஷ்பா கரத்தையும் பிடித்து மந்திரி மகிழ்ந்திருத்தல்]*

**சேகரர்:** பேரூர் நாட்டு மன்னவா, தாங்கள் உரைப்பதற்கேதும் உண்டோ?

**குமரர்:** அரசே, வணக்கம். சரித்திரம் காணாத புதுமைகளை நான் இன்று இந்த நீதிசபையில் கண்டு கொண்டேன். இதற்கெல்லாம் காரணம் மோகனனின் ஓவியம் செய்த வேலை என்பதில் ஐயமுண்டோ. இவரின் கைத்திறன் இரு சாம்ராஜ்யங்களை இணைத்து விட்டது. இரு காதல் தம்பதிகளைத் தயார் செய்து விட்டது. நான் இப்போது சொல்லிக் கொள்ள வேண்டியது என்னையும் தங்கள் தங்கையையும் பற்றியதே. ஒரு நாள் மோகன் என்னிடம் ரமணிதேவிப் படத்தைத் தங்கள் ஊரிலிருந்து வந்தவுடன் தந்தார். அவர் தந்தது என் கண்களுக்கு விருந்துமட்டுமல்ல. என் உள்ளத்திற்கு இன்பமும் என் வாழ்க்கைக்குக் காதலியும் தந்தார். படத்தைக் கண்டு அனுபவித்து வந்த நான் ஒரு நாள் என் மந்திரி வீட்டில் படத்தினுரு உயிர் பெற்று வந்ததைப்போல் ஒருத்தியைக் கண்டேன். அவளும் என்னோடு குறும்பாகவே பேசிப்பழகினாள். அந்தப்பெண்ணே இப்போது நீதி வழங்கிய தங்கள் தங்கையாகவும் கண்டேன். என் மனதில் கொலுவிருப்பவளும் அவளே என்றும் தெரிந்து கொண்டேன். இனிமேல் தங்கள் தயவைத்தான் எதிர் நோக்குகின்றேன்.

**சேகரர்:** ரமணிதேவி, நீ சொல்லிக் கொள்ள விரும்புவது ஏதேனும் உண்டா? உன்போல் ஒருத்தி மந்திரி வீட்டுக்குச் செல்லக் காரணம்?

**ரமணி:** அண்ணா, நானும் குற்றம் புரிந்திருக்கின்றேன். ஆனால் எல்லாம் உண்மையைக் கண்டு பிடிக்கவே யாகும். தங்களிடம் தலயாத்திரை என்று பொய் சொல்லிப் பேரூருக்குச் சென்று மந்திரி வீட்டில் ரமாமணி நாமத்தோடு பேரூர் மன்னரை எதிர்பாராத விதமாகக்கண்டேன். அவர் அங்கு அன்போடு என் குறும்புத்

தனத்தை மெச்சி அளித்த பரிசான இந்த முத்தாரத்தையும் பெற்றேன். இன்று வெளியான இவ்வளவு உண்மைகளையும் அறிந்து கொள்ளவே நான் அங்கு சென்றது. இவைகளை அறிந்தபின் இந்த விசாரணையை இங்கு நடத்த மந்திரியாரிடமும் ஏற்பாடு செய்து வந்தேன். இதற்கெல்லாம் உறுதுணை புரிந்த மோகன் வரைந்துள்ள இப்படத் தொகுதிகளைக் காணுங்கள்.

*[நீதிபதியிடம் படத் தொகுதிகளைக் கொடுக்கின்ருள்]*

நான் குற்றவாளியானல் தாங்கள் விதிக்கும் எந்தத் தண்டனைக்கும் தயார்.

**சேகரர்:** பேரூர் மன்னவா, ரமணிதேவி, நீங்கள் இருவரும் ஒரேவிதக் குற்றத்தைத்தான் புரிந்திருக்கின்றீர்கள். நீ அவரிடமிருந்து கவர்ந்திருப்பது ஒன்று. அவரும் உன்னிடமிருந்து கவர்ந்திருப்பது ஒன்று. உங்கள் ஒன்றுபட்ட மனத்தையல்லவா ஒருவனிடம் மற்ருெருவர் பறிகொடுத்து விட்டீர்கள். ஆகவே நீங்கள் இருவரும் ஒரேவித தண்டனைக் குள்ளாக வேண்டியவர்கள். ஒரே இடத்தில் தண்டனையை அனுபவிக்க வேண்டியவர்கள். ரமணிதேவி, உன்னுடைய வாழ்க்கையைப் போக்கப் பேரூர் மதுர மாளிகையே உனக்கேற்ற சிறைக்கூடமென்று தீர்ப்பளிக்கின்றேன்.

*[சேகரர் நீதி மேடையிலிருந்து கீழிறங்க எல்லோரும் நெருங்கி அளவளாவுகின்றனர்.]*

**குமரர்:** புதூர் மன்னவா, தாங்கள் உண்மையிலேயே எங்களைச் சேர்த்து ஒரு சிறைக்கூடத்திற்கு அனுப்பினும் அவள் என் கூட இருக்கும்போது சிறையும் எனக்குச் சுவர்க்கமாகிவிடும்.

**சேகரர்:** அதையேதான் நானும் சொல்ல நினைத்தேன். உங்கள் தங்கையோடிருக்கும் எந்தப் பாலைவனமும் எனக்குப் பாங்கான சோலையாகவல்லவா பரிமளிக்கும்.

**ரமணி:** இது என்ன வேடிக்கை. ஒருவர் சிறைகூடத்திற்குத் தயாராகின்றார். மற்றொருவர் பாலைவனத்திற்குப் பயணம் கட்டுகின்றார். புஷ்பா, நீயும் மோஹன் அவரிடமிருந்து இதுபோல் பூரிப்பு மொழிகளை எதிர்பார்த்து ஏமாற்றமுற்றாயா? எங்கள் காதலர்கள் தங்கள் காதலிகளைக் கண்டு அவர்கள் கண்ட சுவர்க்கத்தையும் கண்டு சுவை மொழி சொல்லாமலிருக்க முடியவில்லை. ஆனால் உனது காதலர் சுவை மொழியால் மட்டும் தான் கண்ட சுவர்க்கத்தைக் காட்ட இஷ்டப்படவில்லை. அவர் அதை ஒரு அழகுப் படமாகப் பொழிந்துவிடுவார்.

**மோகன்:** தேவி, நான் இந்தக் கண்கொள்ளாக் காட்சிகளைக் கண்டு வாயடைத்து நிற்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. நான் சுவர்க்கத்தில் இருப்பதால்தான் என்ன சொல்வதென்று அறியாமல் திகைத்து இறும்பூதெய்துகின்றேன். இன்பமும் நானும் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையில் நான் சொல்வதெற்கென்ன இருக்கின்றது.

**ரமணி:** இந்தச் சுவர்க்கத்தைக் காணவல்லவா மக்கள் திருக்கல்யாண மண்டபத்தில் காத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கும் இந்த சுவர்க்க இன்பத்தில் உரிய பங்கைக் கொடுத்துதவுவோம்.

**மதிசீலர்:** மோகன், ஒரு வார்த்தை, என்னை மன்னிக்க வேண்டும்.

**மோகன்:** மாமா, நான் அல்லவா புதூருக்குப் புஷ்பாவுடன் ஓடிவிட்டதற்குத் தங்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்.

**மதிசீலர்:** உன்னுடைய குணத்தை அறிந்தும் உன் திறனை நான் சரியாக மதிக்கவில்லை. சிற்றன்ன வாசலிலும், தஞ்சையிலும், அஜந்தாவிலும் அழியாத சித்திரங்களைப் பிறப்பித்த அற்புத ஓவியச் சக்கிரவர்த்திகளையும் மிஞ்சிவிட்டாய். அவர்கள் செய்த வேலை இன்றும் கலைஞர்களுக்குப் பரவச மூட்டும் சுவர்க்க பூமியாகி மங்காத மாட்சியோடு மிளிர்கின்றது. முன்னால் மன்னர்களை மகிழ்வித்ததோடு நில்லாமல் இன்றும் என்றும் உலகக் கலைஞர்களுக்கே தமிழ் நாட்டின் விருந்தாக பரிமளிக்கின்றது. ஆனால் நீ செய்த ஓவியத்தின் வேலை களங்கமில்லாத உள்ளத்தில் காதலை நிரப்பியது. இரு நாடுகளை இணைத்துவிட்டது. நாம் எல்லோரையுமே கூட்டிவிட்டது. இந்த அற்புத நிகழ்ச்சிகளுக்கு விதை விதைத்த தோடல்ல, அவைகள் ஒரு உன்னதமான சிகர மடைந்து நாடகச் சிறப்படையவும் அல்லவா செய்துவிட்டது உன் ஓவியம் செய்த வேலை.



# பிழை திருத்தம்

| பக்கம் | வரிகள் | உள்ளது | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 12 | தனித் | தனிச் |
| 13 | 24 | புஷபா | புஷ்பா |
| 14 | 3 | வருவாரேத் | வருவாரே |
| 26 | 15 | தங்ஜ | தந்த |
| 41 | 10 | பஸ்தாரி | பகுதாரி |
| 54 | 25 | இன்ப்த் | இன்பத் |
| 64 | 24 | கண்ணபர் | கண்ணப்பர் |
| 81 | 15 | எனறு | என்று |
| 83 | 30 | புஷபா | புஷ்பா |
| 86 | 8 | ஏமர்ற்ற | ஏமாற்ற |
| 87 | 15 | சிறப்படைடவும் | சிறப்படையவும் |